www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை

# புதிய பூமி

පුදිය පූමි

Puthiya Poomi

சுற்று 12 | ஓகஸ்ற் 2005 | பக்கம்12 | விலை 12/- | சுழற்சி 82





## பேரினவாத வெறித்தனத்தால் பொதுக்கட்டமைப்பு முடக்கம்

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை வரலாற்றில் பௌத்த சிங்களப் பேரினவாதம் மீண்டும் ஒரு முறை தனது அசிங்கத் தனத்தையும் அகோரத்தையும் வெளிக்காட்டியுள்ளது. ஐக்கிய டுத்து பொதுக்கட்டமைப்புக்கு எதிராகப் போர்கொடி ஏந்தி நிற்கிறார்கள். அவர்கள் வீதியில் இறங்கி பொதுக்கட்டமைப்பை எதிர்த்து வருவதுடன் நிற்காது உயர் நீதிமன்றம் வரை சென்று அதனை முடக்கி விட்டதாக எக்காளமிட்டு நிற்கிறார்கள். இது எதனை எடுத்துக் காட்டுகிறது. அரசியல் நிர்வாகம் பாதுகாப்பு போன்ற துறைகளில் ஆதிக்கம் செலுத்தி வந்த பேரினவாதம் இப்போது நீதித்துறையிலும் புகுந்து மறு வாழ்வளிக்கவே பொதுக்கட்டமைப்பு வலியுறுத்தப்பட்டது. வடக்கு கிழக்கில் தமக்கென கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை நிர்வகித்து வரும் விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் நிவாரணம் புனரமைப்பு புனர்வாழ்வு என்பனவற்றுக்கான இணக்கப்பாட்டிற்கு அரசாங்கம் வருவது முற்றிலும் நியாயமானதும் ஏற்றுக் கொள்ளத் தக்கதுமாகும்.

## பின்னணியில் அமெரிக்க இந்தியக் கூட்டுச் சதி ?


கடந்த யூலை 15ம் திகதி உயர்நீதிமன்றம் சுனாமிப் பொதுக்கட்டமைப்பில் உள்ளடங்கியுள்ள நான்கு அம்சங்களுக்கு இடைக்காலத்தடை உத்தரவு பிறப்பித்தது. மேல் விசாரணை செப்ரம்பர் மாதத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மக்களின் நிவாரணம் புனரமைப்பு புனர்வாழ்வுக்காக அரசாங்கமும் புலிகள் இயக்கமும் இணங்கி ஒப்பமிட்டுக் கொண்ட பொதுக்கட்டமைப்பு நடை முறைக்கு வராதவாறு முடக்கம் பெற்றுள்ளது.

தேசியக் கட்சியாலும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியாலும் தமது ஆளும் வர்க்க அதிகாரப் போட்டிக்காக வளர்த்து வந்த பேரினவாதத்தை இப்போது ஜே. வி. பி. யும் ஜாதிக ஹெல உறுமையவும் கையிலெ கொண்டுள்ளதையே அண்மைக் காலங்களில் காண முடிகின்றது. உயிர் உடைமைகள் வீடுவாசல்கள் தொழில் ஆதாரங்கள் அனைத்தையும் இழந்து நிர்க்கதிக்குள்ளாகி நிற்கும் வடக்குகிழக்கு மக்களுக்கு இதனாலேயே மனித நேயத்தையும் சமாதானத்தையும் அரசியல் தீர்வையும் விரும்பும் அனைத்து தரப்பினரும் பொதுக்கட்டமைப்பை வரவேற்றனர்.

ஆனால் மனிதநேயத்திற்கும் அப்பால் புத்தர் போதித்த அன்பு கருணை இரக்கம் என்பனவற்றை எல்லாம் தூக்கி வீசி எறிந்து விட்டு பொதுக்கட்டமைப்பை முற்றிலும் வெறித்தனம் கொண்ட பேரினவாதப் பிரசாரமாக முன்னெடுத்து பாராளுமன்ற வாக்கு வங்கிக்கு உரிய ஒன்றாக்கியிருக்கிறார்கள். ஜே.வி.பி-ஹெல உறுமயப் பேரினவாதிகள். இவர்களது வெறித்தனத்தை நியாயப்படுத்தும் சிங்கள ஆங்கில ஊடகங்கள் புலிகளை எதிர்ப்பதாகக் காட்டிக் கொண்டு தமிழ் மக்களுக்கு

தொடர்ச்சி 12ம் பக்கம்

## ரணிலை அடுத்த ஜனாதிபதியாக்க அமெரிக்கா காய்நகர்த்த ஆரம்பித்துள்ளது



அமெரிக்க ஜனாதிபதியும் "ஜனநாயகக் காவலருமாகிய" ஜோர்ஜ் டபிள்யூ புஷ் கலந்து கொண்டு ரணில் விக்கிரமசிங்காவுடன் பேச்சுவார்த்தையும் நடாத்தியுள்ளார்.

தொடர்ச்சி 12ம் பக்கம்

அமெரிக்காவின் அதி விசுவாசியும் முன்னாள் ஜனாதிபதியுமான ஜே. ஆர் ஜெயவர்த்தனாவின் அரசியல் வாரிசு அவரது மருமகனான ரணில் விக்கிரமசிங்க. ரணிலும் தனது மாமனார் போன்று அமெரிக்க வழிகாட்டலின் வழி நடக்கும் விசுவாசியே ஆவார். ஆனால் இந்திய ஆளும் வர்க்கத்தை விரோதிக்காதவாறு தனது அமெரிக்க விசுவாசத்தை முன்னெடுப்பவர். தமிழ் முஸ்லீம் மலையகத் தமிழ்மக்களிடம் அவர்களது உயர்வர்க்க மேட்டுக் குடித் தலைமைகளின் ஊடாக யூஎன்.பி பரவாயில்லை. ரணில் மிக நல்லவர் என்ற தோற்றப்பாட்டை காட்டி வருபவர். தேசிய இனப்பிரச்சினையில் அவரது உள்ளார்ந்த பேரினவாத நிலைப்பாடு காரணமாக நழுவல், வழுவல், மௌனப் போக்கை கடைப்பிடித்து வருபவர்.

இத்தகைய ரணில் விக்கிரமசிங்க அண்மையில் அமெரிக்காவிற்கு தனது நம்பிக்கைக்கு உரியவரும் அடுத்த அமெரிக்க விசுவாசியுமான மிலிந்த மொறகொடவுடன் அரசியல் பயணத்தை மேற்கொண்டிருந்தார். அங்கு ஆசிய பசுபிக் பிராந்தியத்திற்கான ஜனநாயக சங்கத்தின் தலைவராக்கப்பட்டார். அதன் மூலம் உலக ஜனநாயக சங்கத்தின் உப தலைவருமானார். இந்த உலக ஜனநாயக சங்கம் என்பது அமெரிக்கா தலைமையிலான முதலாளித்துவ நாடுகள் சிலவற்றின் பிரதிநிதிகளைக் கொண்டதேயாகும். இந்தச் சங்கத்தின் தற்போதைய தலைவராக அவுஸ்திரேலியப் பிரதமர் ஜோன் ஹவார்ட் தெரிவாகி உள்ளார். இச் சங்கத்தின் சார்பில் வெள்ளைமாளிகையில் "ஜனநாயகமும் சுதந்திரமும்" என்ற தலைப்பில் வட்டமேசைப் பேச்சு வார்த்தை இடம் பெற்றிருக்கிறது. இதில்

## மலையகச் சிறுவன் கொழும்பில் மர்ம மரணம்

## மறு விசாரணைக்கு கோரிக்கை

அட்டன் வெலிஓயா தோட்டத்தை சேர்ந்த 11வயது லோகநாதன் என்ற சிறுவனின் மரணம் திட்டமிட்ட கொலையாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. அவரது சிறுநீரகத்தை பெற்றுக்கொள்வதற்காக செய்யப்பட்ட அறுவை சிகிச்சையின் போது அவர் இறந்திருக்கலாம் என்றும் செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

கொழும்பு ஜெம்பட்டா வீதியிலுள்ள தமிழ்ப் பெண் ஒருவரின் வீட்டில் கடந்த இரண்டுவருடங்களாக (9 வயதாக இருக்கும்போதிருந்து) வேவைக்கமார்த்தப்பிட்டுள்ளான்-





சட்டப்படி 16 வயதுக்கு மேற்பட்டவர்களையே வேலைக்கமர்த்த முடியும்- 16 வயதுக்கு குறைந்தோரை வேலைக்கு அமர்த்துபவர் மட்டுமன்றி வேலைக்கமர்த்தப்படும் 16 வயதுக்கு குறைவான சிறுவர் சிறுமியர்களின் பெற்றோர்களும் குற்றவாளிகளாவர். ஆனால் நடைமுறையில் பல வழிகளில் 16 வயதுக்கு குறைந்த சிறுவர் சிறுமியர் வேலைக்கு அமர்த்தப்படுகின்றனர். தோட்டப்புற சிறுவர் சிறுமியர்களே அதிகாமாக மேற்படி வேலைக்கு அமர் த்தப்படுகின்றனர்.

தோட்டப்புறங்களின் பெற்றோர்களின் ஏழ்மை சீரழிந்த நிலைமை என்பவற்றை பயன்படுத்தி அவர்களின் சிறுவர்கள் சிறுமியர்கள் வீட்டு வேலைகளுக்கும் கடைவேலைகளுக்கும் கொழும்பு போன்ற பகுதிகளுக்கு கொண்டு செல்லப்படுகின்றனர். இதற்கு தோட்டங்களிலேயே புரோக்கர்கள் இருக்கிறார்கள்.

அவ்வாறான புரோக்கர் ஒருவரினாலேயே அட்டன் வெலிஓயா தோட்டச் சிறுவன் கொழும்பு ஜெம்பட்டா வீதியிலுள்ள வீடொன்றில் வேலைக்கு சேர்க்கப்பட்டுள்ளான்.

அந்த சிறுவன் தற்கொலை செய்து கொண்டான். அதனாலேயே மரணம் ஏற்பட்டதாக அவனை வேலைக்கமர்த்திய குடும்பம் கூறியது. அதனை ஜெம்பட்டா வீதி பொலிஸ் நிலைய கொட்டாஞ்சேனை பொலிஸ்நிலைய அதிகாரிகள் ஏற்றுக் கொண்டுள்ளனர். கொழும்பு சட்ட மருத்துவ அதிகாரியும் தற்கொலை என கூறியுள்ளனார் மரணவிசாரணை தீர்ப்பும் அவ்வாறே கூறுகிறது.

தொடர்ச்சி 12ம் பக்கம்

## இருண்ட யூலை 83ன் நினைவுகள்

1983ம் யூலை 24ம் 25ம் திகதிகளிலும் அதனைத் தொடர்ந்த நாட்களிலும் தமிழ் மக்கள் மீது கொடிய இன வன்முறை ஏவி விடப்பட்டது. இலங்கை வரலாற்றில் இடம் பெற்ற இன வன்முறைகளில் அதுவே பாரிய உயிர் உடமை அழிவுகளை ஏற்படுத்திய ஒன்றாகும். அதன் கதாநாயகன் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா. முன்னெடுத்தவர்கள் ஐக்கிய தேசியக்கட்சியினர். திட்டமிட்டே கொழும்பிலும் தென்னிலங்கையிலும் மலையகத்திலும் நடாத்தப்பட்ட இன வன்முறைக்கு ஐயாயிரம் தமிழ் மக்கள் வரை பலியாகினர். பலகோடி உடைமைகள் சூறையாடப்பட்டன. சிறைச்சாலையில் 52 தமிழ் சிறைகைதிகள் கொடூரமாகக் கொல்லப்பட்டனர். மனித நேயத்தையும் மனித நாகரீகத்தையும் மதிக்கிற ஒவ்வொருவரும் வெட்கித் தலை குனிந்தனர். பௌத்த தர்மமும் பாராளுமன்ற ஜனநாயக மும் கோலோச்சுவதாகக் கூறப்பட்ட நாட்டில் இனவன்மு றைக் காட்டுமிராண்டித்தனம் இடம் பெற்றது. இதன் எதிர் விளைவையே இலங்கை நாடு இன்று அனுபவித் துக் கொண்டிருக்கிறது. ஆனால் பௌத்த சிங்களப் பேரினவாதமும் ஆளும் வர்க்க சக்திகளும் அதிலிருந்து எத்தகைய பாடத்தையும் கற்றுக் கொள்ளவில்லை என்பது தான் நோக்குதற்குரியதாகும்.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# கொழும்பு நகைக்கடை ஊழியர்களுக்கு வாரத்திற்கு ஒன்றரை நாள் விடுமுறை

கொழும்பு செட்டியார் தெரு நகைக்கடைகளில் வேலைசெய்வோருக்கு வாரமொன்றுக்கு ஒன்றரை நாள் விடுமுறை வழங்க வேண்டுமென தொழில் ஆணையாளர் நாயகம் கட்டளையிட்டுள்ளார். இதுபற்றி இலங்கை நகை வியாபாரிகள் சங்கத்திற்கு 26 மே 2005 திகதியிடப்பட்ட கடிதமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடைகள், காரியாலய ஊழியர்கள் சட்டத்தின்படி ஒவ்வொரு ஊழியரும் வாராந்தம் ஒன்றைரை நாள் விடுமுறைக்கு உரித்துடையவர். அந்த அடிப்படையில் கொழும்பு செட்டியார் தெரு நகைக்கடைகளில் வேலை செய்வோருக்கும் வாரத்திற்கு ஒன்றரை நாள் விடுமுறை வழங்க வேண்டும்.

இதுபற்றி தொழில் ஆணையாளர் நாயகம் ஆங்கிலத்தில் எழுதியுள்ள கடிதம் பற்றி இலங்கை நகை வியாபாரிகள் சங்கம் நகைக்கடை உரிமையாளர்களுக்கு சரியான உண்மையான விளக்கத்தை கொடுக்கவில்லை. அதாவது ஒவ்வொரு ஊழியருக்கும் வாரத்தில் ஒன்றரை நாள் விடுமுறை வழங்க வேண்டுமென்று கூறாமல் விடுமுறை வழங்குவதை நிரூபிப்பதற்கான பதிவுகளை வைத்துக் கொள்ளும்படியும் தொழில் திணைக்கள அதிகாரிகள் பரிசோதனைக்காக வந்தால் அந்த பதிவுகளை காட்டவும் என்றே அச்சங்கம் நகைக்கடை உரிமையாளர்களுக்கு அறிவித்துள்ளது.

இது கடை உரிமையாளர்களைப் பிழையாக வழிநடத்துவதாகும். விடுமுறை வழங்குவதற்கு பதிவுகளை மட்டும் வைத்திருப்பதல்ல. நடைமுறையில் உண்மையாகவே விடுமுறை வழங்க வேண்டும்.

நகைக்கடை உரிமையாளர்கள் மட்டுமன்றி அவற்றில் வேலை செய்வோரும் அவர்களுக்கு வாராந்தம் ஒன்றரைநாள் விடுமுறை இருப்பதை புரிந்து கொள்ள வேண்டும். நகைக்கடை ஊழியர்களுக்கு மட்டுமன்றி எல்லா கடை ஊழியர்களுக்கும் காரியாலய ஊழியர்களுக்கும் வாராந்தம் ஒன்றரை நாள் விடுமுறை வழங்கப்பட வேண்டும் என்றே சட்டம் கூறுகிறது. அதனை தொழில் திணைக்களம் வலியுறுத்தியுள்ளது.

செட்டியார் தெரு நகைக்கடை ஊழியர்களுக்கு இவ் விடுமுறை உரிமை சும்மா கிடைத்துவிடவில்லை. நீண்ட போராட்டங்களுக்கு மத்தியிலேயே கிடைத்துள்ளது. குறிப்பாக கொழும்பு செட்டியார் தெரு டொல்பின் நலன்புரி சங்கத்தினதும் அதன் தலைவர் ஐ.லோகநாதனும் மேற்கொண்ட தொடர்ச்சியான வற்புறுத்தல் முயற்சிகளாலேயே கிடைத்துள்ளது.

இந்த உரிமையை நடைமுறையில் அனுபவிக்க வேண்டியது ஊழியர்களின் பொறுப்பாகும். இனி மேலும் தாமதிக்காது தொழில் ஆணையாளர் நாயகத்தின் கட்டளையை நகைக்கடை உரிமையாளர்கள் நடை முறைப்படுத்தி ஊழியர்களுக்கான விடுமுறையை வழங்க வேண்டும்.

# உயர் பாதுகாப்பு வலயத்தில் நோயாளர் அச்சத்துடன் அவதிப்பட வேண்டுமா?

தெலலிப்பளை மாவட்ட வைத்தியசாலை யாழ் மாவட்டத்தில் பல வகை நோயாளர்களுக்கும் வைத்திய சேவை வழங்கி வந்த ஒரு முக்கிய வைத்தியசாலையாகும். விஷேடமாக மனநோயாளர்களுக்கான பிரிவையும் கொண்டு இயங்கி வந்தது. இதே வைத்தியசாலைக்கு அண்மித்த இடத்தில் புற்றுநோய் வைத்தியசாலையும் இயங்கிவந்தது. இவற்றால் இத் தெல்லிப்பளை வைத்தியசாலைப் பிரதேசம் மக்களுக்கு முக்கிய இடமாகியது. ஆனால் 90ம் ஆண்டுக்குப்பின் இவை யாவும் ராணுவ நடவடிக்கைக்கு உட்பட்டு மக்கள் துரத்தப்பட்டு ராணுவ உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் மக்கள் நடமாட்டம் அற்ற பிரதேசமாக்கப்பட்டது. வைத்தியசாலைகளும் இடிபாடடைந்தது பாழடைந்தன.

இத்தனை வருடங்களுக்குப் பின் மேற்படி வைத்தியசாலைகள் இரண்டும் புனரமைக்கப்பட்டு நோயாளர்களுக்காகத் திறந்து வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அவை தொடர்ந்தும் உயர் ராணுவ பாதுகாப்பு வலயத்தினுள் தான் இருந்து வருகிறது. அப்படியாயின் நோயாளர்கள் எவ்வாறு அவ் வைத்தியசாலைகளுக்குச் சென்று வைத்தியம் பெற முடியும். நோயாளிகள் அங்கு செல்வதாயின் அடையாள அட்டைகள் உடல் பரிசோதனை பொதிகள் பொருட்கள் வாகனச் சோதனைகளுக்குப் பின்பே வைத்தியசாலைக்குச் செல்ல முடியும்.

வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவிலும் சரி தங்கியிருந்து சரி சிகிச்சை பெறுவதாயினும் சுதந்திரமாகச் செயல்பட முடியுமா? நோயாளர்களைப் பார்க்கவும் உணவு உடை மற்றும் தேவைகளுக்காக உறவினர் சாதாரணமாக வந்து போக முடியுமா? யாவும் ராணுவக் கட்டுப்பாடு, கண்காணிப்பு என்பன மத்தியிலேயே நோயாளர்களும் அவர்தம் உறவினர்களும் செல்ல வேண்டும். இவ்வாறு அச்சம் பதற்றம் என்பனவற்றுடன் செல்லும் நோயாளர்களின் நோய்கள் எவ்வாறு குணமடைய முடியும். உதாரணமாக இரத்த அழுத்தமும் இதய நோயும் உள்ள ஒரு நோயாளி அங்கு ராணுவக் கெடுபிடிகளுக்கு உள்ளாகி வைத்தியசாலைக்கு செல்ல முடியுமா?

வடபுலத்திலிருந்து புற்று நோயாளர்கள் கொழும்பு வந்து படும் அலைச்சல்கள் அவலங்கள் கொஞ்சமல்ல. எனவே தெல்லிப்பளை புற்று நோய் வைத்தியசாலை முழுமையாக இயங்குமானால் அவர்களின் அவலங்கள் குறையும் என்றே மக்கள் எதிர்பார்த்தனர். அந்த எதிர்பார்ப்பு எந்தளவுக்கு நிறைவேறும் என்பதே கேள்வியாக உள்ளது.

தெல்லிப்பளை வைத்தியசாலைகள் இரண்டும் நோயாளர்களுக்கு பூரணமாகப் பயன்பட வேண்டுமானால் அப்பகுதி ராணுவ உயர்பாதுகாப்பு வலயம் என்ற நிலைக்குள் உட்படுத்தப்படக் கூடாது. ராணுவம் தனது பாதுகாப்பிற்காக நேயாளர்கள் வைத்தியர்கள் ஊழியர்களை பணயம் வைப்பது போன்று வைத்திருக்கக் கூடாது.

# சேது கால்வாய்த் திட்டத்தை எதிர்த்து மன்னார் மீனவர் ஆர்ப்பாட்டப் பேரணி

இந்திய அரசாங்கம் முன்னெடுத்து வரும் சேது சமுத்திரக் கால்வாய் திட்டத்தால் பாரிய பாதிப்புகளும் அழிவுகளும் வரப்போவதைச் சுட்டிக்காட்டி அதற்கு தமது வன்மையான எதிர்ப்பை மன்னார் மீனவர்கள் தெரிவித்து வருகின்றனர். அதன் வெளிப்பாடாக கடந்த 19ம் திகதி மன்னாரின மீனவர் சங்கங்களின் சமாஜம் கண்டனப் பேரணி நடாத்தியது. ஆயிரத்திற்கு மேற்பட்ட மீனவர்களும் மக்களும் கலந்து கொண்ட மேற்படி பேரணி மன்னார் செயலகத்திற்கு சென்றடைந்தது. அங்கு தங்களது பாதிப்புகளை எடுத்துக் கூறும் மகஜரை அரசாங்க அதிபரிடம் கையளித்தது. சுமார் 25 ஆயிரம் மீனவர்களின் தொழிலையும் அவர்களது இருப்பையும் பாதித்து அழிவுக்கு உள்ளாக்கும் சேது சமுத்திரக் கால்வாய் வெட்டும் திட்டத்தை கைவிடுமாறு வற்புறுத்திக் கேட்டுள்ள மகஜர் மேலும் பல கோரிக்கைகளை முன்வைத்தது.

மன்னார் மீனவர்களின் மக்களின் சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டம் பற்றிய அச்சமும் முன் உணர்வும் முற்றிலும் நியாயமானதாகும். இப்பேரணியில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்ட போதிலும் அம் மாவட்டத்திற்கான ஒரே ஒரு பாராளுமன்ற உறுப்பினர் மட்டுமே கலந்து கொண்டார். ஏனையோர் கலந்து கொள்ளவில்லை. மன்னார் மக்களுக்குப் புரியவில்லை. ஆனால் இலகுவில் புரியக்கூடியது என்னவெனில் மன்னார் மாவட்ட கூட்டமைப்பு பா.உ.கள் இந்தியாவைப் எதிர்க்கவோ பகைக்கவோ மாட்டார்கள் என்பதேயாகும்.

# வவுனியா (தெ வ) கல்விப்பணிப்பாளர் 2162500/= சேகரித்தார்?

மாகாண கல்வியமைச்சின் நடைமுறைகளுக்கு மாறாக வவுனியா மேற்கு வலய கல்விப்பணிப்பாளர் பரீட்சைகளை நடத்துவதற்கு மாணவர்களிடமிருந்து பணம் சேகரித்துள்ளார் என்று இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

இதுவரை 216250/= பணம் சேகரிக்கப்பட்டுள்ளதாக கணிப்பிடப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர் இதுபற்றி கல்வியமைச்சின் செயலாளர் தாராடீ மெல்லுக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இவ்வாறு சேகரிக்கப்பட்ட பணம் முறையான கணக்கு விதிமுறைகளுக்குட்படுத்தப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

பரீட்சையை நடத்துவதற்கென ஒரு மாணவரிடமிருந்து 150/= சேகரிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான முறையற்ற நிதி சேகரிப்பால் மாணவர்களும் பெற்றோர்களும் கடும் விசனம் அடைந்துள்ளனர். இலவசக் கல்வி நாட்டில் எந்த நிலைக்குத் தாழ்ந்தும் சீர்குலைந்தும் போய்விட்டது. இது போன்று கல்வித்துறையில் குறிப்பாகக் கல்வி வலயங்களில் வெவ்வேறு அளவுகளில் ஊழல் மோசடிகள் இடம் பெற்றே வருகின்றன. இதனால் பாதிக்கப்படுவது சாதாரண மக்களின் பிள்ளைகளும் அவர்களது கல்வி எதிர்காலமுமே ஆகும்.

# நாலு நடக்கும் உலக'லே

நற்குணன்

## நரிக்கு நாட்டாண்மை கொடுத்தால்...

யூ என். பி. தலைவரைப் பொறுத்தவரை நாட்டின் எந்தப்பிரச்சனை பற்றியும் ஆய்வோ தீர்வோ இல்லை. இன்று அவர் முன்னாலுள்ள ஒரே பிரச்சனை சனாதிபதித் தேர்தல் மட்டுமே. இந்த நாட்டை அவலத்தில் முழுகடித்த கட்சி யூ என். பி. அமைதிக்கான வாய்ப்பை இரண்டு ஆண்டுகள் முன்பு சிதறடித்த கட்சியும் அது தான்

ரணில் விக்கிரமசிங்ஹ அமெரிக்காவின் கைப்பாவையாகவும் இந்தியாவின் விஸ்தரிப்பு நோக்கங்களை எதிர்க்காதவராயும் நடப்பதற்கு மேலாக வேறெந்த அக்கறையுமற்ற ஒரு அரசியல் கழைக்கூத்தாடி போலவே நடந்து வருகின்றார். இந்த நாட்டின் தேசிய இனப்பிரச்சனையைத் தீர்ப்பது பற்றி எந்த விதமான ஆலோசனையையும் முன்வைக்காமல் வெறுமனே இன்றைய ஆட்சியை விமர்சிப்பதை மட்டுமே பணியாகக் கொண்டுள்ள ஒருவர் சனாதிபதியானால் அவரிடமிருந்து எதை எதிர்பார்க்கலாம்?

சனாதிபதிப் பதவிக்காக காட்டுகிற அக்கறையை எந்த அரசியற் பிரச்சனை பற்றியும் காட்டாத ஒருவரது பதவி வெறிக்கு தமிழ் அரசியல் தலைவர்களும் பங்காளிகளவார்களா?

## எசமான விசுவாசமா?

ஈ.பி.ஆர்.எல்.எவ் –பத்மநாதபா என்ற பேரில் இயங்குகிற ஒரு குழுவினர் இப்போது தீவிரமாக அரசியல் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றார்கள். அவர்களது “கண்ணோட்டம்” என்கிற பத்திரிகையில் விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்டவர்கள் என்று சொல்லக் கூடிய தமிழ்த் தேசியவாதிகள் பலருக்கு அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது. ராஜிவ் காந்திக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது. ஆனால் இதே இயக்கத்தால் கொல்லப்பட்டவர்களுக்கு யார் அஞ்சலி செலுத்துவது? அத்துடன் சிவராமின் கொலைக்கும் விளக்கம் தரப்பட்டுள்ளது அஞ்சலிகள் போக விடுதலைப் புலிகளை விமர்சிப்பதை விட்டால் இந்தக் குழுவினருக்கு அரசியலே இல்லை என்று தான் தோன்றுகிறது.

இன்று தமிழ் மக்கள் எதிர்நோக்குகிற எத்தனையோ பிரச்சனைகள் உள்ளன. இந்த நாட்டை மிரட்டுகிற எத்தனையோ சக்திகள் உள்ளன. அவை பற்றி எதையுமே சொல்லுவதற்கு இயலாத அளவுக்கு இவர்களது சிந்தனை விடுதலைப் புலிகளை ஓரங்கட்டுவது பற்றியதாகவே உள்ளது. விடுதலைப் புலிகளை விமர்சிக்கும் தேவை சிங்களவர்களை விடத் தமிழருக்கேஅதிகம். ஆயினும் விடுதலைப்புலிகளை விமர்சிப்பதற்கும் மேலாக எதையும் சொல்ல இயலாதவர்கள் தமிழ் மக்களின் நன்மை கருதிச் செயற்படுகிறார்களா, அல்லது வேறொரு சக்தியின் முகவர்களாகச் செயற்படுகிறார்களா?

இன்று, தமிழ்மக்களின் பிரச்சனைகளை முன்னாள் தமிழ்ப் போராளிக் குழுக்கள் முற்றாகவே மறந்து விட்டன. ஒவ்வொரு குழுவும் தன் வயிற்றுப்பிழைப்புக்காக ஏதேதோ செய்கிறது. என்றாலும் எதுவுமே முன்னாள் எசமானர்கட்கு மாறாக மூச்சுவிடக்கூட ஆயத்தமாக இல்லை.

## பத்திரிகா தருமம்

லண்டன் குண்டுத் தாக்குதல் பற்றி நமது நாளேடுகள் மிகுந்த கவலையும் சினமும் காட்டியுள்ளன. மனிதாபிமானமில்லாத அந்தத்தாக்குதல் பற்றிய அதே அக்கறை அமெரிக்கா ஈராக்கில் நடத்திய காட்டுமிராண்டிப் போர் பற்றி ஏன் காட்டப்படவில்லை? ஒரு பயங்கரவாதம் இன்னொரு பயங்கரவாதத்தை நியாயப்படுத்தாது. ஆனால் ஒன்றைக் கண்டிக்கத் தவறுகிறர்களுக்கு மற்றதைக் கண்டிப்பதற்கு என்ன தகுதியிருக்கிறது?

## இப்போதாவது விழித்துக் கொண்டார்களே!

இந்திய அரசாங்கம் சேது சமுத்திரத்திட்டத்தை நடைமுறைப்படுத்தப் போகிறது என்று உறுதிப்படுத்தப்பட்ட பிறகுதான் நமது பொறியியலாளர்களுக்கு அது பற்றிய சிந்தனை வந்திருக்கிறது. எத்தனையோ காலமாக இந்தப் பிரச்சனை பற்றிச் சுற்றுச் சூழலியலாளர்கள் மாக்ஸியலெனினியவாதிகளும் பேசிவந்த போது இந்த அக்கறை காட்டப்பட்டிருந்தால் இலங்கை அரசாங்கங்களை உறுதியான நிலைப்பாடு எடுக்குமாறு வற்புறுத்தியிருக்கலாம். இப்போது இலங்கை அரசாங்கத்தின் கருத்தைப் புறக்கணித்து இந்திய ஆட்சியாளர்கள் செயற்படப்போகிற நிலை.எவ்வாறாயினும் இவ்விடயத்தில் இன்றாவது அக்கறை வந்துள்ளதே. அது நல்லது.

இதுபோல அக்கறை மேல் கொத்மலைத் திட்டம் பற்றியும் இருக்கும் என்றால் எவ்வளவு நன்றாக இருக்கும்!

## வழிபாட்டுச் சுதந்திரம்

ஜூன் மாத முடிவில் ஒரு நாள். தமிழோசை நிகழ்ச்சிக்குப் பிறகு தேசியப்பார்வை நிகழ்ச்சி நடக்கிற 15 நிமிடங்களும் வானொலிக்கு ஓய்வு கொடுப்பதற்கு ஓடோடிவர இரண்டு நிமிடங்கள் பிந்தி விட்டது. “காலத்தால் அழியாத காவிய நாயகி” என்று ஒரு பாட்டு கர்நாடக இசையில் ஒலித்தது. ஒருவேளை கடைசியாகத் தேசியப்பார்வைக்கு ஓய்வு கொடுத்து விட்டார்களோ என்று யோசித்தேன். என்ன முட்டாள்தனம்! நம் அம்மாவின் பிறந்த நாளல்லவா! அந்தப் பாட்டு நமது நாட்டின் “வரலாற்று நாயகி” பற்றிய ஒரு சின்ன வாழ்த்துப்பா! அதை அப்படியே பிரதியெடுத்துத் தமிழ்நாட்டுக்கு அனுப்பினால் அது தமிழக முதலமைச்சர் அவர்கட்கும் ஒருவேளை பொருந்தும். வால்பிடித்து வயிறு வளர்ப்பதிலும் ஈழம் பின்னிற்கவில்லை என்பதையிட்டும் நாம் பெருமைப் படலாமோ? சிங்களத்திலும் யாரும் இப்படிப் பாடுவார்களோ? என்ன இருந்தாலும் அங்கும் இங்கும் தமிழரின் வழிபாட்டுச் சுதந்திரம் முழுமையாகவே பேணப்படுகிறதல்லவா!


புதிய பூமி

வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை

★ 2005ம் ஆண்டு சந்தா செலுத்துங்கள்
★ விசேட நிதி உதவி வழங்குங்கள்
★ விடயதானங்கள் அனுப்புங்கள்
★ உங்கள் கருத்துக்களை தெரிவியுங்கள்

உள்நாட்டுக்கான சந்தா ரூபா 200/=
வெளிநாடுகளுக்கான சந்தா 20 அ. டொலர்
காசுக்கட்டளை முலம் அனுப்புவோர்
நிர்வாகி –புதிய பூமி எனக் குறித்து
கிறாண்பாஸ்(Grandpass)தபால் நிலையத்திற்கு அனுப்பவும்

வங்கி மூலம் அனுப்புவோர்
கணக்கு இல:-
0672-21-2002634-6
சுப்ப மாக்கற் கிளை
இலங்கை வங்கி
கொழும்பு-11

புதிய பூமி
47,3வது மாடி
கொ.ம.ச.க.தொகுதி,
கொழும்பு-11

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



## தேர்தல்கள் வரப்போகின்றன டும்...டும்....டும்..
## மலையகத் தலைமைகள் தயாராகின்றன டும்... டும்...டும்...

தற்போதைய அரசியல் சூழலில் எந்த நேரமும் பொதுத்தேர்தல் உள்ளூராட்சித் தேர்தல் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறலாம் என்ற நிலை காணப்படுகிறது. அதன் காரணமாக மலையகத்தின் அரசியல் தொழிற்சங்க தலைமைகள் உசாரடைந்துள்ளன. அறிக்கைகள், கூட்டங்கள், பேரணிகளை நடாத்தி மலையக மக்களுக்காக உருகி அழவும் அனுதாபப்படவும் வீர வசனங்களில் பொறிபறக்கும் பேச்சுகளும் நிகழ்த்தத் தொடங்கியுள்ளன. சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறும் குத்துக்கரண பேச்சுகளும் அத்தலைமைகளில் இருந்து வரத் தொடங்கியுள்ளன.

அண்மையில் ஆறுமுகனார் மேல் கொத்மலை பற்றி ஏதோ புதிய நிலைப்பாடு எடுத்திருப்பதாக அதிரடி அறிக்கை வெளியிட்டார். பின்பு ஜனாதிபதியுடன் பேசிய பின் பெட்டிப் பாம்பு போல் மூச்சுப் பேச்சைக் காணவில்லை. ஆனால் மலையக ஆசிரியர் நியமனத்திற்கு விளம்பரம் தொடங்கிவிட்டது. அடுத்து மலையக மக்களுக்கான திட்டங்கள் கோரிகைகள் என்பனவற்றை வெளியிட ஆயத்தங்கள் நடைபெறுகின்றன. அதேவேளை ஆறுமுகத்தின் சர்வாதிகாரத்திற்கு எதிராக இ.தொ.கா.விற்குள் கொந்தளிப்புகளும் குமுறல்களும். வளர்ந்துள் ளன.

அடுத்த தலைமையான மலையக மக்கள் முன்னணியும் தேர்தலுக்கு என்னென்ன புதுக் கோரிக்கை வைத்து மலையக மக்களின் கவனத்தைத் திருப்பலாம் என ஆலோசிக்கிறது. அதன் தலைவர் அறிக்கைகள் விடுவதில் வல்லவர். ஆனால் அவர் மீதும் நம்பிக்கையீனம் ஏற்பட்டு கூட இருந்தவர்களே அண்மையில் குமுறும் நிலைக்கு வந்துள்ளனர். அண்மையில் அட்டனில் ஒரு பேரணி ஒன்றை இளைஞர் அணி என்ற பெயரில் நடாத்தினார்கள். அதில் தலைவர் பங்கு கொள்ளவில்லை. பேரணியில் எதிர்பார்த்த தொகையினர் கலந்து கொள்ளவும் இல்லை. ஆனால் பத்திரிகா தர்மம் காக்கும் செய்தியாளர்கள் மூலம் மூவாயிரம் பேர் திரண்டதாக செய்திகள் வந்தன. அப் பேரணியில் மேல் கொத்மலைத் திட்டத்திற்கு எதிராக ஒரு சொல்தானும் கூறப்படவில்லை. ஏனெனில் யூ என். பி சொல்லாத விடயத்தை எப்படி ம.ம.மு சொல்ல முடியும்.

எனவே எதிர்வரும் மாதங்கள் மலையகத் தலைமைகள் எப்படி மக்களின் வாக்குகளைக் கொள்ளையிடலாம். என்பதற்கான வியூகம் அமைப்பதில் சுறுசுறுப்பாகியுள்ளதை அவதானிக்க முடிகிறது. இவர்களை நம்பி மலையக மக்கள் மீண்டும் ஒரு முறை ஏமாறப் போகிறார்களா? என்பதே மலையக மக்கள் முன் உள்ள கேள்வியாகும்.

## உயிர்துறக்க விரும்பாத உண்ணாவிரதத் துறவிகள்

அன்பையும் கருணையையும் கொண்டு ஆசைகளைத் துறந்து அடுத்தவர்களுக்கு உதவும் தர்மத்தைப் போதிக்கவேண்டிய பௌத்த மதப் பிக்குமார் இருவர் கடந்த மாதத்தில் இறக்கும் வரை உண்ணா விரதம் இருந்தனர். ஒருவர் ஜாதிக ஹெல உறுமயவைச் சேர்ந்த ஓமல்பே சோபித தேரர். இவர் கண்டி தலதா மாளிகை முன்பாக மேடை கட்டி உண்ணா விரதம் இருந்தார். மற்றவர் ஜே.வி.பி யைச் சேர்ந்த தம்பல அமில தேரர். இவர் கொழும்பு கோட்டைப் புகையிரத நிலையம் முன்பாக உண்ணாவிரதம் இருந்தார். இருவரும் பொதுக்கட்டமைப்பை வாபஸ் வாங்கும்படி கோரியே சாகும் வரை உண்ணாவிரதம் இருந்தனர். பொது மக்கள் இந்த உண்ணாவிரதம் இருந்த இரண்டு பிக்குமார் பற்றி அலட்டிக் கொள்ளவில்லை. புதினம் கூட நின்று பார்க்க ஆளில்லாத இந்த உண்ணாவிரதம் இறுதியில் கைவிடப்பட்டது. ஜனாதிபதி எழுதிய கடிதத்தை சாட்டாக வைத்து கண்டியில் இருந்த பிக்கு உண்ணாவிரதத்தை கைவிட்டார். தன்னைப் பொலீசார் தூக்கிச் சென்றதால் மூர்ச்சை தடுமாறி உண்ணாவிரதத்தை கைவிட்டதாக கோட்டையில் இருந்த பிக்கு கூறிக் கொண்டார். துறவிகளுக்கே பசியிருக்க முடியவில்லை என்றால் உழைத்து வாழும் மக்களுக்கு எப்படி பசியுடன் வாழமுடிகின்றது. இதற்கும்அப்பால் உண்ணாவிரதத்திற்கு கொள்கை லட்சியம் உறுதிப்பாடு வேண்டும். ஏவல்பேய்களாக இருந்து வருவோருக்கு அவை எப்படி உருவாக முடியும். இந்த உண்ணாவிரதம் பற்றி அமைச்சர் டி.எம் ஐயரட்ண கூறியது பொருத்தமானது. “நாம் ஏற்கிறோமோ இல்லையோ தனது கொள்கை லட்சியத்திற்காக சாகும்வரை உண்ணாவிரதமிருந்து உயிர்நீத்த ஒருவர் திலீபன் மட்டுமே யாவார். இலங்கை வரலாற்றில் வேறு எவரும் அவ்வாறு சாகும்வரை உண்ணாவிரதமிருந்து இறக்கவில்லை”. எனக் கூறியது பிக்குமாரின் செவிகளை எட்டியிருக்கும் என்பதில் ஐயமில்லை. அப்படிக் கூறியும் அத் துறவிகள் உயிர்துறக்க முன்வரவில்லை.

## முஸ்லீம் தலைமைகளின் தெருச்சண்டை
## வாக்கு வங்கிகளை நிரப்புவதற்கே!

முஸ்லீம் மக்கள் வடக்கு கிழக்கிலும் ஏனைய பிரதேசங்களிலும் எதிர்நோக்கும் பிரச்சினைகள் இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையின் பிரிக்க முடியாத ஒரு பகுதியாகும். குறிப்பாகப் பேரினவாத ஒடுக்குமுறைக்கு முஸ்லீம் மக்கள் தொடர்ந்து ஆளாகி வருகிறார்கள். ஆனால் இன்று முஸ்லீம் தலைமைகள் முஸ்லீம் தேசிய இனத்திற்குரிய ஒரு தெளிவான திட்டவட்டமான கொள்கை வேலைத்திட்டம் எதனையும் முன்வைப்பதாக இல்லை. பாராளுமன்றத்திற்கு அதிகரித்த பிரதிநிதிகளாகச் செல்வதில் அக்கறை காட்டப்பட்டு அதனை பிரதான இரண்டு ஆளும் வர்க்க பேரினவாதக் கட்சிகளுடன் அமைச்சர்களாகவும் ஏனைய உயர் பதவிகள் பெறுவதற்காகவுமே அலையும் தலைமைகள் ஆகிக் கொண்டன. இன்று பத்துக்கு மேற்பட்ட முஸ்லீம் தலைமைகள் செயற்படுகின்றன. ஆனால் எல்லாமே பாராளுமன்றத்தைக் குறியாக வைத்தே தமது அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றன.

தங்களுக்குள் அடிபட்டு வந்த மேற்படி தலைமைகளுக்கு சுனாமி நிவாரணப் பொதுக் கட்டமைப்பு நல்ல தீனியாகக் கிடைத்துக் கொண்டது. மேற்படி கட்டமைப்பு சாராம்சத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழ் முஸ்லீம் சிங்கள மக்களின் மறுவாழ்வுக்குரியதேயாகும். ஆனால் சில முஸ்லீம் தலைமைகள் தனித்தரப்பு கோரிக்கையை முன்வைத்து எதிர்ப்பு ஆரவாரம் தொடங்கி ஆர்ப்பாட்டப் பிரசாரம் செய்து வருகின்றனர். இதனால் தமது வாக்கு வங்கியில் சேதம் வந்துவிடும் என்பதற்காக அரசாங்கத்தை ஆதரித்து அமைச்சர் பதவி பெற்றவர்களும் பொதுக்கட்டமைப்புக்கு தாமும் எதிர்ப்பு என்று கூறி வருகின்றனர். இதைவைத்து சகல முஸ்லீம் தலைமைகளும் தெருச் சண்டையில் இறங்கி நிற்கின்றன. இத்தகையோர் அன்றாடவாழ்வில் நல்ல சொத்து சுகம் பெற்ற உயர்வர்க்க முஸ்லீம் குடியினராவர். இவர்கள் சுனாமியாலும் பாதிக்கப்படவில்லை. ஆனால் சாதாரண உழைக்கும் முஸ்லீம்களின் நிலை மோசமானதாகும். சுனாமியால் பாதிக்கப்பட்டோரின் நிலை மிக மிகத் துன்பமானதாகும். ஆனால் தலைமைகளுக்கு இவை பற்றி அக்கறையே இல்லை. அவர்களுக்கு வாக்குகளிலேயே முழுக் கவனம். ஏனெனில் அதன் மூலமே முதலாளிய சொத்து சுகம் பெறும் முஸ்லீம் உயர்குளாத்தினர் பெரு நன்மைகள் பெறமுடியும். அவர்களின் பிரதிநிதிகளே இத் தெருச் சண்டைத் தலைமைகள்.

இம் முஸ்லீம் தலைமைகளது ஏட்டிக்குப் போட்டியான பிரச்சாரங்களால் தமிழ் முஸ்லீம் உறவு நிலை மோசமடையவே செய்யும். இதனால் பேரினவாதிகளே பயனடைவார்கள் என்பதை இத் தலைமைகள் தெரிந்தும் தெரியாதது போன்றே நடந்து கொள்வதுதான் விசனத்திற்குரியதாகும். அது மட்டுமன்றி இந்திய பிராந்திய மேலாதிக்க சக்திகளும் முஸ்லீம் தலைமைகளைப் பயன்படுத்தி தமது நோக்கங்களை ஈடேற்ற முற்படுகின்றன. கிழக்கு மாகாணம் பற்றியும் முஸ்லீம்கள் பற்றியும் இந்திய தூதரக அதிகாரிகள் காட்டிவரும் அண்மைக்கால அக்கறைகள் அவர்களது உள் நோக்கங்களை வெளிப்படுத்துகின்றன.

## பேரினவாத அரசியலுக்குள் பௌத்தம்!

மதம் அரசியலுக்கு அப்பாற்பட்டதென்றே எமக்கு கூறப்படுகிறது. ஆனால் நடைமுறையில் அரசியல்வாதிகள் மதத்தை ஆளும் வர்க்கத்தின் தேவைக்காகவே பயன்படுத்தி வந்துள்ளனர்.

கடந்த யூலை 1ம் திகதி தியவதன நிலமே தெரிவு நடந்தது. அதில் புதியவர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். தலதா மாளிகையை பரிபாலனம் செய்வதே அவரின் வேலை. புதிய நிலமே 10 வருடங்களுக்கு அப்பதவியை வகிப்பார்.

1937ம் ஆண்டுக்கு முன்பு தியவதன நிலமே தெரிவு செய்யப்பட்ட திகதியிலிருந்து அவரது ஆயுட்காலம் முடியும் வரை அப்பதவியில் இருப்பார். ஆனால் 1937ம் ஆண்டுக்குப் பின் இந்தப் பதவியில் இருப்பவர்களின் பதவிக்காலம் 5 ஆண்டுகளென நிர்ணயிக்கப்பட்டது.

1975ம் ஆண்டு யூ என். பியின் பிரமுகரான கலாநிதி நிரஞ்சன் விஜயரத்தின தியவதன நிலமேயாகத் தெரிவு செய்யப்பட்டார். அச்சமயத்திலும் அவரது பதவிக்காலம் ஐந்து ஆண்டுகளாகவே இருந்தது. ஆனால் 1977ல் பதவிக்கு வந்த யூ என். பி தியவதன நிலமேயின் பதவிக் காலத்தை பத்து ஆண்டுகளாக்க ஏற்பாடுகளைச் செய்தது. அதனடிப்படையில் நிரஞ்சன் விஜயரத்தின பத்து ஆண்டுகள் அப்பதவியில் இருந்தார்.

இப்போது புதிய திவயதன நிலமேயாக தெரிவு செய்யப்பட்ட பண்டார என்பவரின் அரசியல் சார்பு நிலை மிக விரைவில் வெளிப்படவே செய்யும். இவற்றுக்கும் அப்பால் இப்பதவிக்கு போட்டியிடுபவர்களும், வாக்களிப்பவர்களும் சாதிய அடிப்படையில் மிக உயர்சாதியினராக இருக்க வேண்டும் என்பது கட்டாயமானதாகும். அத்துடன் பௌத்தமத நான்கு பீடங்களில் அஸ்கிரிய, மல்வத்த பீடங்களைச் சேர்ந்த மகாநாயக்கர்கள் மட்டுமே வாக்களிக்க முடியும். சிங்கள தேசிய இனத்தின் மத்தியிலும் சாதியப் படிநிலை நன்கு பேணப்பட்டு வருவதையே இது எடுத்துக்காட்டுகிறது.



புதிய ஜனநாயகக் கட்சியின் 27ஆவது ஆண்டு விழா யூலை 3ம் திகதி நடைபெற்ற போது அதில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் கட்சியின் தோழர்களான இ.தம்பையா, சோ.தேவராஜா, ச.பன்னீர்செல்வம், சி.கா.செந்திவேல், வெ.மகேந்திரன், ந.வரதராஜ் மற்றும் வாழ்த்துரை வழங்கிய புகையிரத ஊழியர் சங்கப் பிரதிநிதி சரத்பெர்ணான்டோ ஆகியோர் உரையாற்றுகின்றனர்.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# மலையகத்தில் தமிழ் மொழி தேசியப் பாடசாலைகள் இதுவரை இல்லை

## அரசியல் ஆதிக்க தலைமைகளின் நயவஞ்சகம்

மலையகக் கல்வி மாகாண கல்வியமைச்சிற்குட்பட்டதாகவே எப்போதும் இருக்க வேண்டும். மலையகத்திலுள்ள பாடசாலைகள் தேசியப்பாடசாலைகளாகத் தரம் உயர்த்தப் படக்கூடாது. அப்போது தான் மலையகத்தின் கல்வி வளர்ச்சி ஏற்படும். இவ்வாறு இ.தொ.கா தலைவர்கள் கூறுகிறார்கள்.

மத்திய மாகாணத்திலும், ஊவா மாகாணத்திலும் தொடர்ந்து தமிழ்க் கல்வி அமைச்சுகளைப் பெற்று கல்வித்துறையில் ஆதிக்கம் செலுத்தி பாடசாலைகள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்களை கட்டுப்படுத்தி கொண்டிருக்கும் அதிகார சுவையின் காரணமாகவே இ.தொ.கா தலைவர்கள் அப்படி கூறுகின்றனர். இலங்கையின் பாடசாலைக் கல்வியானது மாகாணக் கல்வி என்றும் தேசியக் கல்வி என்றும் இரண்டாக நிர்வகிக்கப்படுகிறது. அதாவது மாகாண சபைகளால் ஒரு பகுதி கல்வி நிர்வகிக்கப்படுகிறது. மத்திய அரசாங்கம் ஒரு பகுதி கல்வியை நிர்வகிக்கிறது.

மாகாணமட்டப் பாடசாலைகள் வளர்ச்சியடையும் போது சில பாடசாலைகள் தேசியப் பாடசாலைகளாக்கப்டுகின்றன. அவ்வாறு தரம் உயர்த்தப்படும்போது பெரிய நகரங்களில் இருக்கும் பெயர் பெற்ற பாடசாலைகளுக்கு வழங்கப்படும் வசதிகளை வழங்க மத்திய அரசாங்கம் கடமைப்பட்டுள்ளது. அத்துடன் கல்வியியல் கல்லூரி ஆசிரியர் பயிற்சி கலாசாலை, தொழில்நுட்பக்கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் போன்றன மத்திய அரசாங்கத்தினாலேயே நிர்வகிக்கப்படுகின்றன.

மாகாணமட்டத்திற்கு அதிகாரங்கள் பங்கீடு செய்யப்பட்டதால் கல்வியும் மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்பட்டன. அது வரவேற்கக் கூடிய விடயமெனினும், மாகாணமட்டத்திற்கு மேல் கல்வியில் வளர்ச்சி ஏற்படாது தடுப்பதற்கு அவ்வதிகார பங்கீடு காரணமாகி விடக்கூடாது. அதாவது மாகாணசபையிலிருந்து மட்டுமே கல்விக்கான வளங்களை பெறமுடியும் என்ற நிலை ஏற்பட்டுவிடக்கூடாது. மத்திய அரசாங்கத்திலிருந்து கல்வி வளர்ச்சிக்காகப் பெறவேண்டிய பெறக்கூடிய வளங்களைப் பெறுவதாக இருந்தால் அக்கல்வி நடவடிக்கை நிறுவனம் என்பன மத்திய அரசாங்கத்தின் கீழ் இருக்க வேண்டும். மாகாண வளங்களை விட மத்திய அரச வளங்கள் அதிகமானதாகும். மாகாண வளங்களையும் கொண்டு கல்வி அபிவிருத்தி செய்யப்படுவது போன்று மத்திய அரச வளங்களைக் கொண்டும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.

மலையகத்தமிழ் பாடசாலைகளில் எதுவுமே தேசிய பாடசாலையாக தரம் உயர்த்தப்படவில்லை. அதாவது மலையகத்தில் ஒரு தமிழ் தேசிய பாடசாலை கூட இல்லை. இதனால் பாடசாலை மட்டக்கல்விக்கு மத்திய அரச வளங்கள் கிடைப்பதே இல்லை. பின்தங்கி இருக்கும் மலையக கல்வி அபிவிருத்திக்கு மாகாணசபையின் வளங்கள் மட்டும் போதாது. மத்திய அரச வளங்களும் அவசியம். அதற்கு தேசிய பாடசாலைகள் அவசியம்.

இந்நிலையில் மலையகத்தில் எந்தவொரு பாடசாலையும் தேசியப்பாடசாலையாக தரம் உயர்த்தப்படக் கூடாது என்றும் ஒரு தேசிய பாடசாலையும் தேவை இல்லையென்றும் இ.தொ.கா தலைவர்கள் அரசாங்கத்திடம் கூறியிருக்கின்றனர். இது அறிவீனமானதும் அரசியல் ஆதிக்க உள் நோக்கம் கொண்டதுமாகும்.

தேசிய பாடசாலை என்ற பெயர்ப் பலகையுடன் மட்டும் எவ்வித வளங்களும் இல்லாமல் தேசிய பாடசாலை இருக்க முடியாது. தேசியப்பாடசாலை என்று தரம் உயர்த்தப்பட்டவுடன் அப்பாடசாலையின் நிர்வாகம் தேசியகல்வி நிர்வாகத்தின் கீழ் வருவதுமட்டுமன்றி அதற்கான தேசிய வளங்களும் பகிர்ந்தளிக்கப்படும். அதனால் மலையகத்தில் தேசியப்பாடசாலைகள் ஏற்படுத்தப்படாமல் அவை வெறும் பெயர்ப்பலகையுடன் மட்டும் இயங்கப்போவதில்லை. அப்படி வெறும் பெயர்பலகையுடன் இயங்குவதை மாற்ற பாராளுமன்றத்தில் இருக்கும் மலையக உறுப்பினர்கள் குரல் எழுப்ப முடியாதா? அமைச்சர்கள் அமைச்சரவையில் குரல் எழுப்ப முடியாதா?

மலையகத் தமிழ் பாடசாலை கல்வி என்பது மாகாண கல்வி மட்டுமல்ல, தேசியக்கல்வியையும் உள்ளடக்கியதாகவே இருக்க வேண்டும்.

மலையக பாடசாலைக்கல்வி மத்திய அரசின் கீழ் கொண்டுவரப்படும் வகையில் சில தேசிய பாடசாலைகள் ஏற்படுத்தப்பட வேண்டும். அத்தேசிய பாடசாலைகளின் விவகாரங்களை இ.தொ.கா அதனது கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியாது என்ற குறுகிய, சுயநல, ஆதிக்க அரசியல் நோக்கத்தினால் மலையகக் கல்வியே பாதிப்படையும்.

இலங்கையிலுள்ள ஏனைய சமுகத்தவரின் பாடசாலைக்கல்வி மாகாண மட்டத்திலும் வளர்ச்சியடைகிறது. தேசிய மட்டத்திலும் வளர்ச்சியடைகிறது. அதவாது மாகாணசபைகளின் கீழும் பாடசாலைகள் நிர்வகிக்கப்படுகின்றன. தேசியப் பாடசாலைகள் மத்திய அரசினாலும் நிர்வகிக்கப்படுகின்றன.

மலையகத் தமிழ்ன் பாடசாலைகள் மாகாணசபைகளிப் வளங்களைப் பெற்று மாகாண மட்டத்தில் மட்டும் இருக்க வேண்டும் என்ற வரையறையை, விதிப்பதற்கு மலைய கத் தலைவர்கள் எனப்படும் இ.தொ. கா தலைவர்களுக்கு எவ்வித அதிகாரமோ உரிமையோகிடையாது.

இந்த அரசியல் உள்நோக்கங்கள் சுயநல போக்குகள் ஆதிக்க நோக்கங்களுக்கு அடிபணியாமல் மலையக கல்விமான்கள் மலைய கல்வியைப் பாதுகாக்க முன்வர வேண்டும். மலையகக் கல்வி அபிவிருத்தி இ.தொ.கா என்பது 'டப்பா விற்குள்' சிறைப்படுத்தப்பட முடியாது. சிறைப்படுத்தப்பட எடுக்கும் நடவடிக்கைளை எதிர்க்கவும் வேண்டும்.

மலையகத்தமிழ் பாடசாலைகளில் சிலவற்றையாவது தேசியப் பாடசாலைகளாக தரம் உயர்த்தும் படி உறுதியான கோரிக்கை விடுக்க வேண்டும்.

**-அழகேசன்-**

# மலையகத்தில் கசிப்பு இராட்சகன்

இன்றைய இலங்கையின் நிகழ்காலச் சூழலில் மலையக மக்கள் புதுப்புது பிரச்சினைகளுக்கு பெருமளவில் முகம் கொடுத்து வருகின்றனர். அதில் அதிக பாதிப்பினை ஏற்படுத்தும் "கசிப்பு" பிரதான இடத்தை வகிக்கிறது. கடந்த ஐந்து, ஆறு தசாப்தங்கள்ளுக்கு முன்பிருந்தே சிறு அளவில் மக்களிடையே பாவனையில் இருந்துள்ளது. ஆனால் ஒரு தசாப்தத்திற்கு முன் தான் இது ஒரு சமூகத்தை அழிக்கும் ஒரு நச்சுக் கருவியாக பயன் பட்டு வருகிறது. இதைப்பற்றி ஆழ்ந்து நோக்குதல் முக்கியமாகும்.

மலையகப்பிரதேசத்தில் கசிப்பு கூடுதலான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. பார்க்கேப்பல், ஹைட்ரி, டெம்பள்ஸ்டோ, வெஸ்டோல், கலபட, போஹில், பின்னோயா, ரொசல்ல, வெலிஓயா, செனன் போன்ற பிரதேசங்கள் பெருமளவான பாதிப்புகளை எதிர்நோக்குகின்றன. இந்த பிரதேசங்களில் எடுத்த கணக்கெடுப்பின்படி 150க்கும் அதிகமான கசிப்பு உற்பத்தியாளர்கள் உள்ளனர் என்று தரவுகள் கூறுகின்றன.

முன்னைய காலங்களில் கசிப்பு என்பது பழங்களினால் பெறப்படும் சாறு என்று முதியவர்கள் கூறக் கேட்டிருக்கிறோம். அது குடிப்பவர்களுக்கு ஒரு சாட்டாகவும் இருந்து வந்துள்ளது. உண்மையில் கசிப்பு என்பது அழுகிய பழங்களும் அதனுடன் யூரியா, துருப்பிடித்த கம்பி, களைநாசினி போன்ற மிகக் கடுமையான இரசாயன பதார்த்தங்கள் சேர்த்தே தயாரிக்கப்படுகிறது. இது பலருக்கு தெரியாத ஒன்றாகவே இருக்கிறது.

இதன் காரணமாக பலவிதமான சமூகப் பாதிப்புகள் இடம் பெற்றுள்ளன. குறிப்பிட்ட காலப்பகுதிகளில் அளவுக்கதிமான திடீர் மரணங்கள் ஏற்பட்டுள்ளன. இதற்கு கசிப்பு பாவனையே காரணமாகும். இது தவிர இவர்களுக்கு பிறக்கும் வாரிசுகள் பலம் குறைந்தவர்களாகவும், கிரகித்தல் ஆற்றல் குறைந்தவர்களாகவும் காணப்படுகின்றனர். அது மட்டுமன்றி இது பிறப்பை கட்டுப்படுத்தும் ஒரு பதார்த்தம் என விஞ்ஞான ரீதியாக நீருபிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக மலையகத்தில் கல்வி வளர்ச்சி சமீப காலத்தில் பெருமளவு வீழ்ச்சி கண்டுள்ளது என்பது குறிப்பிட்டுக் கூற வேண்டிய ஒரு நிகழ்வாகும்.

மேலும் இதன் மூலமாக பல விதமான கலாச்சார சீரழிவுகள் இடம் பெறுகின்றன. பாலியல் ரீதியான துஷ்பிரயோகங்கள் இதன் மூலம் மலையகத்தில் அதிகரித்து விட்டது. பார்க்கேப்பல் தோட்டப்பகுதியில் 2003ம் ஆண்டின் நடுப்பகுதியில் ஒரு தந்தை உச்ச கசிப்பு வெறியால் பூப்படைந்து 15 நாட்களே ஆன தனது மகளை கற்பழித்து கொலை செய்த அவலம் நேர்ந்தது. தற்போது அவர்கள் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பி விட்டனர். இதன் பாதிப்புகளை சாதரண மனிதன் என்ற ரீதியை விட்டு ஒரு சரியான அரசியல் ஆய்வாளன் என்ற ரீதியில் நோக்கும் போது கசிப்பு என்பது அரசியல் ரீதியில் ஊக்கப்படுத்தும் ஒன்றாகவே உள்ளது. பேரினவாத அரசியற் சக்திகளுக்கு எமது பிரதேச மக்களை நலிவடையச் செய்ய வேண்டிய தேவை நெடுங்காலமாகவே இருந்து வந்துள்ளமை புத்திஜீவிகளுக்கு தெரிந்த விடயம்.

நமது சமூகத்தை உருக்குலைத்து போராட்ட குணங்களை இழந்த ஒரு கையேந்தும் சமூகமாக மாற்றும் ஒரு திட்டமிட்ட நடவடிக்கையாகவே இதை நோக்க வேண்டும். இதை மக்களுக்கு தெளிவுபடுத்துவது இன்றுள்ள அரசியல் தலைமைகளின் தலையாய கடமையாகும்.

ஆனால் அவர்கள் தங்கள் கடமையில் இருந்து கருத்து தவறி வருகின்றனர். தமது சமூகத்திற்கு தவறிழைத்து விட்டனர். மலையகத்தை சுட்டிக்காட்டும் எந்த வொரு வரலாற்று ஏடும் இத்தகைய சுயநலச் தலைமைகளை மன்னிக்க கூடாது. மன்னிப்பதற்குக் கூட அருகதையற்றவர்கள் எமது மலையகத் தலைமைகள்.

**புயல் என்று நினைத்தோம் எங்களுர் தலைமைகளை-ஆனால் அவர்கள் வெறும் புழுதிகளே!**

மலையகப்பகுதியில் கசிப்பு உற்பத்தி இலகுவாக பணம் உழைக்கும் ஒரு தொழிலாக மாறிவிட்டது. இன்றைய இளம் சமுதாயம் பெருமளவில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபடுகிறது. பணம் வந்தால் போதும் நமது சமூகம் எக்கேடு கெட்டாலும் நமக்கென்ன என்ற சுயநலப் பிற்போக்குத்தனத்திலேயே கசிப்பு உற்பத்தியும் விநியோகமும் நடைபெறுகிறது. அது மட்டுமின்றி இத்தொழிலை அரசியல் வாதிகளின் கைக்கூலிகளாக இருப்பவர்கள்தான் மேற்கொண்டு வருகின்றனர். இவர்கள் இப்பிரதேசத்தில் காடைத்தனங்களில் ஈடுபட்டு அச்சுறுத்தி பயமுறுத்தி வருகின்றனர். காட்டுமிராண்டித்தனமாக வெட்டுக்குத்து கொலைக் கலாச்சாரத்தில் ஈடுபட்டும் வருகின்றனர். பொலிஸாரின் துணைகொண்டுதான் இவர்கள் இத் தொழிலை செய்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். இது தொடர்பில் மலையக சமூகத்தின் மீது அக்கறை கொண்ட ஒவ்வொருவரும் கவனமெடுப்பது அவசியமும் தேவையாகும்.

**சுந்தரி**

# மேல் கொத்மலைத் திட்டத்தைத் தடுத்து நிறுத்த மக்கள் இயக்கம் மேலும் பலம் பெற வேண்டும்

மேல் கொத்மலைத் திட்டமானது யப்பானிய உதவியோடு மலையகத்தைப் பலவீனப்படுத்தி பேரினவாத ஆளும் வர்க்க சக்திகள் தமது உள் நோக்கங்களை அடைவதற்கான ஒன்றாகும். இதனை இன்று மலையக மக்கள் உணரக் கூடிய நிலைக்கு வந்துள்ளனர். ஏற்கனவே மேல் கொத்மலைத் திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கம் தொடர்ச்சியாக முன்னெடுத்து வந்த எதிர்ப்பியக்கமானது மக்களை விழிப்பூட்டி அதன் அபாயம் பற்றி சிந்திக்க வைத்துள்ளது. இருப்பினும் தலவாக்கெல்லை அட்டன் நுவரேலியா பிரதேசங்களில் நடவடிக்கைகளில் ஈடுபடும் மக்களின் பலம் மேலும் அதிகரிக்க வேண்டும். அப்பொழுது தான் அரசாங்கம் மூர்க்கத்தனமாக அத்திட்டத்தை நிறைவேற்ற முயல் வதைத் தடுத்து நிறுத்தலாம்.

மக்கள் ஆயிரம் லட்சம் எனத் திரண்டு ஒரு பரந்த வெகுஜனப் போராட்டத்தை முன்னெடுத்தால் அதனைத் தடுத்து நிறுத்த எத்தகைய சக்தியாலும் முடியாது. இது வரலாறு மீண்டும் மீண்டும் மெய்ப்பிக்கும் உண்மையாகும். அதற்கு ஒரு அண்மைய உதாரணம் தான் லத்தீன் அமெரிக்க நாடான பொலிவியா நாட்டு மக்கள் நடாத்தி வெற்றி பெற்ற வெகுஜனப் போராட்டமாகும். அந்த நாட்டின் இயற்கை வளம் எரிவாயுவாகும். ஆனால் அந்த எரிவாயுவை அமெரிக்க பிரித்தானிய மற்றும் கம்பனிகள் கொள்ளையிட்டுச் செல்கின்றனர். இதனால் பொலிவியா நாட்டின் எழுபது வீத மக்கள் வறுமையில் வாடி வந்துள்ளனர். ஆனால் அந்த மக்கள் சும்மா இருந்து விடவில்லை. ஏமாற்றும் தமது நாட்டின் தலைமையை ஏற்று ஆமாம் சாமி போடவில்லை. இவ் ஏகாதிபத்தியச் சுரண்டலுக்கு எதிராக எரிவாயுக் கம்பனிகளைத் தேசியமயமாக்கும்படி லட்சக்கணக்கான மக்கள் வீதியில் இறங்கினர். அதற்கு உடன்பட மறுத்த அந்நாட்டு அதிபரைப் பதவி துறக்கச் செய்தனர். பல கி.மீ.தொலைவிலிருந்து வந்து தலைநகர் லாபாசாவில் இரு வாரங்களாகத் தங்கியிருந்தே பொலிவிய உழைக்கும் மக்கள் போராடினர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

எனவே இந்நாட்டிலும் மக்கள் தமது நியாயமான கோரிக்கைகளுக்குப் போராடி வெற்றி பெற முடியும். மேல் கொத்மலைத்திட்டம் மலையகத் தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி அப்பிரதேசத்தில் வாழும் சாதாரண சிங்கள மக்களுக்கும் அபாயகரமானதாகும். முழு நாட்டிற்கும் நாசகரமானதாகும்.

மேலும் மேல்கொத்மலைத்திட்ட எதிர்ப்பு இன்று பல மட்டங்களிலும் உணரப்பட்டு அதற்கு எதிராக அணி திரளும் ஆர்வத்தை உருவாக்கி வருகிறது. ஆனால் இரண்டு ஆதிக்க அரசியல் தொழிற்சங்க தலைமைகளும் சில சுயநலப் படித்த கனவான்களுக்கும் தான் தத்தமது சொந்த இருப்பு உள்நோக்கத்திற்காக அதனை எதிர்த்து வருகின்றனர். எனவே அடிப்படையில் மலையகத்தையும் அதன் மக்களையும் நேர்மையாக நேசிப்பவர்கள் அனைவரும் ஏமாற்றுத் தலைமைகளை நம்பி காலத்தை வீணாக்காது இன்றைய நிலையில் அரசியல் தொழிற்சங்க குறுகிய நிலைகளைக் கடந்து ஐக்கியப்படல் வேண்டும். அதன் மூலம் மேல் கொத்மலைத் திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கத்தை மேலும் விரிவுபடுத்தி பலப்படுத்த வேண்டும் என்பது இன்றைய அவசியத் தேவையாகும்.

# இந்திய தேயிலைத் தோட்டத் தொழிலாளர் போராட்டம்

இந்தியாவின் கிழக்கும் பிராந்தியத்தில் அமைந்துள்ள 300க்கு மேற்பட்ட தேயிலைத் தோட்டங்களின் தொழிலாளர்கள் மூன்று லட்சம் பேர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். சம்பள உயர்வு தொழில் பாதுகாப்பு மற்றும் கோரிக்கைகள் சலுகைகள் வழங்கப்படல் வேண்டும் என்பதே தொழிலாளர் போராட்டத்தின் மையமாகும். ஆனால் உலகச் சந்தையில் தேயிலை விலை வீழ்ச்சி. உற்பத்தி நிறைவாக இல்லை தோட்டங்கள் நட்டத்தில் இயங்குகின்றன என்று கூறியே தோட்ட சொந்தக்காரர்களும் அவர்களது கம்பனிகளும் தொழிலாளர்களின் கோரிக்கையை மறுத்து வருகின்றன. ஒரு மாதகாலப் பேச்சுவார்த்தை தோல்வியடைந்ததைத் தொடர்ந்து மூன்று லட்சம் தொழிலாளர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் இறங்கினர். இதனால் நாள் ஒன்றுக்கு பத்து மில்லியன் (ஒருகோடி) ரூபா இழப்பு ஏற்படுவதாக கம்பனிகள் ஒலமிடுகின்றன. நமது நாட்டின் மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு மற்றும் கோரிக்கைகளில் கூறப்படும் முதலாளித்துவ சுரண்டல் குரல்களே அங்கும் கேட்கின்றன. இங்கும் அங்கும் எங்கும் வர்க்க சுரண்டல் என்பது ஒரே விதமானதேயாகும். "முடிவற்ற சுரண்டலின் கீழ் போதும் போதும் என்றாகி விட்டது. எனவே போராடுவதைத் தவிர வேறு வழி இல்லை" எனக் கூறியே இவ் இந்திய தேயிலை தோட்டத் தொழிலாளர்கள் போராடி வருகிறார்கள்.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை
# புதிய பூமி
පුදිය පූමි Puthiya Poomi
சுற்று12 ஒகஸ்ற் 2005 பக்கம்12 விலை 12/- சுழற்சி 82

எஸ்.47,3ம் மாடி , கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி.
கொழும்பு 11, இலங்கை. தொ.பே: 2435117,தொலை நகல்:011-2473757
ஈ-மெயில் : puthiyapoomi@hotmail.com

## பிரதமரை விளங்கிக்கொள்ளுங்கள்

பொதுநிதிகள் மோசடி செய்யப்படுவதும் பொதுவசதிகளை தனிப்பட்ட தேவைகளுக்கு பயன்படுத்தப்படுவதும் முதலாளிய அமைப்பில் நாளாந்தம் நடக்கும் விவகாரங்களாகும். கடந்த வருடம் டிசம்பர் மாதம் இடம்பெற்ற சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படுவதற்கு பிரதமருக்கு உதவியாக கிடைத்த 82 மில்லியன் ரூபாய் நிதி அமைச்சரவை அங்கீகாரமின்றி பிரதமர் ராஜபக்சவின் தனிப்பட்ட வங்கிக்கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

சுனாமி நிவாரண மீளமைப்பிற்கென உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் கிடைக்கும் நிதியுதவிகள் இலங்கை மத்திய வங்கியில் இருக்கும் அழிவு நிவாரண நிதியக் கணக்கில் வைப்பிலிடப்பட வேண்டும் என்பது அமைச்சரவை முடிவாகும்.

ஜனாதிபதி செயலக பணிப்புரைகளுக்கு மாறாக "பிரதமரின் புனர்ஜீவன நிதியம்" என்ற பெயரில் மக்கள் வங்கியில் திறக்கப்பட்டுள்ள கணக்கில் சுனாமி நிவாரணத்திற்கென கிடைத்த நிதிகள் யாவும் வைப்பிலிடப்பட்டன. பின்னர் இதிலிருந்து ஸ்ராண்டட் சாட்டட் வங்கியின் இராஜகிரிய கிளையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ச அவரின் சகோதரர் சாமல் ராஜபக்ச அவரின் நெருங்கிய சகாவான மஹிந்த குணவர்தன பேராசிரியர் ஏபாசிங்ஹ ஆகியோரின் பெயர்களில் திறக்கப்பட்டுள்ள "ஹெல்பிங் அம்பாந்தோட்டை" என்ற கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது.

சுனாமிக்கு பிறகு கிடைத்த பெருந்தொகைப் பணத்தை திறைசேரி கணக்கிலோ அல்லது மத்திய வங்கியிலுள்ள அழிவு நிவாரண நிதிய கணக்கிலோ வைப்பிடாமல் பிரதமர் தமது தனிப்பட்ட கணக்கில் வைப்பிலிட்டது ஏன்? அதற்கான காரணங்களை தெரிந்து கொள்ள முடியாவிட்டாலும் தனிப்பட்ட கணக்கில் பொதுவான நிதிகள் வைப்பிலிடப்படும் போது மோசடிகள் பிறழ் கையாடல்கள் நடைபெறுவதற்கு தாராளமாகவே இடமிருக்கிறது.

பிரதமரின் இந்நடவடிக்கையானது அமைச்சரவையின் தீர்மானத்திற்கு முரணாவதுடன் பாராளுமன்றத்தை பிழையாக வழிநடத்துவதாகும் .

இது பற்றி ஐ.தே.கட்சி பாராளுமன்ற குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பொலிசாருக்கு முறைப்பாடு செய்துள்ளது.

சுனாமி நிவாரணம் மீளமைப்பு என்பவற்றை மேற்கொள்ள பொதுகட்டமைப்பை ஏற்படுத்துவதற்காக அரசாங்கத்துக்கும் புலிகள் இயக்கத்திற்குமான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் அரசாங்கத்தின் சார்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்சவை கையெழுத்திடும் படி ஜனாதிபதி கேட்டதற்கு இவர் மறுத்து விட்டதாக செய்திகள் வெளியாகி இருந்தன.அதேவேளை பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தப் பிரதியை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும்படி கேட்டதற்கும் அவர் மறுத்துவிட்டார். இதிலிருந்து சுனாமி மீளமைப்பு நிவாரணம் தொடர்பாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவருக்கென தனியான நிகழ்ச்சி நிரலை கொண்டிருந்ததாகவே தெரிகிறது.

அவ்வாறு தனிப்பட்ட கணக்கில் சுனாமி நிவாரண நிதியை வைப்பிலிட்டதற்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தை பெற்றிருந்ததாக பிரதமர் தெரிவித்திருந்தபோதும் அது அமைச்சரவை சுற்று நிருபத்திற்கு முரணாகும். அதாவது அமைச்சரவை அவ்வாறான அனுமதியை வழங்கி இருக்கவும் இல்லை. மாறாக அவரது தனிப்பட்ட கணக்கிலிருக்கும் பணத்தை மத்திய வங்கியில் இருக்கும் சுனாமி நிவாரண நிதியக் கணக்கிற்கு மாற்றும்படி அமைச்சரவை தீர்மானித்திருக்கிறது. இது பிரதமரை இக்கட்டில் போட்டிருக்கிறது.

இவ்விடயம் பத்திரிகைகளில் வெளியாகி இருக்கிறது. அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக வேண்டும் என்ற குறிக்கோளில் விடயங்களை நகர்த்திக் கொண்டிருக்கும் பிரதமருக்கு இவ்விடயம் அம்பலமானது பாரிய பிரச்சினையாகியுள்ளது. ஊழல்கள் பற்றி பெரிதாக பிரசாரங்களை செய்யும் ஜே.வி.பி சுனாமி நிவாரண நிதியை பிரதமர் அவரது தனிப்பட்ட கணக்கில் வைப்பிலிட்டது பற்றி எதுவுமே பேசவில்லை. பிரதமர் பொதுக்கட்டமைப்பு தொடர்பாக வெளியிட்ட கருத்துக்களும் எடுத்த நடவடிக்கைகளும் பொதுக் கட்டமைப்பை எதிர்ப்போருக்கு குறிப்பாக ஜே.வி.பியின் நிலைப்பாட்டிற்கு உதவுவதாகவே இருந்தன.

சமாதான நடவடிக்கைகளில் அனுசரனையாளராக இருக்கும் நோர்வே மீது பல விமர்சனங்களை பிரதமர் செய்தார். பொதுக்கட்டமைப்பு விடயத்தில் முரண்பட்டுக்கொண்டு ஐ.ம.சு.மு அரசாங்கத்திலிருந்து ஜே.வி.பி வெளியேறிய வேளையில் பிரதமரை சந்தித்த நோர்வே அதிகாரிகளிடம் பிரதமர் கடிந்து கொண்டுள்ளார். "ஐ.ம.சு.க அரசாங்கத்தை உடைக்க வேண்டுமென்ற உங்கள் நோக்கம் நிறைவேறிவிட்டதுதானே "என்று வினா எழுப்பியுள்ளார். மேற்கு நாடுகளை விமர்சிக்கும் அவர் இந்தியாவுடன் மென்மையான மனத்துடனேயே நடந்துகொள்கிறார். இலங்கையில் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் பணிகளில் இந்தியாவுக்கே தலைமை பாத்திரம் இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி வருகிறார்.

எனவே பிரதமர் ராஜபக்ஷ யார்? அவரின் பின்னால் இருக்கும் உள்நாட்டு சக்திகள் எவை? வெளிநாட்டு சக்திகள் எவை? இவை யாவும் ஆராயப்பட வேண்டியவையாகும்.

பழைய சுதந்திரக்கட்சித் தலைமைகள் போன்றோ சந்திரிகாவின் தலைமை போன்றோ மஹிந்த ராஜபக்ஷவின் அரசியல் வெளிப்படையாக இருக்கப் போவதில்லை. அதிகாரத்தினை கைப்பற்றுவதற்கான அவரின் அவாவிற்குப் பின்னால் சந்தர்ப்பவாத நடவடிக்கைகள் நிறையவே நிறைவேற்றப்பட இருக்கின்றன. ரணில் விக்கிரமசிங்ஹ நேரடியாக அமெரிக்க மேற்குநாடுகளின் அக்கறைகளுக்குட்பட்டவராக இருக்கிறார். மஹிந்த ராஜபக்ஷ் மறைமுகமாக இந்திய மேலாதிக்க அக்கறைகளுக்குட்பட்டவராக இருக்கவே முயற்சிக்கிறார். நாட்டின் அரசியல் தலைமைக்கு வருவதற்கு அவர் அவ்வாறான முயற்சிகளில் இறங்கியுள்ளார்.

நாட்டின் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை இவர் முன்னெடுக்க மாட்டார். சுனாமி நிவாரண மீளமைப்பு நடவடிக்கைகளும் முறையாக முன்னெடுக்கப்பட்டமாட்டாது. இவர் இந்நாட்டின் உழைப்பாளர்கள் விவசாயிகள் சாதாரண மக்களினதும் அடக்கப்படும் தேசிய இனங்களினதும் நண்பராக இருக்கப்போவதில்லை. என்பதே உண்மையாகும். ரணிலை போன்று இவரும் ஏறக்குறைய இலங்கையை ஏகாதிபத்தியத்தின் இந்திய மேலாதிக்கத்தின் அடிவருடும் நாடாக்குவதிலேயே அக்கறையாளராக இருப்பார் என்றே நம்பலாம்.

ஆசிரியர் குழு

## ஜனாதிபதித் தேர்தல் யாருடைய தேவைக்காக? இன்றைய அரசியலமைப்பு மக்களுக்குரியதா!

ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதத்தில் நடாத்தப்பட வேண்டும் என எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி இடித்துரைக்க ஆரம்பித்து விட்டது. அதற்கான பிரசாரத்தை கடந்த யூலை 2ம் திகதி காலியில் இருந்து ஆரம்பித்து பதினொரு நாட்களாக ஊர்வலம் நடாத்தி இறுதியில் 12ம் திகதி கொழும்பில் பெரும் சனத்திரளைத் திரட்டித் தமது பலத்தைக் காட்டியுள்ளனர். அத்துடன் ரணில் விக்கிரமசிங்கவைத் தமது ஜனாதிபதி வேட்பாளர் எனவும் அறிவித்துள்ளனர். இதனடிப்படையில் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரபல அரசியல் தூண்கள் எல்லாம் ஜனநாயகம், மக்களின் வாக்களிக்கும் உரிமை, சுதந்திரம், அடிப்படை உரிமைகள் பற்றியெல்லாம் நாளாந்தம் விளக்கவுரைகள் நடாத்தி வருகின்றனர். இவற்றையெல்லாம் ஐக்கிய தேசியக் கட்சி சார்பு நிலை வகிக்கும் ஊடகங்கள் மக்களிடம் பல்வேறு கோணங்களிலிருந்தும் புகுத்தி வருகின்றன.

மறுபுறத்திலே ஆட்சியிலிருக்கும் சந்திரிக்கா அம்மையாரின் அரசாங்கம் ஜனாதிபதித் தேர்தல் அடுத்த வருடம் நவம்பரில் தான் நடைபெறும் என அடித்துரைத்து நிற்கிறது. அதற்குரிய நியாயங்களை அமைச்சர்களும், ஜனாதிபதி செயலகப் பேச்சாளர்களும் ஊடகங்களுக்கான அறிக்கை மூலம் தெரிவித்து வருகின்றனர். அரசாங்கக் கட்டுப்பாட்டில் இருந்து வரும் ஏரிக்கரைப் பத்திரிகைகளும் வானொலி வானொளிகளும் அடுத்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் என்பதற்காகப் பிரச்சாரம் செய்து வருகின்றன. இதன் காரணமாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் (சந்திரிகா அம்மையார் இருமுறை பதவி வகித்த காரணத்தால் தேர்தலில் நிற்க முடியாது) யார் என்ற விடயத்தில் அவசரம் ஏதும் இல்லை எனக் கூறி வேட்பாளர் தெரிவு இப்போதைக்குத் தேவை இல்லை என அரசாங்கத் தரப்பில் கூறப்படுகிறது.

இவ்வாறு இரண்டு ஆளும் வர்க்கக் கட்சிகளிடையே ஜனாதிபதித் தேர்தல் பற்றிய நாய் சண்டை ஆரம்பித்திருக்கிறது. இவ் இரு புறத்து குரைப்புகளின் மத்தியிலும் மக்கள் சார்பாக கண்டு கொள்ளப்படவேண்டிய உண்மை விடயங்கள் பற்றி எடுத்துரைப்பது அவசியமானதாகும்.

இலங்கையின் நிலவுடைமை வர்க்க வழிவந்த முதலாளியத் தலைவர்களிடையே கடைந்தெடுத்த முதல் தரப்பிற்போக்கு வாதியாகச் செயலாற்றி மறைந்தவர் ஜே. ஆர். ஜெயவர்த்தன. அமெரிக்க விசுவாசியாகவும் பெருமுதலாளித்துவப் பாதுகாவலனாகவும் பேரினவாத ஒடுக்கு முறையாளனாகவும் செயற்பட்டு வந்த ஜே. ஆர் தான் மறைந்த பின்பும் தனது பிற்போக்குத்தனங்கள். இலங்கை அரசியல் அரங்கில் நிலைத்து நீடித்திருப்பதை உறுதி செய்துவிட்டே கண்களை மூடிக் கொண்டார்.

தூய வெள்ளை உடைதரித்த இந்த முதலாளித்துவ சர்வாதிகாரியான ஜே.ஆர். ஜனநாயகத்தின் பெயரால் கொண்டு வந்ததே இன்று நடைமுறையில் இருக்கும் அரசியல் யாப்பாகும். அதன் கீழான நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கான தேர்தல் பற்றிய சர்ச்சையே தற்போது அரசியல் அரங்கில் முன்னெழுந்து நிற்கின்றது. இன்று நடைமுறையில் இருந்து வரும் அரசியலமைப்பும் அதில் ஜனாதிபதிப் பதவி பற்றிக் கூறப்பட்டுள்ள உறுப்புரைகள் விதிகள், உபவிதிகள் பற்றிய சட்ட நுணுக்கங்களுக்கு அப்பால் நாட்டுக்கும் மக்களுக்கும் இவ் அரசியலமைப்பும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையும் எவற்றைச் சாதித்துக் கொண்டன என்பதையே அரசியல் சிந்தனைத் திறனுடையோர் அவதானிக்க வேண்டும்.

1978ம் ஆண்டில் ஜே.ஆர். தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி தமக்குக் கிடைத்த ஆறில் ஐந்து பாராளுமன்றப் பெரும்பான்மையை வைத்தே இன்றைய அரசியலமைப்பை கொண்டுவந்தது. அதன் மூலம் தேர்தல் இன்றியே ஜே. ஆர் தன்னைத்தானே நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகவும் ஆக்கிக் கொண்டார். எதிர்க்கட்சி வரிசையில் எட்டு ஆசனங்களுடன் இருந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியான சிறிமாவோ பண்டாரநாயக்கவின் அரசியல் உரிமைகளைப் பறித்து தேர்தலில் நிற்க விடாது தடுத்தும் கொண்டார் ஜே. ஆர். அத்துடன் பாராளுமன்றத்தின் ஆயுளை சர்வசன வாக்கெடுப்பின் மூலம் நீடித்து ஜனாதிபதித் தேர்தலில் குறுக்கு வழிகள் மூலம் வெற்றி பெற்றார். 12 ஆண்டுகள் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியாக இருந்து நாட்டு விரோத மக்கள் விரோத தொழிலாளி வர்க்க

**வெகுஜனன்**

விரோத தேசிய இனங்களுக்கு எதிரான சகல சர்வாதிகார நடைமுறைகளையும் செய்து கொண்டார். குறிப்பாக நாட்டின் தேசிய இனப்பிரச்சினையை பேரினவாத ஒடுக்குமுறை யுத்தமாக 1979ம் ஆண்டிலிருந்தே முன்னெடுத்தார். இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் மூலம் இந்தியப் படைகளை இங்கு வரவழைத்து வடக்கு கிழக்கில் நிலை கொள்ள வைத்ததுடன் தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட அதே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை முற்று முழுதாகப் பயன் படுத்தப் பட்டது.

ஜே.ஆரின் பதவிக் காலத்திற்குப் பின் ஆர். பிரேமதாசாவும் அவரது அகால மரணத்தின் பின் அதே கட்சியைச் சேர்ந்த டி. பி. விஜயதுங்காவும் ஜனாதிபதியாகப் பதவி வகித்தனர். இவர்கள் அனைவரினதும் பதினேழு வருடகால நிறைவேற்று அதிகார

> இன்றைய அரசியலமைப்பும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையும் சொத்து சுகம் கொண்ட மேட்டுக் குடி உயர்வர்க்கத்திற்கும் அந்நிய ஏகதிபத்திய சக்திகளுக்கும் உரியதேயாகும். சாதாரண உழைக்கும் மக்களுக்குரியதல்ல

ஜனாதிபதி ஆட்சி முறை ஒரு இருண்ட கால ஆட்சியாகவே அமைந்து கொண்டது. வடக்கு கிழக்கில் மட்டுமன்றி தெற்கிலும் இரத்த ஆறு ஓட வைக்கப்பட்டது. அறுபதினாயிரம் இளைஞர் யுவதிகள் மக்கள் கொல்லப்பட்டனர். மேலும் அறுபதினாயிரம் பேர்வரை காணாமல் போயினர். இவையெல்லாம் இன்று மறக்கப்பட வைக்கப்பட்டுள்ளன. கடந்த காலத்தை மறக்கும் எந்த மக்களும், சமூகமும் தமக்குரிய சரியான எதிர்காலத்தைப் பெற முடியாது என்பது உண்மையானதாகும். "நான் மீண்டும் மீண்டும் கடந்தகால நிகழ்வுகளை எடுத்துரைத்து வருவதற்கான காரணம் மக்கள் இலகுவில் கடந்த கால விடயங்களை மறந்து விடுவதாலேயேயாகும்" என ஒரு அறிஞர் கூறி இருந்தமை இவ்வேளை கவனத்திற்குரியதாகும்.

இன்று ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான ரணில் விக்கிரமசிங்க ஒரு பாவமும் அறியாத புனிதமான ஜனாநாயகவாதி போன்று காட்சிப்படுத்தப்படுகிறார். அவர் அவப்பெயர் பெற்ற ஐ. தே. கட்சியின் பதினேழு வருடகால ஆட்சியின் பிரதான பங்காளியும் முன்னணி அமைச்சர்களில் ஒருவருமாவர். இத்தகைய ஒரு மனிதர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகி நாட்டையும் மக்களையும் தேசிய இனங்களையும் இரட்சிக்கப் போகிறார் எனக் கதையளக்கத் தொடங்கியிருப்பது எவ்வளவு வேடிக்கை தரும் விடயமாகும்.

மறுபுறத்திலே தற்போதைய ஜனாதிபதி சந்திரிக்கா அம்மையார் 1994ம் ஆண்டிலிருந்து இன்று வரை பத்தரை ஆண்டுகளாக நிறைவேற்று அதிகாரப் பதவியில் இருந்து வந்துள்ளார். அவரால் அப்பதவியைப் பாவித்து எவற்றைச் சாதிக்க முடிந்தது என்பதே எழும் பிரதான கேள்வியாகும். 1994ல் ஐ. தே. கட்சியைத் தமது புள்ளடி போடுகையால் மக்கள் தோற்கடித்து சந்திரிக்காவின் தலைமையைப் பாராளுமன்றத்திலும் பின் ஜனாதிபதவிக்கும் கொண்டு வந்தனர். மக்களது எதிர்பார்ப்புகளும் நம்பிக்கைகளும் வீணாகினவே அன்றி மக்கள் சார்பாக எதுவுமே நடக்கவில்லை. சமாதானப் புறாவேடமிட்டு பதவிக்கு வந்த சந்திரிகா அம்மையார் இனப்பிரச்சினைக்கு "சமாதானத்திற்கான யுத்தத்தையே" நடாத்த முடிந்தது. தாராளமயம் தனியார்மயத்தை ஐ.தே.கட்சி விட்ட இடத்திலிருந்து தொடர்ந்து முன்னெடுத்தார்.

27 வருடகால ஜனாதிபதி ஆட்சி முறைமையின் கீழ் ஐ.தே.கட்சியும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியம் நாட்டுக்கும் மக்களுக்கும் தேசிய இனங்களுக்கும் எவற்றைச் சாதித்தனர். நாட்டில் வறுமை வேலை இன்மை பெருகியமையைத்தடுக்க முடிந்ததா? விலையேற்றங்கள், கட்டண உயர்வுகள், கல்வி சுகாதாரத்துறைச் சீர்கேடுகளைத் தடுத்து நிறுத்த முடிந்ததா? சம்பள உயர்வுகளை வாழ்க்கைச் செலவின் அதிகரிப்புகளுக்கு ஏற்பவழங்க முடிந்ததா? யுத்தமாக்கப்பட்ட தேசிய இனப்பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வு காணப்பட்டதா? ஒரு புறத்தால் அமெரிக்காவும் மறுபுறத்தால் இந்தியாவும் ஏனைய ஐரோப்பாவும் யப்பானும் நாட்டிற்குள் பொருளாதார அரசியல் ராணுவ முனைகளின் ஊடாக ஊடுருவல் செய்து வந்தமையைத் தடுக்க முடிந்ததா? நாட்டு வளங்கள் கொள்ளையிட்டுச் செல்வதற்கு நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை உடந்தையாக இருந்து வந்ததே தவிர அவற்றைத் தடுத்து நிறுத்தவேயில்லை. நாட்டில் என்று மில்லாத வகையில் சமூகச் சீரழிவுகள் ஊடகங்கள் வாயிலாகப் பரப்பட்டு வந்துள்ளன. போதைப் பொருள் விநியோகம் பாவனை அதிகரித்துள்ளன. கொலைகள், தற்கொலைகள், பாலியல் வல்லுறவுகள் நாளாந்த வழமைகள் ஆகி உச்ச நிலையைத் தொட்டு நிற்கின்றன. இவற்றை யெல்லாம் அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையால் தடுக்கவோ அல்லது இல்லாத தொழிக் கவோ முடிந்ததா?

கடந்த 27 வருட ஜனாதிபதி ஆட்சி முறையில் இரண்டு பேரினவாத பெருமுதலாளித்துவ ஆளும் வர்க்க கட்சிகளாலும் அவற்றின் ஜனாதிபதிகளாலும் நாட்டிற்காக மக்களுக்காக எதையும் செய்ய முடியாமல் போனதற்கான அடிப்படைக் காரணம் யாது. எனவே மக்கள் செக்கிழுத்த பாராளுமன்றப் பாதையில் மாறி மாறி இரண்டு ஆளும் வர்க்க கட்சிகளையும் அல்லது ஜே. வி. பி போன்ற பேரினவாதக் கட்சியையோ பதவிகளுக்கு கொண்டு வர முன்னிற்பதை மக்கள் அரசியல் ரீதியாகவும் அறிவு பூர்வமாகவும் சிந்திக்க வேண்டும். இன்றைய அரசியலமைப்பு-நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை போன்றவற்றுக்கு அப்பால் மக்களுக்கான புதிய அரசியலமைப்புக்காக மக்கள் போராட்டக் களத்தில் இறங்காத வரை நாட்டுக்கும் மக்களுக்கும் அழிவுகள் அதிகரிக்குமே அன்றி மீட்சியோ சுபீட்சமோ ஏற்பட மாட்டாது என்பதே உண்மையும் யதார்த்தமுமாகும்.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# சிங்கள முஸ்லீம் தலைமைகளும் பொதுக்கட்டமைப்பு நிலையும்

பொதுக்கட்டமைப்பு என்ற எண்ணக்கரு உருவானது எப்படி? வடக்கு கிழக்கு மாகாணங்களில் சுனாமியினால் ஏற்பட்ட பாதிப்பே அதற்குக் காரணமாகும்.

அம்பாந்தோட்டை மாத்தறை காலி, களுத்துறை. கொழும்பு நீர்கொழும்பு ஆகிய பகுதிகளை விட, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் சுனாமியின் பாதிப்பு அதிகமானதாகும்.

சுனாமி மீளமைப்பிற்கும் நிவாரணத்திற்கும் எமது நாட்டில் வளமில்லை. வெளிநாட்டு உதவிகளையே நாடி நிற்க வேண்டியிருந்தது. அந்த உதவிகள் உறுதி செய்யப்பட்டிருந்தாலும் அரசாங்கத்திற்கு கிடைக்கும் அவ்வுதவிகள் வடக்கு கிழக்கு பகுதிகளுக்குப் பயன்படுத்தப்படுத்தப்படும் என்ற உத்தரவாதம் அளிக்கப்படுவதற்கான ஏற்பாடுகளை உதவி வழங்கும் வெளிநாடுகள் எதிர்பார்த்தன. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கக் கட்டுப்பாட்டு பகுதிகளில் புனரமைப்பு நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வெளிநாட்டு உதவிகள் நேரடியாக அப்பிரதேசங்களை சென்றடைய த.வி.பு இயக்கத்திடம் அவ்வுதவிகள் கிடைக்க வேண்டுமென த.வி.பு.இ வேண்டுகோள் விடுத்திருந்தது.

இலங்கையில் நெறிமுறையான நிறுவனமாக இலங்கை அரசாங்கத்தையே உலக நாடுகள் கொள்வதால் இலங்கை அரசாங்கத்திற்கே நிதியுதவிகளை வழங்க முடியுமென்று கூறின. ஏப்ரல் மாதம் 16,17 ஆம் திகதிகள் கண்டியில் நடை பெற்ற உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டிலும் பொதுக்கட்டமைப்பிற்கான அவசியம் வலியுறுத்தப்பட்டது. ஆனால் அவை வடக்கு கிழக்கு பகுதிக்கும் சென்றடையும் நிர்வாக பொறிமுறை அவசியமென வற்புறுத்தின. அந்த வற்புறுத்தலின் அடிப்படையில் சுனாமி நிவாரண மீளமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கத்திற்கும் த.வி.பு.இயக்கத்திற்குமிடையில் சுனாமி ஏற்பட்டு 6 மாதங்களுக்கு பிறகு ஏற்பட்ட புரிந்துணர்வே பொதுக்கட்டமைப்பாகும்.



பொதுக்கட்டமைப்புக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்து அதில் தாம் வெற்றி பெற்று விட்டதாக எக்காளம்விட்டு சிரித்து ஜே.வி.பி, ஹெலஉறுமய, மற்றும் பேரினவாதிகள் நீதிமன்ற வாசலில் நிற்கும் காட்சி

அந்த புரிந்துணர்விற்கு எதிராக பேரினவாதிகள் குரல்கொடுத்தும் ஆர்ப்பாட்டங்களை செய்தும் வந்தன. குறிப்பாக ஜே.வி.பி ஹெறல உறுமய என்பன ஆர்ப்பாட்டங்களைச் செய்தன. பொதுக்கட்டமைப்பிற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. அதன் பிரதி பாராளுமன்றத்திலும் சமர்ப்பிக்-

**பௌத்தசிங்கள பேரினவாதிகள்**
**ஜே.வி.பி- ஹெலஉறுமய கட்சிகள்**
**அமெரிக்க தலைமையிலான சக்திகள்**
**இந்திய பிராந்திய**
**மேலாதிக்கவாதிகள்**
**சிங்கள ஆங்கில ஊடகங்கள்**
**அரசாங்கத்தின் இழுத்தடிப்புக்கள்**
**பொதுக்கட்டமைப்பை முடக்கியுள்ளன.**

கப்பட்டது. ஜே.வி.பி , ஐ.ம.சு. முன்னணி அரசிலிருந்து வெளியேறியது. பொதுக்கட்டமைப்பை எதிர்த்து ஜே.வி.பியும் ஹெல உறுமயவும் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைகள் மனுக்களை தாக்கல் செய்தன. அவற்றை விசாரணைக்கு ஏற்றுக் கொண்ட உயர்நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவையும் வழங்கியுள்ளது.

பொதுக்கட்டமைப்பின் தலைமையகம் கிளிநொச்சியில் இயங்குவதற்கும் பொதுக்கட்டமைப்பு நிதியை பிராந்திய மாவட்ட அமைப்புகள் பரிபாலிக்கவும் இடைக்கால தடை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. அம்மனுமீதான விசாரணை முடிந்து இறுதி தீர்ப்பாக்கப்படும் வரை அத்தடை உத்தரவு அமுலில் இருக்கும். அடுத்த விசாரணை செப்ரடம்பர் 12 ஆம் திகதி மேற்கொள்ளப்படும். சுனாமியால் பாதிக்கப்பட்டு ஏற்கனவே ஏழு மாதங்கள் முடிவடைந்துவிட்டன. இன்னும் இரண்டு மாதங்களுக்கு பிறகுதான் அடுத்த விசாரணை என்றால் அதுவரை அதற்குப் பிறகு தீர்ப்பளிக்கப்படும் வரை சுனாமி நிவாரண புனரமைப்பு நடவடிக்கைகள் பொதுக்கட்டமைப்பினூடாக மேற்கொள்ளப்பட மாட்டாது என்பது உறுதி.

பொதுக்கட்டமைப்பிற்குட்படாத வடக்கு கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் நிவாரண. புனரமைப்பு நடவடிக்கைகள் இயற்கை அனர்த்த நிவாரண நிதியத்திலிருந்து நிதியைப் பெற்று மேற்கொள்ள முடியும். இந்நிதியத்திற்கு பெருந்தொகைப்பணம் சேர்ந்துள்ளது. அத்துடன் பிரதமரிடம் ரூபா83 மில்லியன் கைவசம் இருக்கிறது.

ஆக வடக்கு கிழக்கில் மட்டுமே அரசாங்க மீளமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. அம் மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதை யார் அறிவார்கள்?

உயர்நீதிமன்றம் பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டை சட்டபூர்வமானதென ஏற்றுக் கொண்டிருந்தபோதும் அதனால் விதிக்கப்பட்டுள்ள தடையுத்தரவின் மூலம் வடக்கு கிழக்கில் நிவாரண மீளமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதுள்ளது.

பொதுக்கட்டமைப்பை ஜே.வி.பி ஹெல உறுமய போன்ற பேரினவாத சக்திகள் மட்டுமன்றி குறுகிய தேசியவாத நிலைப்பாட்டையும் மத அடிப்படைவாத நிலைப்பாட்டையும் கொண்ட அனைத்து முஸ்லிம் தலைமைகளும் எதிர்த்தன. அவற்றின் தூண்டுதலாலேயே பொதுக்கட்டமைப்பை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் சில மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. உயர்நீதிமன்றத்தின் தடையுத்தரவை பற்றி தனியார் ஊடகங்கள் தவறான அர்த்தம் கற்பித்துள்ளன என்றும் அவ்வுத்தரவால் பொதுக்கட்டமைப்பை நடைமுறைப்படுத்த தடையேதும் இல்லை என்றும் ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.

உயர்நீதிமன்றத்தீர்ப்பை ஆங்கில பத்திரிகையொன்றுக்கு அறிக்கை செய்தவர் பிழையாக அறிக்கை செய்துள்ளதாகவும் கூறுகிறார்.

அத்தடையுத்தரவு பற்றி அரச ஊடகங்கள் பிழையான அர்த்தம் கற்பித்துள்ளன என்று ஜே.வி.பி கூறுகிறது. அதாவது பொதுக்கட்டமைப்பு உடன் பாட்டை சட்டபூர்வமான உடன்பாடாக உயர்நீதிமன்றம் ஏற்றுக்கொண்டுள்ளது என்று அரச ஊடகங்கள் தெரிவித்திருந்தது சரியல்ல என்றும் ஜே.வி.பி கூறுகிறது.

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புடன் பொதுக்கட்டமைப்பு என்பது முடிவிற்கு வந்துவிட்டதாக த.வி.பு.இ அரசியல் துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

ஐ.தே.கட்சி பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டை சட்டபூர்வமானதாக உயர்நீதிமன்றம் ஏற்றுக் கொண்டதால் ஐ.தே.க. த.வி.பு.இயக்கத்துடன் செய்துகொண்ட யுத்த நிறுத்த உடன்பாடு சமாதான புரிந்துணர்வு ஒப்பந்தம் என்பவையும் சட்டபூர்வமானதாகவே கொள்ளப்பட வேண்டும் என்று கூறுகிறது. ஆனால் பொதுக்கட்டமைப்பிற்கு ஏற்பட்டுள்ள சிக்கலான நிலைமையை தீர்ப்பதற்கான வழிவகைகள் பற்றி ஐ.தே.க கதைப்பதாக இல்லை.

இவ்விடயத்தில் ஐ.ம.சு.மு அரசாங்கம் ஐ.தே.கட்சி என்பன மேலும் நன்றாகவே அம்பலமாகியுள்ளது.

சர்வதேச சமூகம் என்பதும் அம்பலமாகிவிட்டது. பொதுக்கட்டமைப்பிற்கு அமெரிக்கா பிரிட்டன் என்பன நேரடியாக நிதியை வழங்க முடியாது என்று கூறியுள்ளன. தங்களது நாடுகளின் பயங்கரவாத இயக்கப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருக்கும் த.வி.பு இயக்கம் பொதுக்கட்டமைப்பின் ஒரு தரப்பாக இருப்பதால் தமது நிதியை நேரடியாக அதற்கு வழங்கமுடியாது என்று கூறியுள்ளன. அதைத் தொடர்ந்து ஜப்பானும் பொதுக்கட்டமைப்பிற்கு நிதியை வழங்க தயக்கம் காட்டுகிறது.



இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்குமிடையில் பாதுகாப்பு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட் பிறகு அமெரிக்கா இலங்கை சுனாமி நிவாரணப் தொடர்பாக ஏற்கனவே வெளிக்காட்டிய நிலைப்பாடுகளிலிருந்து மாறியுள்ளதை விளங்கிக் கொள்ள முடிகிறது. தென்னாசிய பிராந்தியத்தில் இந்தியாவை ஒரு வல்லரசாக அமெரிக்கா அங்கீகரிக்கும் வகையிலே இப்பாதுகாப்பு உடன்பாடு அமைந்துள்ளது.

தமிழ்மக்கள் தரப்பில் தனிநாடு என்ற அடிப்படையிலே ஆயுதப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. அது சமாதான பேச்சுவார்த்தைகளுடன் உள்ளக சுய நிர்ணயம் என்ற நிலைமைக்கு மாற்ற மடைந்து சமஷ்டி எனக் கூறப்பட்டு பின்னர் வடக்கு கிழக்கிற்கு இடைக்கால நிர்வாக சபை தேவை என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது. 2004 டிசம்பர் 26 சுனாமியுடன் தமிழ் மக்களுக்கு உடனடி தேவை நிவாரணம் புனரமைப்புக்கான பொதுக்கட்டமைப்பு என்று கூறப்பட்டது.

யுத்தநிறுத்த காலகட்டத்தில் படிப்படியாக தமிழ் மக்களின் தரப்பில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் யாவும் புறம்தள்ளப்-

## ~நமது அரசியல்~

பட்ட நிலைமையில் பெரிதாக எதுவுமில்லாத பொதுக்கட்டமைப்பிற்கு த.வி.பு.இயக்கத்தின் இணக்கமும் கையெழுத்தும் மறைமுக நிர்ப்பந்தத்துடன் பெறப்பட்டது.

கையெழுத்து பெறப்பட்டவுடன் சர்வதேச சமூகம் என்பது அதன் சுயரூபத்தை காட்டிவிட்டது. ஜனாதிபதி சந்திரிக்கா அரசாங்கமும் எதுவும் செய்யும் என்று எதிர்பார்க்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. உயர்நீதிமன்றம் பொதுக்கட்டமைப்பு நடவடிக்கைகள் மீது விதித்துள்ள தடை பொதுக்கட்டமைப்பால் எதுவும் ஏற்படப்போவதில்லை என்பதைத் தெளிவாக்கியுள்ளது.

முஸ்லீம் தலைமைகள் எனப்படுபவை வழமை போல் அவற்றின் அரசியல் லாப. சுயநல நோக்கில் அதிகபட்சக் கோரிக்கையை முன்வைத்து பொதுக்கட்டமைப்பிற்கு எதிராக திருப்பின. பொதுக்கட்டமைப்பை முற்றாகப் பகிஸ்கரிப்பதாக அவை தெரிவித்தன. முஸ்லிம் மக்கள் ஒரு தனியான தேசிய இனம். தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படும்போது முஸ்லிம் மக்களுடைய தேசிய அபிலாஷைகளும் உறுதி செய்வதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட வேண்டும். முஸ்லிம் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் குறிப்பாக அவர்கள் வடக்கிலிருந்து விரட்டியடிக்கப்பட்டமை போன்றன முஸ்லிம் மக்கள் மத்தியில் ஆறாத வடுவாக இருப்பதுடன் சந்தேகங்களுடனேயே தமிழ்த்தரப்பினரை நோக்க வைக்கிறது. முஸ்லிம் தலைவர்கள் இந்த சந்தேகங்களை ஊதிப் பெருப்பித்து அவர்களது அரசியல் இருப்பை பாதுகாத்து வருகின்றனர். அவ்வாறான நிலைப்பாட்டினின்றே பொதுக்கட்டமைப்பையும் அவர்கள் அணுகின்றனர். இது சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ள சாதாரண முஸ்லிம் மக்களுடைய நிலைப்பாடல்ல. பாதிக்கப்பட் டுள்ள அவர்களுக்கு நிவாரண மீளமைப்பு நடவடிக்கைகளே தேவை. அரசாங்கம் உட்ப மக்களை ஏமாற்-

**தமிழீழத்திலிருந்து**
**உள்ளக சுயநிர்ணயம்**
**சமஷ்டி முறைமை**
**இடைக்கால நிர்வாகம்**
**பொதுக்கட்டமைப்பு**
**என்றவாறு கீழிறங்கி வர**
**த.வி.பு.இயக்கத்தை**
**நிர்ப்பந்தித்தவர்களின்**
**சுயரூபங்கள்**
**அம்பலமாகியுள்ளன.**

றுகின்ற அனைத்து அரசியல்கட்சிகளும் சுனாமிக்குப் பின் வெற்றுபேச்சுகளினால் ஏழு மாதங்களை ஓட்டிவிட்டன. அவற்றின் அரசியல் நோக் கங்களை நிறைவேற்றிக் கொண்டுள்ளன. சர்வதேக சமுகம் என்பதும் தமது நோக்கங்களை நிறைவேற்றிக் கொண்டன.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் அவலநிலையிலேயே இருக்கின்றனர். தங்களுக்கு நிவாரணம் தேவை என காலி வீதியில் ஆர்ப்பாட்டம் செய்த சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ள மக்களை பொலிஸ் கைது செய்து அமைதிக்கு பங்கம் விளை வித்தார்கள் என்று பலப்பிட்டிய நீதிமன்றத்தில் ஆஜர் செய்து குற்றஞ்சாட்டியுள்ளனர். தெற்கில் இவ்வாறென்றால் வடக்கு கிழக்கின் நிலை என்ன?

முகாம்களில் இருக்கின்றவர்கள் பல விதமான பாதிப்புகளுக்குட்பட்டுள்ளனர். உயிர் உடமை இழந்த இந்த மக்களுக்கு நிவாரணமளிக்கப்படுவதிலும் மீளமைப்பு நடவடிக்கைகளை மேற் கொள்வதிலும் அரசாங்கத்திற்கு அக்கறை இல்லை. பேரின வாதிகளுக்கும் குறுகிய தேசியவாதிகளுக்கும் அக்கறை இல்லை. சர்வதேச சமூகம் எனப்படும் ஏகாதிபத்திய சக்திகளுக்கும் அக்கறையில்லை என்பதே உண்மையாகும்.

யுத்தத்தாலே அழிவுற்ற வடக்கு கிழக்கு மக்களுக்கு சுனாமி பேரிடியாக அமைந்தது. அதற்குத்தானும் நிவாரணம் கிடைக்கும் என்றால் அதனையும் பேரினவாத ஏகாதிபத்திய சக்திகள் தட்டிப் பறித்துள்ளன. இவ்வாறெனில் தேசிய இனப்பிரச்சினைக்கு எவ்வாறு தீர்வு காண முடியும் என்பதே மிகப் பெரும் கேள்வியாகும்.

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# சமூகமும் சனநாயகமும்

## அரசியல் வரலாற்று விசாரணை (03)

பேராசிரியர் சி.சிவசேகரம்

ஒரு நாட்டின் சனநாயகத்திற்கு மனிதரின் அடிப்படையான உரிமைகள் பேணப்படுவது முக்கியமானது. ஐ. நா. பொதுச்சபை மனித உரிமைகள் என்று விவரமான நீண்ட பட்டியல் ஒன்றை அங்கீகரித்துள்ளது. அதில் மனிதரது சிந்தனையும் கருத்துப் பரிமாறலும் நம்பிக்கைகளும் பற்றிய அம்சங்கள் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் பெறுகின்றன. அதே அளவுக்கு மனிதருக்கு உழைத்துண்ணும் உரிமையும் வாழ்வாதாரமான விடயங்களும் கல்வியுரிமையும் வற்புறுத்தப்படுகின்றன.

மனித உரிமைகள் எந்த நாட்டிலாவது முழுமையாகப் பேணப்படுகின்றனவா என்றால் இல்லையென்றே கூறலாம். எனினும் சில நாடுகளில் மனிதரின் அடிப்படையான வாழ்க்கைத் தேவைகளும் சிந்தனைச் சுதந்திரமும் மெச்சத்தக்களவிற் பேணப்படுகின்றன. இது வலிய முதலாளிய வல்லரசுகளில் எங்குங் காணப்படுவதில்லை என்பதை நாம் நினைவிலிருத்துவது முக்கியமானது.

உலகின் அதி செல்வந்த நாடான அமெரிக்காவில் வேலையின்மையும் வறுமையும் உள்ளன. நோயினின்றும் பசியினின்றும் பாதுகாப்பின்மையும் கணிசமான அளவில்

### மனித உரிமைகளும் அவற்றின் அடிப்படைகளும்

நிலவுகின்றன. இவையெல்லாம் மனிதரின் சோம்பலின் விளைவுகளோ உழைப்புத்திறனின்மையின் விளைவுகளோ அல்ல. திட்டமிட்டே வேலையின்மை பேணப்படுகிறது. வறுமைப்பட்டவர்களது நலன்கட்கான நிதி ஒதுக்கீடு குறைக்கப்பட்டு அதனால் மிஞ்சுகிற செலவினம் பணக்காரர்களுக்கு வரிச்சலுகையாக வழங்கப்படுகிறது. அதிலும், வறுமையும் வேலையின்மையும் கறுப்பு இனத்தவரையும் ஸ்பானிய மொழிபேசுவோரையுமே கூடியளவிற் பாதிக்கின்றன. ஆனாலும் பேரளவில் கருத்துச் சுதந்திரம் உள்ளது. ஊடகங்கள் ஒரு சிலரது கைகளில் உள்ளன. மக்கள் தகவல்கட்குத் தொலைக்காட்சியையே பெரிதும் நம்பியுள்ள ஒரு சூழ்நிலையில் ஒரு சில கம்பனிகளால் மக்களுக்கு எதை எப்படிச் சொல்வது என்று முடிவு செய்யமுடிகிறது. ஆனாலும் அமெரிக்கா உலகின் உயர்ந்த சனநாயக நாடு என்றே சொல்லப்படுகிறது.

மறுபுறம் கியூபாவில் கருத்துச் சுதந்திரம் இல்லை என்கிறார்கள். கியூபா அமெரிக்காவின் திட்டமிட்ட நடவடிக்கைகளால் பொருளாதார வளர்ச்சி குறைந்த நிலையில் உள்ள ஒரு நாடு. எனினும் அங்கே யாரும் பசியால் வாடும் நிலை இல்லை. கல்வியறிவில் அது முன்னேறிய முதலாளிய நாடுகட்குச் சமமாக நிற்கிறது. அமெரிக்கர்களது சராசரி ஆயுட்காலத்தை விடக் கியூ மக்களது சராசரி ஆயுட்காலம் கூடுதலானது. கியூபாவில் பத்திரிகைகள் மீது தனியார் நிறுவன ஆதிக்கம் இல்லை. அரசாங்கத்தின் ஆதிக்கம் அதிகம். எனினும் மாற்றுக் கருத்துக்கட்கு இடமில்லை என்று கூற முடியாது. எவ்வாறாயினும் கியூபாவின் சுதந்திரத்திற்கு மிரட்டலாக அமெரிக்கா உள்ளவரையிலும் அமெரிக்கத் தூண்டுதலால் முதலாளிய நாடுகள் கியூபாவின் உள் விவகாரங்களிற் குறுக்கிடுகிற வரையிலும், கியூபா தனது குடிமக்களின் கருத்துச் சுதந்திரத்தையும் அயற் குறுக்கீட்டாளர்களது கருத்துக்களைப் பரப்பும் சுதந்திரத்தையும் வேறுபடுத்திப் பார்க்க வேண்டும்.

எவ்வாறாயினும் கியூபாவில் உள்ளதும் அமெரிக்காவில் உள்ளது போல ஒரு அரச இயந்திரமே. எனினும் இரண்டும் ஒரு முக்கியமான இடத்தில் வேறுபடுகின்றன. கியூபாவின் அரச இயந்திரம் உழைக்கும் மக்களது நலன்களை முதன்மைப்படுத்துவது. அமெரிக்காவினது உழைப்பைச் சுரண்டுகிறவர்களது நலன்களை முதன்மைப்படுத்துவது. எந்த அரச இயந்திரமும் ஆட்சிக் கவிழ்ப்புக்கான முயற்சிகளைக் கடுமையாகவே எதிர்நோக்கும். கியூபாவின் ஆட்சியைக் கவிழ்ப்பது கியூபாவின் ஏகப் பெரும்பான்மையானவர்களின் நோக்கமோ தேவையோ அல்ல. எனினும் பழைய சர்வாதிகார ஆட்சியின் மீட்சியை விரும்புகிறவர்கள் இன்னும் ஓயவில்லை. அவர்கள் முக்கியமாக வெளியிலிருந்தே செயற்படுகிறார்கள். அதே வேளை கியூபாவின் ஆட்சியாளர்கட்கு எதிர்ப்பானவர்கள் கியூபாவின் சட்ட வரையறைகட்குட்பட்டு சுதந்திரமாக இயங்குகின்றனர். தனியே கருத்து வேறுபாடுகட்காக எவரது சுதந்திரமும் மறுக்கப்படவில்லை.

அமெரிக்காவில் 1950களில் கம்யூனிஸ்ற்றுக்கள் வேட்டையாடப்பட்ட மக்கார்த்தி யுகம் போல ஒன்று இன்று பயங்கரவாத ஒழிப்பு என்ற பேரில் செயற்படுகிறது. அமெரிக்காவின் போர்களை எதிர்ப்போர் கடுமையான கண்காணிப்புக்கும் நெருக்குவாரங்கட்கும் உட்படுகின்றனர். மேற் கூறியவற்றினின்று தெரிவது என்ன? ஏற்றத்தாழ்வான ஒரு சமூகம் எவ்வளவு செல்வச் செழிப்புள்ளதானாலும் அங்கு மனிதரது அடிப்படையான வாழ்வுரிமைகள் பல

> **ஏற்றத்தாழ்வான ஒரு சமூகம் எவ்வளவு செல்வச் செழிப்புள்ளதானாலும் அங்கு மனிதரது அடிப்படையான வாழ்வுரிமைகள் பல மறுக்கப்படுவதுடன் சனநாயக உரிமைகளும் மறுக்கப்படுகின்றன என்பதற்கு அமெரிக்கா ஒரு நல்ல உதாரணம்**

மறுக்கப்படுவதுடன் சனநாயக உரிமைகளும் மறுக்கப்படுகின்றன என்பதற்கு அமெரிக்கா ஒரு நல்ல உதாரணம்.

இரண்டாமுலகப் போருக்குப் பின்பான ஐரோப்பாவில் அமெரிக்காவை விடச் சிறப்பாக வறுமைப்பட்டோரின் நலன்கள் பேணப்பட்டு வந்தன. எனினும் இதில் எதுவுமே முதலாளியம் மனமுவந்து தந்ததல்ல. அவை பாராளுமன்றச் சனநாயகம் தந்த பரிசுகளுமல்ல. தொழிலாளி வர்க்கத்தின் இடையறாத நீண்டகாலப் போராட்டத்தின் விளைவாகவே அவை வெல்லப்பட்டன. எனினும், 1980களுக்குப் பிறகு, அவை படிப்படியாகப் பறிக்கப்பட்டு வருகின்றன. தொழிலாளி வர்க்கமும் இடதுசாரி இயக்கமும் அவற்றின் தலைமைகளின் துரோகங்களால் பலவீனப்பட்டுப்போனதன் விளைவாகவே இன்று முதலாளியம் ஒரு காலத்தில் தன்னுடைய இருப்பைப் பேணவேண்டி உழைக்கும் மக்களுக்கும் வறியோருக்கும் வழங்கிய உரிமைகளையும் சலுகைகளையும் இன்று தைரியமாகப் பறித்தெடுக்கிறது. இதன் விளைவாகவே பிரான்சிலும் நெதர்லாந்திலும் தொழிலாளி வர்க்கம் ஐரோப்பிய ஒன்றியத்திற்கான புதிய யாப்பை முறியடிப்பதில் ஒன்றுபட்டு நின்று வெற்றி கண்டனர்.

சீனாவையும் இந்தியாவையும் ஒப்பிடுவோர் சோஷலிசத் தலைமையின் கீழ் சீனாவின் மக்களின் கல்வி, தொழில், வாழ்விடம், உணவு, உடல்நலம் போன்ற ஒவ்வொரு அடிப்படை உரிமையிலும் கண்ட மாபெரும் முன்னேற்றங்களைப் பாராட்டுவதுண்டு. சீனா சனநாயகமற்ற நாடு என்பதால் முன்னேறியது என்று சிலர் வாதிப்பதுண்டு. சீனா 1949ம் ஆண்டு விடுதலைக்கு முன்பு எவ்வகையிலும் சனநாயக நாடாக இருக்கவில்லை என்பதை இவர்கள் மறந்து விடுகிறார்கள். இந்தியாவின் மிகப்பெரும்பான்மையான மக்களின் அடிப்படைத் தேவைகள் நிறைவு செய்யப்படாமல் உள்ள அதே வேளை இந்தியப் பொருளாதாரம் வேகமாக வளருவதாகச் சொல்லப்படுகிறது. இன்று சீனாவிலும் உழைக்கும் மக்களது நலன்களைப் புறக்கணித்து ஒரு முதலாளியப் பொருளாதார வளர்ச்சி நடைபெறுகிறது என்பது கவனத்திற்குரிய மற்றொரு விடயமாகிறது.

சனநாயகம் என்பது வெறுமனே பாராளுமன்றச் சனநாயகத்தையும் கருத்துச் சுதந்திரம் என்பது முதலாளிய ஊடகங்களால் தடையின்றி இயங்கக் கூடிய சூழலையுமே குறிக்குமானால் சோஷலிச முறையின் கீழ் சனநாயகமும் கருத்துச் சுதந்திரமும் மிகவும் குறைபாடானவையாகவே தெரியும். எனினும் எந்த அளவுகோலின் அடிப்படையிலும் சோஷலிச ஆட்சி முறையின் கீழ் மக்களின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறைவிடம், உடல்நலம், கல்வி, வேலைவாய்ப்பு, உழைப்பு உரிமை போன்றன எந்த முதலாளிய ஆட்சியின் கீழும் இயலுமானதை விடச் சிறப்பாகவே பேணப்பட்டுள்ளன.

மறுபுறம் சோஷலிச நாடுகளில் சனநாயகமும் கருத்துச் சுதந்திரமும் சில சமயங்களில் மத நம்பிக்கைகளும் தொடர்பான குறைபாடுகள் இருந்துள்ளன. அவற்றை வெறுமனே சோஷலிசத்தின் குறைபாடாகக் காணாமல் சோஷலிச நாடுகள் செயற்பட்ட உலகச் சூழலின் அடிப்படையிலும் அந் நாடுகளில் சோஷலிசம் உருவான வரலாற்றுப் பின்னணியிலும் பழைய சமூகத்தின் வர்க்க அடிப்படையிலும் நோக்குவது பயனுள்ளது.

அனைத்தினும் முக்கியமாகச், சனநாயகம் என்பதைப் பாராளுமன்றம், தேர்தல்கள் என்று நாம் பழக்கப்பட்ட முதலாளிய நிறுவனங்களதும் சடங்குகளதும் அடிப்படையில் குறுக்குவதினின்று நாம் விடுபட வேண்டும். முதலாளியப் பாராளுமன்ற முறைக்கு அப்பால், அதினின்று முற்றிலும் வேறுபட்ட சனநாயக அமைப்புக்கள் இயலுமானவை என்பதை நாம் கருத்திற் கொள்ள வேண்டும். இல்லாவிடின் நாங்கள் ஒப்பிட இயலா தவற்றை ஒப்பிடும் வீண் முயற்சியில் ஈடுபடுவோராவோம்.

# லண்டன் குண்டு வெடிப்பும் அமெரிக்க பிரித்தானிய ஆக்கிரமிப்புகளும்

லண்டனில் 7/7 அன்று மூன்று சுரங்க ரயில்களிலும் பஸ் ஒன்றிலும் நடந்த குண்டுவெடிப்புக்கள் பிரித்தானிய குடிமக்களான முஸ்லிம்களால் நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதல்கள் என நம்பப்படுகிறது. தற்கொலைக் குண்டுதாரிகள் தங்கள் அடையாளங்களை மறைக்க முற்படவில்லை என்பதுடன் அவர்களில் ஒருவர் தன் அடையாள அட்டையைத் தன்னுடன் வைத்திருந்தார் என்றும் தெரிய வருகிறது. அவர்கள் முஸ்லிம் தீவிரவாதத்துடன் சேர்த்துக் கருதப்படும் தொப்



அமெரிக்க பிரித்தானிய ஆக்கிரமிப்பு படைகளின் குண்டு வீச்சில் படுகாயம் அடைந்த ஈராக்கிய சிறுவன் ஒருவன்

பியோ, தாடியோ நீண்ட மேற்சட்டையோ அணிந்திருக்கவில்லை. அவர்களது வழமையான தோற்றமோ நடத்தையோ அவர்கள் அப்படிப்பட்டவர்கள் என்று எவரையும் சொல்லத் தூண்டுவதாகவும் இருந்ததில்லை. அவர்களில் ஒருவர் பற்றி வெளியான முழுவிவரங்களிலிருந்து அவர் கிரிக்கட் விளையாடுகிற, உல்லாசமாக வாழுகிற, அரசியல் பேசாத இளைஞர் என்றும் தெரியவந்துள்ளது. எனவே இது பாரிய கேள்வியொன்றை எழுப்புகிறது.

பிரித்தானிய வாழ்க்கைமுறையுடன் குறிப்பிடத்தக்களவுக்கு இசைவாகிப் போன ஒருவர் ஏன் இவ்வளவு கொடிய செயலைச் செய்தார்? இந்தக் குண்டுத்தாக்குதல் மிகவும் கண்டிக்கத்தக்கது என்பது பற்றி பொதுவாக நாம் உடன்படுகிறோம். இதன் மூலம் எந்தப் பிரச்சனையும் தீராது என்பதையும் நம்மிற் பலர் உணர்வோம். இதைச் செய்தவர்கள் கொலைக்குற்றங்களிலோ கொள்ளையடிப்பு, தீ வைப்புப் போன்ற வன்செயல்கள் எதிலும் ஈடுபட்டுவந்த சமூக விரோதிகளுமல்லர். இவர்களை இந்தவிதமான கண்மூடித்தனமான, மனித உயிரை மதிக்காத செயலைச் செய்யத் தூண்டியது என்ன? இக் குண்டுத் தாக்குதல் எந்த இனவாத, நிறவாத அரசியல் பிரசாரகருக்கும் குறிவைத்து நடத்தப்படவில்லை. மூன்றாமுலக மக்களை ஒட்டச் சுரண்டிவருகிற முதலாளிகளில் எவரையும் குறி வைக்கவில்லை. இறந்த 50 பேரும் காயமடைந்த 700 பேரும் சாதாரண உழைக்கும் மக்களே. ரஷ்சியப் புரட்சிக்கு முன்பு லெனினின் தமையன் சர்வாதிகாரியான ரஷ்ய மன்

~நரசிம்மா~

னரைக் கொலைசெய்ய முயன்று தோல்விகண்டார். ஆயுத மேந்திய போராட்டத்தை வற்புறுத்திய லெனின் தமையன் மேற்கொண்ட கொலை முயற்சியைக் கண்டித்தார். அதன் மூலம் எதுவிதமான சமூக மாற்றத்தையும் வென்றெடுக்க இயலாது என்று அவர் விளக்கினார். எனவே லண்டன் குண்டுத்தாக்குதல் அதைவிடப் பன்மடங்கு கண்டிக்கத் தக்கது என்பதே மக்கிய நிலைப்பாடாக இருக்க இயலும். பயங்கரவாதத்தையோ தனிமனிதர்களின் படுகொலைகளையோ மாக்ஸியவாதிகள் ஏற்காத அதே வேளை அப்படிப்பட்ட செயல்களையும் நிகழ்வுகளையும் அவர்கள் தனித் தனியே நோக்குவதில்லை. எந்த நிகழ்வையும் அதன் சூழ்நிலையில் அதனுடன் தொடர்புள்ள நிகழ்வுகளுடன் சேர்த்து நோக்குவது சரியான முடிவுகட்கு இட்டுச் செல்லும்.

லண்டன் குண்டுத்தாக்குதல்கள் பிரித்தானிய முஸ்லிம்கட்கு எதிரான பாரபட்சம் எதையும் பற்றியதாக இருக்க முடியாது. கடந்த ஐம்பது வருடங்களாக நிறம், மதம் என்ற அடிப்படையிலான பாரபட்சத்திற்கெதிராக நடத்தப்பட்ட பல வேறு போராட்டங்கள் மூலம் இவ் விடயங்களிற் பெரும் முன்னேற்றங்கள் காணப்பட்டுள்ளன. பாரபட்சமும் துவேஷமும் இன்னமும் தொடர்ந்தாலும் அதனால் அங்கே ஒரு சமூக நெருக்கடி உள்ளதாக எவருங் கூற இடமில்லை. முஸ்லிம்களிடையே மத



லண்டன் குண்டு வெடிப்பில் படுகாயம் அடைந்த லண்டன் வாசி ஒருவர்.

அடிப்படைவாதச் சிந்தனைகள் பரவியுள்ளது உண்மை. அதற்கான காரணம் உலக அளவில் முஸ்லிம்கட்கெதிராக அமெரிக்க ஏகாதிபத்தியமும் மேலை நாட்டுப் பிற்போக்காளர்களும் மேற்கொண்டுவரும் பிரச்சாரமும் பிற நடவடிக்கைகளுமேயாகும்.

கம்யூனிஸத்தை அழிக்க சவூதி அரேபிய ஆட்சியாளர்களுடன் சேர்ந்து சோவியத் யூனியனில் முஸ்லிம் தீவிரவாதத்தைக் கிளறி விட்ட அமெரிக்க ஏகாதிபத்தியம் மிகக் குறுகிய காலத்தில் முஸ்லிம் தீவிரவாதம் தனக்கு எதிராகத் திரும்புவதை எதிர்பார்த்திருக்கவில்லை. குளத்தைக் கலக்கி மீன்பிடிக்க நினைத்தவரின் கால்கள் சேற்றில் சிக்கிக் கொண்ட கதை தான் அமெரிக்காவினது.

அமெரிக்கா வளர்த்து விட்ட சதாம் ஹூஸேனும், ஆ∴ப்கானிய தலிபான் இயக்கமும் அமெரிக்காவின் பிரதான எதிரிகளாகியது

தொடர்ச்சி 11ம் பக்கம்

www.tamilarangam.net                                    நன்றி - நூலகத்திட்டம்



# அழிவு தரும் சேது கால்வாய்த் திட்டம்


கடந்த யூலை 2ம் திகதி தமிழ் நாட்டின் மதுரையை சேர்ந்த கிராமப்புறம் ஒன்றில் சேது சமுத்திரக் கால்வாய் வெட்டும் ஆரம்பவிழா மிக விமரிசையாக இடம் பெற்றது. காங்கிரஸ் தலைமையிலான ஆட்சியில் பங்கு கொள்ளும் அனைத்துக் கட்சிகளின் தலைவர்களும் கலந்து கொண்ட இவ் விழாவில் பிரதமர் மன்மோகன்சிங் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

## இந்திய பெருமுதலாளித்துவ- பிராந்திய மேலாதிக்கம் வலுவடையும்

சோனியா காந்தி. மு. கருணாநிதி, வை. கோ. உட்பட இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளின் தலைவர்களும் குதூகலத்துடன் கலந்து கொண்டனர். இத்திட்டத்தின் மூலம் 150 வருடக் கனவு ஒன்று நிறைவேறுகின்றது என இந்தத் தலைவர்கள் திருப்தியும் மகிழ்ச்சியும் கொண்டாடினர். ஜெயலலிதாவும் அவரது ஆட்சியும் இவ் விழாவைப் புறக்கணித்தனர். காரணம் வாக்கு வங்கி பற்றிய உள்நோக்கமே அன்றி அத்திட்டத்தினால் ஏற்பட இருக்கும் அழிவுகள் அபாயங்கள் பற்றியல்ல என்பது கவனிக்கத் தக்கதது.

சேது சமுத்திரக் கால்வாய் வெட்டும் திட்டம் என்பது முழுக்க இந்திய பெருமுதலாளித்துவ நலன்களுக்காகவும் இந்திய பிராந்திய வல்லரசு மேலாதிக்கத்திற்காகவும் முன்னெடுக்கப்படும் ஒன்றேயாகும். இதனால் தமிழ் நாட்டின் கீழ்க்கோடிக் கரை போக மக்களின் குறிப்பாக மீனவர்களின் அன்றாட வாழ்வு கடுமையான பாதிப்படைகின்றது. சூழல் பாதிக்கப்படுகிறது. இயற்கை சமனிலை மாற்ற மடையும். இலங்கையின் வடக்கு கிழக்கு கரையோரங்களும் மீனவர்களும் கடும் பாதிப்புக்களை பெறுவார்கள்.

இலங்கைக்கும் இந்தியாவிற்குமிடையே அமைந்துள்ள ஆழமும் அகலமும் குறைந்த கடல் பகுதியான மன்னார் குடா- பாக்கு நீரிணைப் பகுதியிலேயே இச் சேது கால்வாய் வெட்டப்பட்ட இருக்கிறது. 300 மீற்றர் அகலமும் 12.8 மீற்றர் ஆழமும் கொண்டதாகவே மேற்படி கால்வாய் அமைக்கப்பட்ட உள்ளது. தற்போது அராபியக் கடற் பிரதேசத்திலிருந்து இந்தியக் கப்பல்கள் கிழக்குத் துறைமுகங்களுக்கு சென்று வருகின்றன. இவை இலங்கையைச் சுற்றி 400 கடல் மைல்களைப் பிரயாணிக்கின்றன. முப்பத்தியாறு மணிநேரத்தை செலவிடுகின்றன. எனவே சேது கால்வாய் வெட்டப்பட்டால் நேரம்தூரம் குறைக்கப்படும். இதனால் இந்தியாவிற்கு அதிக பயனும் லாபமும்




என்றே வாதிடப்படுகிறது. அதே நேரம் இக் கால்வாய்த் திட்டத்தால் ஏற்படப்போகும் பாரிய பாதிப்புகள் அழிவுகள், எதிர் விளைவுகள் மனிதர்களையும், சுற்றுச் சூழலையும், கடல்வாழ் உயிரினங்களையும் உள்ளடக்கி நிற்பது பற்றி இந்திய ஆளும் வர்க்கம் எவ்வகையிலும் கவனத்தில் கொள்ளவில்லை. சேது சமுத்திரத்திட்டத்தினால் பாதிப்புக்குள்ளாகவுள்ள சூழல்- பரம் பரையாக மீன் பிடிக்கப்பட்டுவந்த தனுஸ்கோடிப்பகுதி முழுமையாகப் பாதிக்கப்படும்.

எட்டுக்கோடி 45 இலட்சம் கனமீட்டர் மணலும் கழிவுகளும் தோண்டி எடுக்கப்பட்டு அவை கடலின் வேறு பகுதியில் கொட்டப்படும்.

ஒரு பகுதி பாம்பன் தீவிலும் மிகுதி காட்டப்படும் வங்காள விரிகுடாவின் எந்தப்பகுதியில் கழிவு கொட்டப்படும் என்பது தெளிவாக்கப்படவில்லை.

கப்பல்களிலிருந்து கசியும் எண்ணெய் தொடர்பாக தீர்வு நடவடிக்கைகள் இதுவரை தெளிவுபடுத்தப்படவில்லை.

12.8 மீட்டர் ஆழமாக்குவதுடன் 300மீட்டர் அகலமாக்கப்படுவதனால் கடற்படுக்கையில் ஏராளமான திடிர்தாக்கங்கள் ஏற்படும். குறிப்பாகச் சொல்லப் போனால் இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதியில் பூமி நடுக்கம் ஏற்பட வாய்ப்புண்டு.

உலகிற் சிறந்த உயிரினங்கள் வாழும் பகுதியாக இந்த திட்டப்பகுதி குறிப்பிடப்படுகிறது. அரிய உயிரினங்களின் அழிவுக்கு இத்திட்டம் வழி கோலும். பவளப்பாறை கரையோரப் பகுதியில் மண் அரிப்பை இந்தப் பாறைகள் தடுப்பதாக அமைந்திருந்தன. இதை விட பவளப்பாறைகள் சில இடங்களில் கடற்புல் படுக்கைகளையும் பாதுகாக்கிறது. பொருளாதார ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த மீன் இனங்கள், வேறு கடற் பிராணிகளின் உற்பத்தியிடமாக முட்டையிடும் இடமாக உணவு பெறும் இடமாக விளங்குகின்றன.

பவளப்பாறைகள் கடலின் மேல் மட்டத்தில் 20 டிகிறி சென்ரிகிறேட் வெப்ப நிலையிலேயே வளரும்.

750 மீன் வகைகளின் பிறப்பிடமாக உணவு பெறும் இடமாக விளங்கும் பவளப்பாறைகள் அப்புறப்படுத்துவதால் சுமார் 5 இலட்சம் மீனவர் பாதிக்கப்படுவர் என தெரிவிக்கப்படுகிறது.

பவளப்பாறைகள் வெட்டி அகற்றப்படுவதனால் உயர்ந்த கடல் அலைகள், சூறாவளி, சண்ட மாருதம் போன்ற அனர்த்தங்கள் அடிக்கடி ஏற்பட வாய்ப்புண்டு.

**-கரன்-**

கடல் வாழ் பாலூட்டிகள் : அரிய வகைகளான கடல் ஆமைகள், டொல்பின் கடற் பசுக்கள், புனித சுறா முட்கள் உடைய கடற்குதிரைகள், திமிங்கிலம் போன்ற பிராணிகள் இத்திட்டப் பகுதியிலேயே வாழ்கின்றன. இவற்றின் இருப்பு இத் திட்டத்தினால் பாதிப்புக்கு உள்ளாகவுள்ளன.

**நமது நாடு எவ்வாறு பாதிப்படையப் போகிறது?**

இந்தியாவைப் பொறுத்தவரை சேது சமுத்திரத் திட்டத்தால் பொருளாதார நன்மைகளைவிட இராணுவ நன்மைகளையே முக்கிய நோக்காக கொண்டுள்ளது. இந்தியா தன்னைச் சுற்றியுள்ளன கடலின் ஆதிக்கத்தை தன்பிடிக்குள் கொண்டு வரும் முயற்சியே சேது சமுத்திரத்திட்டம்.

நம் நாட்டு மீனவர்கள் இது வரை மீன் பிடித்த இடங்களில் மீன் வளம் குறைந்துவிடும். இந்தியக் கடற்படையினரின் கெடுபிடிகளுக்குள்ளாக வேண்டும்.

கடல் அலைகள் உயரப்போவதனால் எமது மீனவர்கள் தங்களின் நடவடிக்கைகளைச் சுருக்கிக் கொள்ள வேண்டியநிலை ஏற்படும்.

கடற் காற்று, சூறாவளி அடிக்கடி ஏற்படவாய்ப்புண்டு. இதுவரை காலமும் தமிழ் மக்கள் நீண்ட கடலால் சூழப்பட்டமையால் கடல் வளத்தை கொண்டு தமது சொந்தக்காலில் நிற்க வாய்ப்பிருந்தது. எதிர்காலத்தில் நாம் கடல் வளத்தை மட்டுப்படுத்திய அளவிலேயே பயன்டுத்தும் சூழல் உருவாகவுள்ளது. வடகிழக்கைச் சுற்றியுள்ள 85 சிறு தீவுகள் நீரில் அமிந்து போகும் நிலையும் ஏற்படப்போகின்றது.

சேது சமுத்திரத்திட்டத்தை இந்திய அரசு நிறைவேற்றும் பட்சத்தில் இலங்கையின் கரையோரப் பாதுகாப்புக்கு என்ன செய்ய வேண்டும்? மீனவர்கள் எதிர் கொள்ளவுள்ள சவால்களைச் சமாளிப்பதற்கு என்ன செய்ய வேண்டும்? குறுகிய அரசியல் வாய்ச் சவால்களைவிட்டு ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்குப்பின்பும் எமது சந்ததியினர் சுபீட்ச வாழ்வு வாழ எமது பங்களிப்பு என்ன?

# சேது சமுத்திரத்திட்டம்: அறிஞர்களின் அவலநிலை

அண்மையில் சேது சமுத்திரத்திட்டம் மூன்று "தமிழ் நிபுணர்கள" கூறியிருந்த விடயங்களை இணையத் தளத்திலிருந்து மீட்டெடுத்துப் பார்த்த போது நமது அறிஞர்களின் அவல நிலையை எண்ணிப் பெருமூச்சு விட்டேன்.

சேதுசமுத்திரத்திட்டம் இலங்கையின் வட, வட மேற்குக் கரையில் வரலாற்றுப் பெருமைமிக்க துறைமுகங்கட்குப் புத்துயிரூட்டும் என்றும் அதன் விளைவாக இலங்கைக்கு நன்மையே ஒழிய தீமை இல்லை என்றும் அடித்துரைத்திருக்கிறார் ஒரு மூத்த தமிழ்ப் பேராசிரியர். அவரது சிறப்புத்துறை இடைக்கால இலங்கை வரலாறு.

இன்னொரு நிபுணர் சமூகவியலாளர், உலக வங்கிக்காகப் பணியாற்றுகிற தமிழர், இந்தியாவின் சேதுசமுத்திரத்திட்டம் நனவாகுமாயின் வடஇலங்கைக்கும் தென்னிந்தியாவுக்குமிடையே கடல் வழி வணிகம் செழித்த ஒரு மகத்தான காலம் மீளும் என்று கனவு காணுகிறார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியலாளர் ஒருவர், கால்வாயை அமைக்க நீரிணையை ஆழப்படுத்தினால் யாழ்ப்பாண மேற்குக் கரையிற் கணிசமான பகுதி மண்ணரிப்புக்கு ஆளாகும் என்ற அச்சம் அடிப்படையற்றது என்றும், கால்வாய் இலங்கை கரையினின்று வெகு தொலைவிலுள்ளதால் எதுவித பாதிப்புக்கும் இடமில்லை என்றும் கூறுகிறார். இந்த அறிஞருக்கு திரவங்களின் பாய்ச்சல் பற்றியும், கடல் உயிரியல் பற்றியும், புவியமைப்பியல் பற்றியும் எவ்வளவு அறிவு உண்டு என்று சொல்வது கடினம். எனினும், இந்த அறிஞர் சில காலம் முன்பு சேது சமுத்திரத்திட்டத்தை எதிர்த்து பேசியவர் என்பதும் கவனிக்கத்தக்கது.

இந்த நிபுணர்களில் எவருக்கும் சேது சமுத்திரத்தின் பாதிப்புகள் பற்றிய கவலைகளுடன் தொடர்பான துறைகளில் அடிப்படையான அறிவு கூட இருக்கிறதா என்பது முக்கியமான ஒரு கேள்வி. எனினும் பேராசிரியர், கலாநிதி, விரிவுரையாளர் என்ற பதங்கள் அவர்கள் எந்தத் துறை பற்றியும் நிபுணர்கள் போலப்பேச இடமளிக்கிறது. அவர்கள் பேசுவது இந்திய மேலாதிக்கத்துக்கு உடன்பாடானது என்பதால் அங்கே அவர்களது கருத்துகட்கு முக்கியத்துவம் கிட்டுகிறது. அதன்மூலம் இந்தியத்தமிழரை ஏய்க்க இயலுமாகிறது.

இப்படிப்பட்ட நிபுணர்களை விட ஒரு சராசரி சினிமா கதாநாயகனோ கதாநாயகியோ அறிவு மிகுந்த விடைகளைத் தர வாய்ப்பு உண்டு.

மறுபக்கம்:- கோகர்ணன்


நன்றி: தினக்குரல் வார இதழ் (03-07-2005)


# சேது கால்வாயும் தமிழகத் தலைவர்களும்


"சிங்களத் தீவினிற்கோர் பாலமமைப் போம்/ சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்" என மகாகவி பாரதி பாடிச் சென்றார். அவரது சிந்தனையில் நியாயத்தன்மையும் நல்ல அயல் உறவு மனப்பாங்கும் இருந்தது. பாரதி பாடிய சேதுவை பாரிய கால்வாயாக வெட்டி இந்திய ஆளும் வர்க்கத்தின் மேலாதிக்கத்தை விரிவுபடுத்துவதற்கு கடந்த யூலை 2ம் திகதி கால்கோள் போடப்பட்டுள்ளது.

நூற்றி ஐம்பது வருடக்கனவை நிறைவேற்றுவதாக இந்திய ஆட்சியாளர்களும் கப்பல் முதலாளிகளும் பூரித்துப் போய் உள்ளனர். பல லட்சம் மீனவர்களு பல லட்சம் கரையோர மக்களும் சூழல் மாசடைவதால் கடும் பாதிப்புகள் பெறுவது பற்றி மத்தியின் ஆட்சியாளர்களுக்கும் மட்டுமன்றி தமிழ் நாட்டின் தமிழர் தலைவர்களுக்கும் அக்கறை கிடையாது. தமிழுக்காகவே எண்பது வயது தாண்டியும் உயிர் வாழ்வதாகக் கூறி வரும் கலைஞர் மு. கருணாநிதியும் தமிழுக்காகவே போராடி வருவதாக முழக்கமிட்டு வரும் வை. கோபாலசாமியும், தொழிலாளர்கள், மீனவர்கள் கிராமப்புற மக்களுக்காக அரசியல் நடத்துவதாகக் கூறிவரும் இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளின் தலைவர்களும் தத்தமது கொடிகள் பரிவாரங்களுடன் சேது சமுத்திரக் கால்வாய் வெட்டும் தொடக்க விழாவில் கலந்து கொண்டனர். தமிழக மக்களின் நலன்கள் அக்கரையிலும் இலங்கையின் வடக்கு கிழக்குத் தமிழர்களின் நலன்கள் இக்கரையிலுமாக சேது சமுத்திரக் கால்வாயில் மூழ்கடிக்கப்படப் போகிறது. இது பற்றி "சேது சமுத்திரக் காவிய நாயகன்" என விழிக்கப்பட்ட வை. கோ. விற்கோ, அல்லது "சேது சமுத்திரமே வருக" என வரவேற்கப்பட்ட கலைஞர் கருணா நிதிக்கோ அக்கறையோ மக்கள் விரோதம் பற்றிய வெட்கம் ரோசமோ ஏற்படவில்லை. இவர்களுடன் சுத்தத் தமிழுக்காகப் போராடப் புறப்பட்டுள்ள ப. மா. க. தலைவர் ராமதாசும் அவர்தம் மகன் மத்திய அமைச்சர் அன்புமணியும், கலைஞர் மருமகன் மத்திய அமைச்சர் தயாநிதி மாறனும் உவகைபொங்க சோனியா, மன்மோகன்சிங்குடன் நின்று சேது சமுத்திரக்கால்வாயை வெட்ட மண்வெட்டி தூக்கி நின்றனர். இவர்களின் வாய்கள் தமிழுக்கும் செயல்கள் சொத்து சுகம் தேடும் சுரண்டும் வர்க்கத்திற் குமாகவே செயற்பட்டு வருகின்ற உண்மை பலருக்குத் தெரிவதில்லை. இப்போதாவது புரிந்தால் போதுமானது.

இத்திட்டம் இலங்கையின் இறைமை, சுதந்திரம், சுயாதிபத்தியம் என்பனவற்றை அமுக்கவே செய்யும். ஏற்கனவே அவை இந்திய மேலாதிக்கத்தால் மிரட்டல்களுக்கு உள்ளாகி வருகின்றன. சேதுகால்வாய்த் திட்டத்துடன் அவை முழுமை பெற்றுவிடும். பெரும் ஜனநாயகவாதி எனக் காட்டப்படும் நேருவே "இந்தியாவைச் சுற்றியுள்ள தென்னாசிய நாடுகள் வெறும் கலாச்சார அரசுகளாக மட்டும் இருந்தால் போதுமானவை" என்று அன்று கூறி இருந்தமை இவ்வேளை நினைவு கொள்ளத்தக்கது. அப்போதே அகன்ற பாரதக் கொள்கை மேலாதிக்கமாக வெளிப்பட்டிருந்து. அதன் ஒரு பகுதியே சேது சமுத்திரக் கால்வாய் திட்டநடைமுறையால் விஸ்வரூபம் எடுத்து நிற்கிறது.







# ஓரே நாளில் பத்தாயிரம் குழந்தைத் திருமணம்: இந்தியா பெருவல்லரசாகப் போகிறதாம்

இந்தியா 2020ல் வல்லரசாகப் போகிறது என ஆளும் வர்க்கம் முதல் அரட்டை அரங்கம் வரை அங்கலாய்க்கப்படுகிறது. அதற்கு முன்பாக ஐ. நா. மன்றத்தின் பாதுகாப்புச் சபையில் அங்கத்துவம் பெற்றுவிட இந்தியா துடித்து நிற்கிறது. ஆனால் தனது நாட்டின் சமூக அமைப்பிலே வேரூன்றிக்கிடக்கும் ஊறிப்போன பார்ப்பனிய கருத்தியல் சிந்தனை நடைமுறைகளை அகற்ற முடியாத அவல நிலையிலே எந்தவொரு ஆட்சியாளர்களும் இருந்து வருகிறார்கள். சாதிய அமைப்பு முதல் சதி எனும் நடைமுறை வரை நடைமுறையில் இருந்து வருகின்றன. இவற்றோடு இணைந்த ஒன்று தான் குழந்தைத் திருமணமாகும். கடந்த மே மாதம் 11ம் திகதி வந்த அக்ஷய திருதியை நாளில் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட குழந்தை திருமணங்கள் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது .இதற்கு முதல்



நாள் 10ம் திகதி குழந்தைத் திருமணத்தை எதிர்த்து அதன் மூடத் தனங்களை மக்கள் மத்தியில் குறிப்பாகப் பெண்கள் மத்தியில் விழிப்புணர்வுப் பிரச்சாரம் செய்து வந்த மத்திய பிரதேசத்தைச் சேர்ந்த சகுந்தலாவர்மா என்ற பெண் அதிகாரி பிற்போக்கு கும்பலால் தாக்கப்பட்டார். அவரது இரு கரங்களும் துண்டிக்கப்பட்டு தலைமுடி வெட்டப்பட்டு மோசமாகத் தாக்கப்பட்டார். மருத்துவமனையில் துண்டிக்கப்பட்டகைகள் பொருத்தப்பட்டு ஆபத்தான நிலையிலேயே இருந்து வருகிறார். நாளாந்தம் இந்தியாவில் இடம்பெற்று வரும் நிலவுடமைக்கால பிற்போக்கு மூடநம்பிக்கைகளின் வழிவந்த நடைமுறைகளுக்கு இது ஓர் பதச் சோற்று உதாரணமாகும். இந்தியாவின் சமூக அமைப்பை மாற்றியமைக்கக் கூடிய புரட்சி ஒன்று இடம் பெறாதவரை பாராளுமன்ற ஆட்சி முறைமூலம் எதனையும் மாற்றிவிட முடியாது என்பதே உண்மையானதாகும்.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# திருகோணமலைச் சம்பவங்கள் போருக்கான முயற்சிகளே!

## ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்

திருகோணமலையில் வேறுபட்ட சமூகங்கள் பல நல்லிணக்கத்துடன் நீண்டகாலமாக வாழ்ந்து வந்துள்ளன. திருகோணமலை மாவட்டத்தில் திட்டமிட்ட குடியேற்றம் 1947 முதல் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. அது கூடத் திருகோணமலை மாவட்டத்தில், குறிப்பாக நகரத்தில் இன வன்முறைக்கு இடமளிக்கவில்லை. 1957ம் ஆண்டு இலங்கையின் சுதந்திர நாளன்று நகரின் மணிக்கூட்டுக் கோபுரத்தில் கறுப்புக் கொடிகட்டப் போன ஒரு குழுவினரை நோக்கி சந்தைக்குள்ளிருந்து ஒரு சிங்கள இனவாதி சுட்டபோது நடராஜன் என்ற ஒருவர் இறந்தார். அதன் பின்பும் நகரில் வன்முறை நிகழவில்லை. 1958ல் நாடளாவிய பேரினவாத வன்முறையும் அதற்கு எதிர்வினையாகத் தமிழ்ப் பகுதிகளில் சிங்களவர்களது உடைமைகட்குச் சேதம் விளைவிக்கப்பட்ட போதும் திருகோணமலை அமைதியாக இருந்தது.

1961 சத்தியாக்கிரகத்தின் போது இராணுவத்தினர் அத்துமீறி நடக்கவில்லை. சத்தியாகிரகத்தின் போது மூதூர் பாராளுமன்ற உறுப்பினர் ஏகாம்பரம் மாரடைப்பால் இறந்தார். அவரது இறுதிச் சடங்கில் சிங்களவர்கள் பெருமளவில் பங்கு பற்றினர். 1963ல் திருகோணமலைப் பாராளுமன்ற உறுப்பினர் ராஜவரோதயம் இறந்தபோதும் சிங்கள மக்கள் பெருந்திரளாக அஞ்சலி செலுத்தத் தவறவில்லை.

எனினும் சிங்கள பௌத்த இனவாதிகள் திருகோணமலையில் தங்கள் விஸ்தரிப்பு வேலைகளை மேற்கொண்டுவந்தனர். அவற்றை எதிர்த்துத் தமிழரசுக் கட்சியினரும் மாற்று நடவடிக்கைகளை எடுத்து வந்தனர். 1970களின் பிற்பகுதியிலேயே பேரினவாதிகளது நடவடிக்கைகள் முறுகல் நிலைக்கு வழி செய்தன. 1976ல் காலஞ் சென்ற தமிழரசுக்கட்சித் தலைவர் செல்வநாயகத்தின் சாம்பலை ஊரூராக ஊர்வலமாகக் கொண்டு சென்ற போதே திருகோணமலையில் இனவாத வன்முறை வெடித்தது. 1970களில் தேசிய இனப்பிரச்சனை மேலும் மோசமாகிய ஒரு சூழ்நிலையில் திருகோணமலையில் குடியேற்றப்பட்ட பேரினவாதக் குண்டர்களே இதற்குக் காரணமானவர்கள் எனினும், தமிழ்த் தேசியவாதத் தலைவர்கள் தமிழ்- சிங்கள, தமிழ்- முஸ்லிம் உறவுகள் பற்றிய அக்கறை காட்டாமை சிங்கள- தமிழ் உறவுகளின் சீரழிவுக்கும் பின்பு தமிழ்- முஸ்லிம் உறவுகளின் சீரழிவுக்கும் பெரும் பங்களித்தது.

1977 பேரினவாத வன்முறையின் போது ஆயுதப் படையினரின் உதவியுடன் சிங்களப் பேரினவாதிகள் தமிழ் வணிகர்களின் கடைகளைத் தாக்கினர். 1977க்குப் பின்பு திட்டமிட்டமுறையில் திருகோணமலை மாவட்டத்தில் பேரினவாத அரசியல் குண்டர்கள் பெருமளவிற் குடியேற்றப்பட்டனர். தமிழ்த் தேசியவாதிகள் திருகோணமலையைத் தமிழீழத் தலைநகர் என்று பேசினார்கள்.





ஆனால் எதுவும் பேசாமலே திருகோணமலையைச் சிங்களமயமாக்கும் திட்டத்தை யூ என். பி ஆட்சியும் ஸ்ரீ.ல.சு.க. ஆட்சியும் நடைமுறைப்படுத்தி வந்தன. 1983ம் ஆண்டு கடந்த பேரினவாதத் தாக்குதலில் திருகோணமலை நகரம் மிகவும் பாதிக்கப்பட்டது. கடற்படையினர் அதில் பெரும் பங்கு வகித்தனர்.

நாட்டில் தேசியவாத அரசியல் ஆதிக்கம் செலுத்துகிற சூழ்நிலையில் திருகோணமலையில் மட்டுமில்லாமல் வெவ்வேறு சமூகத்தினர் அருகருகாக வாழும் எப் பகுதியிலும் மனித உறவுகளில் இனவாதம் குறுக்கிடுவது இயல்பானதே. அதைக் கடந்து செல்ல முயலுவது முற்போக்குச் சிந்தனை. அதை மேலும் ஆழமாக்கிச் சமூகத்தைச் சீரழிப்பது பிற்போக்குச் சிந்தனை. இன்று நாட்டில் பிற்போக்குச் சக்திகளே ஆதிக்கத்திலுள்ளன. உண்மையில் திருகோணமலையில் இனமோதலுக்கான வாய்ப்புக்கள் ஆட்சியாளர்களால் உருவாக்கப்பட்டு வந்த போதும் மக்கள் பொறுமையுடன் அமைதிகாத்து வந்துள்ளனர். இன ஒடுக்கற் போர் நடந்த இரண்டு தசாப்தங்களிலும் திருகோணமலையில் இனவாத வன்முறைச் சம்பவங்கள் ஒப்பிடுகையிற் குறைவாகவே நடந்துள்ளன.

போரின் விளைவாக இடப்பெயர்வும் உயிரிழப்புக்களும் நடந்துள்ளபோதும் போர்நிறுத்தத்தின் பின்பு திருகோணமலை மக்களிடம் பெரும் எதிர்பார்ப்புக்கள் உருவாயின. ஆனால் 2002 முதல் திருகோணமலை மாவட்டத்தில் நடந்தவை மக்களின் எதிர்பார்ப்புக்கட்கு நேர் மாறானவையாகவே அமைந்தன.

திருகோணமலையில் நடந்த தமிழ் முஸ்லிம் மோதல்களில் வெளியார் தலையீடு இருந்தது பற்றிய ஐயங்கள் மோதல்களின் போதே தெரிவிக்கப்பட்டன. அதே சக்திகளின் தூண்டுதலின் பேரிலேயே அண்மைக்காலங்களில் சிங்களப் பேரினவாதிகள் இன மோதலைத் தொடக்க முயல்கிறார்கள் என்ற ஐயம் முற்றிலும் நியாயமானது.

விடுதலைப்புலிகளின் மாவீரர் தினத்திற்கு முந்திய நாளில் திருகோணமலையில் ஜே.வி.பி யினர் வன்செயல்களில் இறங்கினர். அப்போது பொலிஸ் தரப்பினர் அமைதி பேணுமுகமாக ஜே.வி.பி யினரைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்தனர். எனினும் இன உறவுகளைச் சீர்குலைத்து நாட்டை மீண்டும் போரில் ஆழ்த்தும் சக்திகள் ஓயவில்லை. சுனாமித் தாக்குதலின் பின்பு ஆயுதப்படையினரிடையே உள்ள பேரினவாதிகள் திருகோணமலையில் அமைதியைக் குலைக்கிற காரியங்களில் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றனர். சென்ற வைகாசி நாளுக்கு முன்பு நகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் சட்டவிரோதமாக நிறுவப்பட்ட புத்தர் சிலை இராணுவ உதவி இல்லாமல் அங்கு வைக்கப்பட்டிருக்க முடியாது. அதன் பின்னர் படிப்படியாக இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகட்குமிடையில் மோதல்கள் வலுத்து வருகின்றன. விடுதலைப்புலிகளை வலிந்து போருக்கு அழைத்து ராணுவத்தீர்வு ஒன்றை நாடுகிற ஒரு முயற்சியாகவே இது தென்படுகிறது.

மட்டக்களப்பு- அம்பாறை மாவட்டங்களில் கருணா குழுவினரின் பேரில் நடத்தப்படும் தாக்குதல்களின் பின்னால் இராணுவமே உள்ளது என்பது பற்றி இன்று இரகசியமில்லை. மட்டக்களப்பு- அம்பாறை மாவட்டங்களில் இன்று பழி வாங்கற் கொலைகளால் மக்களின் வாழ்வு அமைதி கெட்டுள்ளது. அது போன்ற ஒரு நிலையைத் திருகோணமலையிலும் உருவாக்குவதே விஷமிகளின் நோக்கம்.

கடந்த சில மாதங்களின் போக்குக்களை நோக்கும் போது திருகோணமலையின் இன்றைய நிலவரத்திற்கு ஜே.வி.பியோ இராணுவத்தினரோ மட்டுமே காரணமானவர்கள் என்று கூறுவது கடினம். இனமோதல்களைத் தூண்டுகிற செயல்கள் வெளியார் தலையீட்டாலுமே நடக்கின்றன என்றே தெரிகிறது. தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களை இது பற்றி எச்சரிக்க வேண்டிய கடமை அமைதியை வேண்டுகிற எல்லா அரசியல்வாதிகளுக்கும் இருக்கிறது.

**-கோணாமலை-**

# தண்ணீர் தனியார்மயம் மறுகாலனியாதிக்கத்தின் கோர வடிவம்

அனைவருக்கும் பாதுகாப்பான குடிநீர் வழங்க வேண்டும் என்பதை உள்நாட்டு அரசாங்கம் முதல் ஐ.நா. மன்றம் வரை, ஆளும் கும்பல் அனைவரும் ஒரு கொள்கையாகவே அறிவித்திருக்கிறார்கள். ஆனால் குடிநீர் வழங்கும் சேவையை வியாபார நோக்கில் தனியார்மயமாக்கினால் தற்பொழுது இடைக்கும் சுகாதார மற்ற குடிநீர் கூடக் கிடைக்காமல் போய்விடும் ஏற்கெனவே குடிநீர் விநியோகம் தனியார்மய மாக்கப்பட்ட சில நாடுகளின் அனுபவங்களைப் பார்த்தே, இந்த உண்மையை நாம் புரிந்து கொள்ள முடியும்.

தென் ஆப்பிரிக்க நாட்டில் வெள்ளை நிறவெறி ஆட்சியை வீழ்த்திவிட்டுப் பதவிக்கு வந்த ஆப்பிரிக்க தேசிய காங்கிரசு கட்சி 1997- ஆம் ஆண்டு தண்ணீரைத் தனியார்மயமாக்கும் சட்டத்தைக் கொண்டு வந்தது. அந்நாட்டின் குடிநீர் விநியோகம் பிரான்சு நாட்டைச் சேர்ந்த பன்னாட்டு நிறுவனங்களான விவாண்டி மற்றும் சூயஸிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதன்பின் செல்ஃபோன்களில் பயன் படுத்தப்படும் ஃப்ரீபெய்ட் அட்டையைப் போல தண்ணீரைப் பெறுமுறுணம் கட்டும் "ப்ரீ- பெய்ட்" கார்டு அறிமுகப்படுத்தப்பட்டது. அந்நாடு முழுவதும் ஏறத்தாழ 1 கோடி குடிநீர் இணைப்புகள் துண்டிக்கப்பட்டதால் ஏழை நடுத்தர மக்களுக்குப் பாதுகாப்பான குடிநீர் கிடைப்பதே குதிரைக் கொம்பானது. இதன் விளைவாக, தண்ணீர் தனியார்மயமான ஆறே மாதத்தில் அந்நாட்டில் காலரா நோய் பரவியது.

பொது மக்களுக்கு குடிநீர் வழங்குவதைத் தடுத்து நிறுத்திவிட்ட தண்ணீர் நிறுவனங்கள் "ஒரு மாதத்தில் ஐந்து முறை குளித்தால் போதும் ஒரு நாளைக்கு இரண்டு முறை மட்டும் கக்கூஸுக்கு தண்ணீர் ஊற்றுங்கள்" எனத் தண்ணீர் சிக்கனம் பற்றிப் பொதுமக்களுக்கு போதித்தது.

தென் அமெரிக்க கண்டத்திலுள்ள பொலிவியா நாட்டைச் சேர்ந்த கொச்சபம்பா நகருக்கு குடிநீர் வழங்குவதை பெக்டெல் என்ற அமெரிக்க நிறுவனத்திடம் ஒப்படைத்தது. அந்நாட்டு அரசு. 1999- ஆம் ஆண்டு இதற்கான உத்தரவு பிறப்பிக்கப்படவுடனேயே,

# குத்துக் கரணங்கள்

பட்டணத்தடிகள்

## சுனாமிக்குள் அகப்பட்ட முஸ்லிம் கட்சிகள்

வரலாறு என்பது வெறும் பழம் பெருமை பேசுவதற்கான ஆவணம் அல்ல, அது பின்னால் வருபவர்களுக்கு பாடமாக அமைய வேண்டும். ஆனால் வரலாறு கற்றுத் தந்த பாடத்தினையே திரும்ப நிகழ்த்திக் காட்டுவர்களும் நம்மிடையே இருக்கிறார்கள்.

அரசியல் ஆகட்டும், சமுக நடைமுறைகள், கலை இலக்கியப் போக்குகள் எதிலும் வரலாறு என்பது வாய் மொழியாகவோ, எழுத்துருவாகவோ எங்கோ பதியப்படுகிறது. அது நிகழ்ந்த காலத்தின் சூழல், பின்புலம், இழைத்த தவறுகள், ஈட்டிய வெற்றிகள் என்பன புதிய தலைமுறையின் ஆய்வுக்கும் தேடலுக்கும் உட்பட வேண்டும். அதில் கிடைக்கும் அனுபவத் தேடலுடன் புதியவர்கள் அடுத்த எல்லையை நோக்கி முன்னேற வேண்டும்.

ஆனால் கண் முன்னால் நிகழ்ந்த வரலாறுகள் கைக்கெட்டிய தூரத்தில் காத்துக் கிடக்கையில் நாம் அவற்றை கவனியாது சென்று கால் இடறி நிற்கும் கதைகள் தான் நிறைய உண்டு.

இலங்கையின் இனப்பிரச்சினை அரசியல் வரலாற்றில் தமிழர்களின் கட்சி அரசியல் போக்குகள் எமக்கு முன்னால் இருக்கும் வரலாறு ஒரு ஐந்து தசாப்த காலத்தில் அது எத்தனை குத்துக்கரணங்களை அடித்தது என்பதை பின்னோக்கிப் பார்க்கும் எவரும் அறிந்து கொள்ளலாம்.

கட்சிப்பிளவுகள், கூட்டணி முயற்சிகள், காட்டிக் கொடுப்புகள், கையாலாகத் தனங்கள், ஆயுதக் கிளர்ச்சியைத் தட்டியெழுப்புதல், ஆயுதக் குழுக்களுள்ளே முரண்பாடுகள், உட்பகைகள், பழி வாங்கல்கள், உயிர்பலிகள்.. என்று ஒடுக்கப்பட்ட சமுதாயம் விழிப்படைந்து தன் உரிமைகளைப் பெற்றுக் கொள்ள முன்னேறிய தூரத்தை விட இழந்து கொண்ட விழுமியங்கள் தான் அதிகம். இது நிகழ்ந்து தொடர்ந்து கொண்டிருக்கும் வரலாறு.

இதற்கு சற்றுப் பின்னால் இதை விட தாம் எந்த வகையிலும் சளைத்தவர்கள் இல்லை என்பது போல் நிகழ்ந்து கொண்டிருப்பது முஸ்லிம்களின் அரசியல் வரலாறு.

அதாவது தமிழர்களின் அரசியல் வரலாற்றில் இருந்து எது படிக்கப்பட வேண்டுமோ அதனை முஸ்லிம் அரசியல் வாதிகள் படிக்கவில்லை. அல்லது மீள அதே தவறை இழைக்கின்றனர்.

முஸ்லிம்களின் கட்சி அரசியல் ஏனைய முதலாளித்துவக் கட்சிகளுடன் இணைந்ததாக, தோள் கொடுப்பதாகவே 1980கள் வரை இருந்து வந்தது. முஸ்லிம்களுக்கு தனிக்கட்சி ஒன்று தேவை என்ற இடைவெளியை சரியாக அடையாளம் கண்டது அஷ்ரப்பின் தலைமை.

தமிழ் அரசியல், ஆயுத இயக்கங்களின் போராட்டம் சிக்கலான நிலைமையை அடைந்த நேரம், எழுச்சி உணர்வுகளால் உந்தப்பட்ட கிழக்கு மாகாண முஸ்லிம் இளைஞர்களை அணி திரட்டி, வழிப்படுத்தி வளர்ச்சி பெற்றது முஸ்லிம் காங்கிரஸ்.

1994 பாராளுமன்றத் தேர்தலில் பேரம் பேசும் சக்தியாகி, அரசாங்கத்தை அமைப்பதில் பங்கு கொண்டது முஸ்லிம் காங்கிரஸ். அஷ்ரப்பின் தலைமைத்துவம், சாணக்கியம் கட்சியை தேசிய மட்டத்தில் விஸ்தரிக்க உதவியது. முரண்பாடாக இருந்த சிறிய சிறிய முஸ்லிம் அரசியற் சக்திகளையும் தன் வசம் இழுத்து கட்சியை பலப்படுத்தியது மட்டுமல்லாமல் அதனை இனத்துவ அடையாளங்களுக்கு அப்பால் எடுத்துச் செல்ல தேசிய ஐக்கிய அமைப்பை (நுஆ NUA) உருவாக்கினார்.

ஆனால் அதன் பெறுபேற்றைப் பரீட்சித்துப் பார்க்கும் முன்னம் 1999ல் தேர்தல் பிரசார காலத்தில் அஷ்ரப் அகால மரணமாக நேரிட்டது.

1. அது கொலையா, விபத்தா என்ற கேள்விக்கு இன்று வரை பதில் கிடைக்கவில்லை. அவருக்குப் பின்னால் வந்த கட்சித்தலைவர்கள், அவரது பெயரைப் பயன்படுத்துபவர்களோ தமது அரசியல் அபிலாசைகளில் காட்டும் அக்கறையின் அளவுக்கு தலைவரின் மறைவுக்கான உண்மையைத் தேடுவதில் அக்கறை காட்டவில்லை.

2. போதாக் குறைக்கு முஸ்லிம் காங்கிரஸ் பல்வேறு அணிகளாக உடைந்து யார் எதைச் செய்வது? யார் எதைச் சொல்வது? யார், எதை ஆதரிப்பது? யார் எதை எதிர்ப்பது என்று தெரியாமல் முஸ்லிம் சமுதாயத்தை சிக்கலில் மாட்டிவிட்டுள்ளனர்.

3. 2002ல் சமாதானப் பேச்சு வார்த்தைக்காக யுத்த நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட நாளில் எழுந்த 'யார் முஸ்லிம்களின் ஏக பிரதிநிதி?' என்ற குத்து வெட்டு இன்னும் தொடர்கிறது.

4. சுனாமிக்குப் பின்பான புனரமைப்புகளுக்கான பொதுக் கட்டமைப்பு பற்றிய உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின் இவர்களது குத்துக்கரணங்கள் அதிகரித்துள்ளன.

5. ஹக்கீம் எதிரணியில் இருப்பதால் அரசாங்கத்தில் இருக்கும் அமைச்சர்களை துகிலுரிந்து கருத்தெறிகிறார். அரசில் இருக்கும் மந்திரி பிரதானிகளோ "விட்டு வெளியே போனால் குட்டிச் சுவராகி விடுவோம், உள்ளே இருந்து நாங்கள் உரிமைப் போர் புரிவோம்' என்கிறனர்.

ஹிஸ்புல்லா அவசரப்பட்டு இருந்த பதவியையும் தூக்கி எறிந்து விட்டார். இன்றும் உதிரிகளாக இருக்கும் தலைவர்கள் பெரிய தலைவர்களைக் குற்றம் சாட்டி வருகின்றனர். கடையடைப்பு, ஹர்த்தால், எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் என்பனவெல்லாம் உரிமையைக் கோரி நிற்பதை விட தலைவர்களை எதிர்ப்பதில் அதிக அக்கறை காட்டி நிற்கின்றன.

ஒரு யதார்த்தத்தை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். இலங்கையின் இனப்பிரச்சினை அரசியல் வரலாற்றில் ஒப்பந்தங்கள் தலைவர்களால் கிழித்தெறியப்பட்ட சம்பவங்கள் அதிகம். இந்தப் பின்னணியில் "தீர்வுப் பொதியைக்" காட்டிக் காட்டி அரசியல் நடத்திய அம்மையார் சுனாமி பொதுக்கட்டமைப்பில் காட்டிய துணிச்சல் வரவேற்கத்தக்கது.

அதற்கு நிதி உதவி வழங்கும் நாடுகளின் நிர்ப்பந்தம் இருந்தது உண்மை எனினும் கைச்சாத்திட்டவர்கள் பற்றிய சர்ச்சை கிளப்பி விடப்பட்டிருக்கிறது. இலங்கைக்குள் இரண்டு நிர்வாகம் இருக்கின்றது. அந்த இரண்டு பகுதி சார்ந்தவர்களுந் தான் கையெழுத்திட்டார்கள் என்பது வெளிப்படையான விசயம். இதனைப் புரிந்து கொள்ள முடியாமல் இனவாதக் கட்சிகள் வரிந்து கட்டிக் கொண்டு தமது விஸ்வரூபங்களை வெளிக் காட்டி நிற்கின்றனர். இந்த இடத்தில் அரசியல் தலைவர்கள் நின்று நிதானித்து, உற்றுப்பார்க்க வேண்டிய விடயம் ஒன்று உள்ளது.

அது தான் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைப் பிரச்சினை. வெளிநாட்டு உதவி தடைபட்டுவிடும் என்ற கண்துடைப்புகள், உள்ளூர் அரச நிர்வாகத்தின் ஊழல், இயலாமை, ஆற்றலின்மை என்பவற்றுடன் அரசியல் வாதிகளின் போலித்தனங்கள் அந்த மக்களை விரக்தியின் விழிம்புக்கு இட்டுச் செல்கின்றன.

நீங்கள் செய்ய வேண்டியது இது தான். அடுத்த தேர்லுக்கான வாக்கு வங்கியினை கணக்கில் பார்ப்பதை விட்டுவிட்டு, உண்மையாக சுனாமியால் பாதிக்கப்பட்டு, அன்றாட சீவியத்துக்கு கஸ்ரப்படும் அப்பாவி மக்களுக்கு அமைதியான வாழ்வுக்கு வழிகாட்டுங்கள். அதுவே நல்ல தலைமைத்துவப் பண்பாக இருக்கும்.

உலகப் பார்வை

# இந்திய- அமெரிக்க பாதுகாப்பு உடன்படிக்கை

இந்தியா அண்மையில் அமெரிக்காவுடன் பத்து ஆண்டுகால பாதுகாப்பு உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டது. அமெரிக்காவுடன் நேரடியாக இந்தியாவால் எதிர்த்து நிற்க முடியாது. அதேவேளை அமெரிக்காவுக்கும் இந்தியா போன்ற பெரியநாடு அதன் சந்தைக்குத் தேவையானதாகும். எனவே இரண்டு நாடுகளும் தத்தமது ஆதிக்க நலன்கருதி இந்த ஒப்பந்தத்தை செய்துள்ளன. ஆனால் இத்தகைய பாதுகாப்பு ஒப்பந்தத்தால் பரந்துபட்ட கோடிக்கணக்கணக்கான சாதாரண இந்திய மக்களுக்கு எவ்வித நன்மையும் ஏற்படப்போவதில்லை.

இவ் ஒப்பந்தத்தை சற்று ஆழப்படுத்திப் பார்க்கும் போது தான் அதன் பின்னால் உள்ள அரசியல் ராணுவ அம்சங்களைக் காணமுடியும். இந்தியா கடந்த ஏழு வருடங்களாக அதன் பாதுகாப்புச் செலவை படிப்படியாகக் கூட்டிவந்துள்ளது.

41000 கோடி ரூபாவாக இருந்த பாதுகாப்புச் செலவீனம் 2005ல் 83000 கோடியாக உயர்ந்தது. இந்த வருடத்தில் ஆயுதக் கொள்வனவுக்காக 34375 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது. ஆயுதக் கொள்வனவில் சீனாவுக்கு அடுத்தபடியாக இந்தியா வுள்ளது.

இந்தப் பாதுகாப்பு ஒப்பந்தத்தின் கீழ் இந்தியாவும் அமெரிக்காவும் கூட்டாக ஆயுத உற்பத்தியில் ஈடுபடும். நவீன இராணுவ தொழில் நுட்பம் இந்தியாவுக்குச் செல்வதற்கான தடை நீக்கப்பட்டு ஏவாயுத பாதுகாப்பு திட்டம் செயற்படுத்தப்படும்.

ஒலியைவிட இரட்டை வேகத்தில் செல்லும் எவ் 16 ரக சண்டை விமானங்களை இந்தியாவுக்கு மீண்டும் வழங்க அமெரிக்கா இவ்வருடம் ஏப்ரலில் உடன்பட்டது.

இந்தியா அடுத்த ஐந்து ஆண்டுகளில் இந்திய இராணுவத்தையும் கடற்படையையும் தரமுயர்த்தும் பணிக்காக 65000 கோடி ரூபாவை செலவிடவிருப்பதாக அறிய முடிகிறது. இந்தியா 126 யுத்த விமானங்களை வாங்குவதற்காக சர்வதேச கேள்வி கோரிள்ளது. இதற்கென 600 கோடி டொலர்களைச் செலவிடத் தயாராயும் உள்ளது.



ரசியாவின் எஸ்யு- 30 எம்கேஜ விமானங்களை இந்தியாவில் தயாரிப்பதற்காக 300 கோடி டொலர் உடன்படிக்கையைக் கைச்சாத்திட்டுள்ளது.

இந்தியாவுடனான ஒப்பந்தத்தால் அமிழ்ந்து கொண்டிருந்த அமெரிக்க உற்பத்தி நிறுவனங்களுக்கு உயிர்ப்பிச்சை கொடுக்கப்பட்டுள்ளது.

யுத்த விமானங்கள் உற்பத்தியில் முன்னணி நிறுவனமான லொக்கீட் மாட்டின் அதன் போட் வேர்த் தொழிற்சாலையில் 2000 தொழிலாளர்களை வேலையின்மையால் இடைநிறுத்தியிருந்தது. புதிய உற்பத்திக் கட்டளைகள் கிடைக்காவிடின் 2008ம் ஆண்டளவில் மேலும் 5000 பேர் வேலையிழக்க வேண்டிய நிலையேற்படும். இதன் மூலம் அமெரிக்காவின் வேலை நீக்கப் பட்டியலின் அளவு நீண்டு போகவே செய்யும். எனவே இந்தியாவுடனான இப் பாதுகாப்பு ஒப்பந்தம் மூலம் அமெரிக்க யுத்த விமான உற்பத்தித் தொழிற்சாலைகளுக்கு புதிய நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

மேலும் பல்வேறு காரணங்களுக்காக அமெரிக்கா இந்த உடன்படிக்கையைச் செய்துள்ளது. சீனா பொருளாதார ரீதியிலும் இராணுவ ரீதியிலும் பெரிய அளவில் முன்னேறுவதால் இந்தியாவை ராணுவ ரீதியில் வலுப்படுத்தி வைக்க வேண்டிய தேவை அமெரிக்காவுக்குண்டு. ஏற்கனவே இந்திய சீன உறவு சுமூகமாகி வருவதைப் பொறுக்க முடியாத அமெரிக்கா இப்பாதுகாப்பு ஒப்பந்தத்தின் மூலம் இந்திய- சீன உறவைச் சீர்குலைக்கவும் மறைமுகமாக முயலுகிறது. அதேவேளை இந்தியாவைப் பொறுத்தமட்டில் ஐ. நா பாதுகாப்புச் சபையில் நிரந்தர அங்கத்துவத்தைப் பெறுவதற்கு தன்னைப் பிராந்திய வல்லரசாக வளர்க்க வேண்டிய தேவையும் எழுந்துள்ளது. கோடிக்கணக்கான இந்தியர்கள் பட்டினியால் வாடும் போது இந்தியா இராணுவ ரீதியில் பலம் பெறுவதென்பது முற்றிலும் முதலாளிய பிராந்திய மேலாதிக்க நலன் சார்ந்ததே என்பது விளங்கும்.

இந்தியா விரைவாக நவீன இராணுவ அமைப்பை அடைவது அண்டைநாடுகளுக்கு அச்சுறுத்தலாகவே அமையும். இதை விளங்கி கொண்டாவது இலங்கை அரசு நாட்டில் இனப்பிரச்சினைக்கு ஒரு சமாதான த்தீர்வை வெகுவிரைவில் கொண்டுவர வேண்டும். ஆனால் அதற்கான தூரநோக்குடைய அரசியல் விவேகம் இலங்கையின் எந்த ஆளும் வர்க்கத்தரப்பிடமும் இல்லை. இனப்பிரச்சினையைப் பயன்படுத்திக் கொண்டே, இலங்கையில் ஏற்கனவே இந்தியா பொருளாதார அரசியல் ராணுவப் பிடிகளை இறுக்கி வந்துள்ளது. இன்றும் அதன் தொடர்ச்சி நீடிக்கின்றது. இது தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி முழு இலங்கை மக்களையும் அடிபணிய வைக்கும் போக்கேயாகும்.

இந்தியா மீண்டும் நேபாள ஆட்சியாளருக்கு ஆயுதங்களை வழங்க ஆரம்பித்துள்ளமையையும் இந்தச் சூழலிலேயே பார்க்க வேண்டும். மன்னர் பாராளுமன்றத்தைக் கலைத்து ஆட்சிப் பொறுப்பை ஏற்றபின் இந்தியாவும்- பிரிட்டனும் அந்த நாட்டுக்கு ஆயுதம் வழங்குவதை நிறுத்தின. ஆனால் இன்று இந்தியா மீண்டும் நேபாளத்துக்கு ஆயுதம் வழங்கி அடக்கு முறையாளர் பக்கம் தான் நிற்பதை வெளிப்படுத்தியுள்ளது. அத்துடன் இந்திய அமெரிக்கப் பாதுகாப்பு ஒப்பந்தத்தின் மூலம் இந்திய ராணுவ ஆதிக்கம் நேரடியாகவே நேபாளத்தில் கைவைக்கக் கூடிய ஆபத்தையும் தோற்றுவித்துள்ளது. அது மட்டுமன்றி இலங்கை இந்திய பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப் படுவதற்கும் வழிசமைத்துக் கொடுத்துள்ளது. காஸ்மீருக்கு சுய நிர்ணய உரிமையை மறுக்கும் இந்தியா நேபாளத்தில் அடக்கு முறையாளரான மன்னரின் பக்கம் நிற்கும் இந்தியா தமிழர் விடயத்தில் சாதகமாக இருக்கும் என கனவு காணக்கூடாது. ஆனால் தமிழர் தரப்பில் இந்தியக் கனவு காணும் கனவான்கள் இப்பொழுதும் இருந்து வருகிறார்கள். இந்தியாவுடன் தொப்புள் கொடி உறவு எனக் கூறிவரும் தமிழ்க் காவலர்கள் அமெரிக்காவுடனான இந்திய பாதுகாப்பு உடன்படிக்கையின் மூலம் அந்த உறவு வாசிங்டன் வரை நீடிக்கப்போவதைப் பற்றி என்ன கூறப்போகிறார்கள். பொறுத்திருந்து பார்ப்போம்.

# ஈராக்கிலிருந்து அமெரிக்கா எப்போது வெளியேறும்?

ஈராக்கிலிருந்து அமெரிக்கா படைகளை வாபஸ் பெற வேண்டு மென்ற கோரிக்கை பல கோணங்களிலிருந்தும் வெளிவருவதால் ஜனாதிபதி புஷ்சின் செல்வாக்கு குறைந்து வருகிறது.

யூன் மாதத்தில் அமெரிக்காவில் நடாத்தப்பட்ட அபிப்பிராய வாக்கெடுப்பில் 59 வீதமானவர்கள் புஷ் யுத்தத்தை நடாத்திய விதத்தை ஏற்றுக் கொள்ள வில்லை. மேலும் 51வீதமானவர்கள் அமெரிக்கா ஈராக்கை ஆக்கிரமித்ததை எதிர்க்கிறார்கள். தற்போது அமெரிக்காவில் ஈராக் சம்பந்தமாக மக்களின் மனோநிலை யானது 1968ல் வியட்நாமில் "ரெற்" தாக்குதல் காலத்தில் நிலவிய மனோநிலையை ஒத்துள்ளது. 1968ல் வியட்நாமில் இருந்து அமெரிக்கப் படைகள் வெளியேறக்கோரிய மக்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து சில வருடங்களின் பின் அமெரிக்கா வியட்நாமிலிருந்து வெளியேறியது வரலாறு. அவ்வாறான ஒரு நிலையே இன்று அமெரிக்காவில் காணப்படுகிறது. அப்படியாயின் ஈராக்கிலிருந்து அமெரிக்கப்படைகள் வெளியேறப்போவது எப்போது?

கடந்த யூன் மாதம்வரை 1720 அமெரிக்கப்படையினர் ஈராக்கில் கொல்லப்பட்டுள்ளனர். நாளுக்கு நாள் கொல்லப்படும் அமெரிக்க படையினரின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணமேயுள்ளது.

குடியரசுக்கட்சி செனட்டர்கள் பலர் அமெரிக்கப்படையினர் ஈராக்கிலிருந்து வெளியேற வேண்டுமெனக் கோரியுள்ளனர். அமெரிக்கா ஈராக் யுத்தத்தில் தோல்வியை தழுவிக் கொண்டிருப்பதாகவும் ஆக்கிரமிக்கப்பட்ட நாட்டில் அமெரிக்கப்படையினரின் நிலைமை மோசமாகிக் கொண்டிருப்பதாகவும் குடியரசு செனட்டர் சக் ஹேகல் அமெரிக்க உலக செய்திகள் என்ற வாராந்த வெளியீட்டுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

வேறு ஒரு குடியரசு செனட்டரான வால்ரர் ஜோன்ஸ் இரண்டு வருடங்களுக்கு முன் பிரான்ஸ் ஈராக் மீதான அமெரிக்க ஆக்கிரமிப்பை எதிர்த்தற்காக அந்நாட்டை கிண்டல் செய்தவர். ஆனால் இன்று புஷ் வெளியேறுவதற்கான மூல உபாயத்தை வேண்டி நிற்கிறார். குடியரசு செனட்டர் ஜோன் மக்கெயின் புஷ் நிர்வாகம் ஈராக்கிலிருந்து வெளியேறுவது தொடர்பாக ஒரு காலக் கெடுவை அறிவிக்க வேண்டுமெனக் கோரிக்கை விடுத்துள்ளார். இன்னும் சிலவருடங்களுக்கு அமெரிக்கப் படை ஈராக்கில் நிலை கொண்டிருக்கும் என நம்பும் மக்கெயின் வியட்நாமிய யுத்தத்தின் போரிட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.




புஷ் யுத்தத்தை நடத்துவதற்கு எழுந்துள்ள எதிர்ப்பு ஏப்ரல் மாதத்தில் "டவுனிங் வீதி குறிப்பு" (பிரிட்டிஷ் பிரதமரின் வாசஸ்தலம் டவுனிங் வீதி 10ம் இலக்கத்தில் அமைந்துள்ளது.) வெளியானபின் அதிகரித்துள்ளது. மேற்படி குறிப்பில் 2002ல் பிரித்தானிய அதிகாரிகள் நடத்திய யுத்த தயாரிப்புக்கான கூட்ட அறிக்கை உள்ளது. ஈராக்கை ஊடுருவ 2002ல் ஆண்டு கோடை காலத்திலேயே புஷ் நிர்வாகம் தீர்மானித்து விட்டது. சதாமை பதவியிலிருந்து அப்புறப் படுத்துவதே புஷ்ஷின் நோக்காக இருந்துள்ளது என பிரிட்டிஷ் புலனாய்வுத் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

2002ல் டவுனிங் வீதி குறிப்பில் பிரிட்டனின் எம் 16 புலனாய்வுச் சேவையின் தலைவர் புஷ் நிர்வாகம் யுத்தத்திற்கு செல்வதற்கான காரணங்களை தேடித் கொண்டிருப்பதாக பிரதமர் ரொனி பிளேயரிடம் தெரிவித்திருந்தார். அழிவுதரும் ஆயுதங்களை ஈராக் அழித்துவிட்ட போதும் அதை புஷ் நிர்வாகம் வேண்டு மென்றே அலட்சியப்படுத்தி வந்துள்ளது. எண்பத்தெட்டு ஜனநாயகக்கட்சி காங்கிரஸ் உறுப்பினர்கள் டவுனிங் வீதி குறிப்பு தொடர்பாக புஷ் பதில் கூற வேண்டுமெனத் தெரிவித்து கடிதம் எழுதியுள்ளனர்.

புஷ்சின் நடவடிக்கையால் ஒரு நாடு அழிக்கப்பட்டுள்ளது. குறைந்தது ஒரு இலட்சம் அப்பாவி ஈராக்கிய மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். டவுனிங் வீதி குறிப்பு வெளியானதை தொடர்ந்து அமெரிக்கப் படையினரின் உறவினர்கள் வெள்ளை மாளிகையின் விளக்கத்தை கோரியுள்ளனர்.

ஜனாதிபதி புஷ் வேண்டுமென்றே அமெரிக்க மக்களை தவறாக வழிநடத்தியமைக்காக அமெரிக்க அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் குற்றப்பிரேரணை மூலம் புஷ்ஷை பதவியிறக்க முடியும் எனக் கூறப்படுகின்றது. ஆனால் அமெரிக்க மக்களை ஏமாற்றியே புஷ் இரண்டாவது தடவையாகவும் ஜனாதிபதியாகத் தெரிவானார் என்பதை எளிதில் மறந்து விட முடியாது.

இதே சமயம் அமெரிக்காவின் வழிகாட்டலில் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட ஈராக்கிய பாராளுமன்ற உறுப்பினர்கள் எண்பத்திரண்டு பேர் கட்சி பேதங்களுக்கு அப்பால் அமெரிக்க படையினரை நாட்டிலிருந்து வெளியேறுமாறு கோரியுள்ளனர். சுமார் 130,000 அமெரிக்கப் படையினர் ஈராக்கில் உள்ளதாக கணிப்பிடப்பட்டுள்ளது.

# தோழர் சுதந்திரகேசரிக்கு புரட்சிகர அஞ்சலி

புதிய- ஜனநாயக கட்சியின் மாணவர் அமைப்பின் தலைவர் தோழர் சு. சுகேசனின் தந்தையார் சங்கரன் சுதந்திரகேசரி அவர்கள் யூலை 9ஆம் திகதி மரணமானார். அவர் இடதுசாரி அரசியல் சிந்தனை வழிநின்று புதிய- ஜனநாயக கட்சியின் நடவடிக்கைகளுடன் இணைந்து செயற்பட்டு வந்தவர். 1999ஆம் ஆண்டு மாகாணசபை தேர்தலில் புதிய- ஜனநாயக கட்சியின் பட்டியலில் மத்திய மாகாண சபைக்காக போட்டியிட்டார்.

அவரது இறுதிநிகழ்வுகள் யூலை 10ஆம் திகதி இராகலையில் நடைபெற்றது. மூடநம்பிக்கைகளையும் பிற்போக்குத்தனங்களையும் அடிப்படையாகக் கொண்ட சமய சம்பிரதாய கிரிகைகள் எதுவுமின்றி அவரது இறுதி நிகழ்வுகள் புரட்சிகரமாக நடை பெற்றன.

அவரது இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் புரட்சிகர அஞ்சலிகளையும் புதியபூமி தெரிவித்துக் கொள்கிறது.

# கலை இலக்கியம் மக்களுக்கானவை அதனை வெளிப்படுத்திய மலையக கலை நிகழ்வுகள்

பேரினவாத முதலாளிய சக்திக ளின் திட்டமிட்ட மக்கள் விரோத செயற்பாடுகள் ஏகாதிபத்திய ஊடுருவல் என்பன பண்பாட்டுச் சீரழிவை துரிதப்படுத்தியுள்ளன. இந்திய நாசகார தொடர்பூடகங்களின் விரிவாக்கம், மக்களின் வாக்குகளை கொள்ளையிட்டு பூச்சாண்டி காட்டிவருகின்ற பிற்போக்கு அரசியல் தொழிற் சங்கங்களின் செயற்பாடுகள் என மலையக மக்களை இல்லாதொழிப்பதற்கான செயற்பாடுகள் பல முனைகளிலிருந்தும் ஏவி விடப்பட்டுள்ளன. இச் சூழலில் மக்கள் போராட்ட பண்பாட்டை ஆழப் பதிப்பதற்கான வேலைத்திட்டங்களை முனைப்புடன் முன்னெடுத்துச் செல்வதில் புதிய மலையகம் செம்மலர்கள் வீதிநாடகக் குழு, தேசிய கலை இலக்கியப் பேரவையின் மலையகக் கிளை, ஆகியன மேலும் வீரியத்துடன் களமிறங்கியுள்ளதை அண்மைக்கால கலை இலக்கிய நிகழ்வுகள் எடுத்துக் காட்டுகின்றன.



இரண்டு மாதங்களுக்கு முன்னர் தேசிய கலை இலக்கியப் பேரவையின் சாமிமலை கிளை மலையக நாட்டாரியல் பண்புகளை குறிப்பாக உழைக்கும் மக்களின் பண்பாடு ஒழுக்கம் ஆகியவற்றை இளம் சமூகத்தினருக்கு அறிவு பூர்மாக முன்வைத்து புதிய பண்பாட்டை மக்கள் எழுச்சியின் அடிப்படையில் கட்டியெழுப்ப வேண்டியதன் அவசியத்தை எடுத்துக்காட்டியது. சாமிமலை வே.இராமரின் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் தொழிலாளர் வர்க்க குணாம்சம் கொண்ட கலைஞர்கள், இளைஞர்கள், மாணவர்கள் பெருமளவில் கலந்தும் கொண்டனர்.

மேல் கொத்மலைத்திட்டத்திற் கெதிரான மக்கள் இயக்கம் அட்டன் நகரில் மாநாட்டை கூட்டிய போது மலையக மக்களின் விடுதலையின் பால் உறுதியான செயற்பாடுகளை முன்னெடுக்கும் பல நூற்றுக் கணக்கானோர் கலந்து கொண்டனர். அந்நிகழ்வில் செம்மலர்கள் வீதிநாடகக் குழுவினர். இது எமது மண் என்ற வீதி நாடகத்தை நிகழ்த்தினர். தனது பேரப்பிள்ளைகளைப்பார்த்து தாத்தா ஒருவர்

"உங்களுக்கு பாலும் தேனும் தருகிறேன். ஒடிப் போய் நுவரெலியா மாவட்டத்திலுள்ள தேசியப் பாடசாலையைத் தொட்டிட்டு வா" என்றும்

"வாசலை உடைக்காம பொணத்த வெளிய எடுக்கக் கூடிய மாடி லயத்தைத் தொட்டிட்டுவா" என்றும்

"கொட்டக்கலையிலுள்ள தமிழாராய்ச்சி செயலக போர்டை (பெயர்ப் பலகை) தொட்டிடு வா"

என்றும் அடுக்கிக் கொண்டே போனபோது எதையும் தொட முடியாத பேரப்பிள்ளைகள்

"போங்க தாத்தா, நீங்களும் அந்த தாத்தா மாதிரி எதையும் குடுக்காம ஏமாத்துறீங்க" என்று சொன்ன போது, பார்வையாளர்கள் கைதட்டி, சிரித்தும், எல்லோரும் சேர்ந்து

"கொத்மல திட்டத்ததான் தூக்கி யெறியனும் எம்மை கூறு போட யாரும் நெனச்சா கொடல உருவனும்" என்று பாடியமை, வீதிநாடகப் பண்பாட்டை பார்வையாளருக்கு மனதில் பதிப்பதில் இக்குழு பெற்ற வெற்றியைக் காட்டியது.

கொத்மலைதிட்டத்திற்கெதிரான மக்கள் இயக்கம் கொழும்பு, கோட்டை புகையிரத நிலையத்துக்கு முன்னால் மாபெரும் போராட்டத்தை முன்னெடுத்த போது "இந்த நாடு விற்பனைக்கல்ல" என்ற வீதி நாடகத்தை செம்மலர்கள் நாடகக்குழு நிகழ்த்தியது. இதில் தென் இலங்கையைச் சேர்ந்த வீதிநாடக கலைஞர்களும் இணைந்துக் கொண்டனர்.

சேர்வோம், சேர்வோம்
ஒன்றாகச் சேர்வோம், என

தமிழிலிலும் சிங்களத்திலும் பாடி மேல் கொத்மலைத்திட்டத்தை தடுத்து நிறுத்த வேண்டும் எனப் பார்வையாளர் அனைவரையும் உரத்துக் கூறச் செய்தமை வெறும் கலை நோக்கத்திற்காகவன்றி விடுதலை நோக்கில் ஒன்றுபடும் மக்களின் கூட்டுப்பண்பாட்டினை ஆழப்பதித்தது.

இலங்கை நாட்டின் விடுதலைக்கான மக்கள் போராட்டப்பாதையில் முன்னேறிச் செல்லும் புதிய ஜனநாயகக் கட்சியின் 27வது ஆண்டும் விழா ஹட்டன் நகரில் இடம் பெற்ற போது "நிமிர்த்தல்" என்ற வீதி நாடகம் ஹட்டன் பேருந்து நிலையத்தில் நிகழ்த்திக் காட்டப்பட்டது. சுமார் ஆயிரம் பேர் முன்னிலையில் மலையக மக்கள் அடக்கப்பட்டுள்ள நிலைமையை எடுத்துக்காட்டிய போது நடிகர்கள் மட்டுமன்றி பார்வையாளரும் உரத்த குரலில் சேர்த்து குரல் கொடுத்தமை நடிகர்கள் பார்வையாளர்கள் இடைவெளியை உடைத்தெறிந்தது. குறிப்பாக இந்நிகழ்வில் பங்கு கொண்டவர்கள் தோட்டத்தொழிலாளர்களாக இருந்தமையால் நாடகம் வெறும் நடிப்பாக அல்லாமல் இயல்பான மக்கள் கலைத்துவ தொடர்பாடலாக அமைந்திருந்தது.

மேலும் இவ் ஆண்டுவிழாவில் செம்மலர்கள் வீதிநாடகக் குழுவின் கலைஞர் கிங்ஸ்லி கோமஸ் மேடையில் தனிநடிப்பின் மூலம் தனியார்மய மனநோயை அதன் தாக்கத்தை மிகச் சிறப்பாக வெளிப்படுத்தினார். 125 வருடங்கள் வாழத்துடிக்கும் மூளை சேதமானவர்கள் எப்படி தனித் தனித் தீவாக ஒதுங்கி இறுதியில் வேடிக்கை மனிதர்களாக செத்து மடிவதை தத்ரூபமாக எடுத்துக்காட்டி பார்வையாளரின் கருத்தில் சிந்தனைப் பொறியை உருவாக்கினார்.

நெருப்புக் கவிஞன் இராகலை பன்னீரின் தலைமையில் இடம் பெற்ற கவிதா நிகழ்வு இரத்தக்தைச் சூடேற்றியது. நீரோடை, ஆறு, பேராறு என கவிதை மழையை நாட்டார் பாடலில் ஆரம்பித்து படிப்படியாக மக்கள் பிரச்சினைகளாக தொட்டுச் சென்று இறுதியில்

"ஒளிவிடும் விண்மீன் வருவதும் உறுதி. சூழ்ந்திடும் இருளும் அகல்வது உறுதி" என முழக்கமாக முடிவடைந்த போது கலை போராட்டத்துக்கானது என்பது மீளவும் உறுதியாக்கப்பட்டது.

செம்மலர்கள் வீதிநாடகக்குழுவின் கலைஞன் மலைமகன் குழுவினர் அந்தக் காலத்தையும் இந்தக் காலத்தையும் பணக்காரரையும் ஏழைகளையும் ஒப்பிட்டும் பாடி அபிநயம் செய்ததைப் பார் வையாளர்கள் கைதட்டி ஆரவாரித் ததன் மூலம் வரவேற்று தமது ஒரு ங்கிசைவை வெளிப்படுத்தினர்.

பேராசிரியர் சி. சிவசேகரம் எழுதிய மலையக விடுதலைக்கும்மியை பாடி இராகலை டெல்மார் தோட்ட பெண்கள் ஆடியமை பலரதும் வரவேற்பைப் பெற்றது. புரட்சிகர பாடல்கள் கருத்துரைகள் என தொடர்ந்த ஆண்டு விழா புதிய மக்கள் பண்பாட்டின் இன்னுமொரு படிமத்தை மக்களின் சிந்தனையில் சேர்ந்து இறுக்கியது.

ஆக மலையக மக்கள் பண்பாட்டை உயர்த்திப்பிடித்து அரசியல் பொருளாதார விடுதலையின் பல்லும் சில்லுமாக கலை இலக்கியத்தை முன்னெடுத்து செல்லுகின்ற அமைப்புகள் ஏகாதிபத்திய முதலாளித்துவ பேரினவாத செயற்பாடுகளுக்கு எதிராக போராடுகின்ற அதே வீச்சோடு மக்களிடம் மாயையை விதைத்து வருகின்ற மக்கள் விரோத அமைப்புகள், சக்திகளுக்கு எதிராகவும் செயற்பட வேண்டியது தவிர்க்க இயலாத ஒன்றாகும். கலை இலக்கியம் மக்களுக்கானது அவர்களின் விடுதலையோடு இணைந்தது என்ற ஆழமான புரிதலோடு மேன்மேலும் எமது கலை இலக்கிய முயற்சிகளை விரிவுபடுத்தி முன்னெடுப்போம்.

## சின்னதாய் ஒரு சரித்திரமாற்றம்

*குப்பைகளும் கூக்குரலும்*
*குவிந்து கிடக்கும்*
*இது தான் அரசியலாம்*

*கொலைகளும் கொள்ளைகளும்*
*கொட்டிக்கிடக்கு*
*இது தான் அரசியலாம்*

*செத்தவன் வாக்கில்*
*செல்லரித்து செறிந்துகிடக்கு*
*இதுவும் அரசியலாம்*

*பொய் வேஷங்களும் பொறுக்கித்தனங்களும்*
*பொதிந்து கிடக்கு*
*இதுவும் அரசியலா????*

*பழமைகளை தூசுதட்டிச் சீர் தூக்கிப்பார்*
*சீறும் சிந்தனைகளைக் கையில் எடு*
*உன் தலைவிதியைத் தீர்மானிக்க*
*நீயே புறப்படு*

*நாளைய அரசியல்*
*நமது கைகளிலே*
*நல்ல தலைமை நமக்குளிருந்தே*
*வெளிப்படட்டும்*

*தலைமுறைகளும்*
*தலையெழுத்துக்களும்*
*தரணியிலே மாறட்டும்- இந்த*
*தலைமுறையோடு!*
*சரித்திர மாற்றம் நிச்சயமாய் நிகழும்.*

## சுந்தர ராமசாமிக்கு முதுகு தடவும் ரவிக்குமார்

"காலச்சுவடு" நிறுவனத்தின் ஆஸ்தான தலித்தியவாதியான ரவிக்குமாருக்கு கொஞ்சம் சங்கடமான நிலைமையை நிறுவனத்தின் மடாதிபதி சுந்தரராமசாமி ஏற்படுத்தியிருக்கிறார்.

'பிள்ளை கெடுத்தாள் விளை' என்கிற தலைப்பில் சுந்தரராமசாமி எழுதிய ஒரு சிறுகதை தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணின் நடத்தையை இழிவுபடுத்துவது போலஅமைந்திருந்ததாகக் கருத்துக்கள் வெளிப்பட்டன. அவர் வேண்டுமென்றே இழிவுபடுத்தினார் என்று சிலரும் அவரது சாதியம் இக்கதையில் அவரை அறியாமலே வெளிப்பட்டுள்ளதென்று சிலரும் வாதித்தார்கள்.

சுந்தர ராமசாமியோ மிக வசதியாக எதுவிதமான விளக்கமோ மறுப்போ தெரிவிக்கவில்லை. மாறாக ரவிக்குமார் சுந்தர ராமசாமி எவ்விதத் தவறுமே செய்யவில்லை என்று வாதித்தார். இதில் வேடிக்கை என்னவெனில் பெரியார் ஈவேரா முதல் சுனாமி நிவாரண வேலைகளில் ஈடுபட்டோர் வரை எல்லாரது அற்பத்தவறுகளையும் பெரிதுபடுத்தி ஆராவாரம் செய்யும் ரவிக்குமார் இப்போது அவர் விமர்சித்து வரும் அதிகார மனோபாவம் பிடித்தவர்களுக்கு வக்காவத்து வாங்குவதுதான்.

மறுபுறம் காலச்சுவடு நிறுவனத்தின் எதிரியாகத் தன்னைப் புதிதாக அடையாளங் கண்டுள்ள குமுதம் நிறுவனத்தின் 'இலக்கிய ஏடான' திராநதி சுந்தரராமியைத் தாக்குகிறவர்களுக்குக் களமைத்து ஊக்குவிக்கிறது. அதன் விளைவாக அ. மார்க்ஸ் என்கிற என். ஜி. ஓ தலித்தியவாதி தீராநதியின் சிறப்பு விருந்தினாகியிருக்கிறார்.

சுந்தர ராமசாமி பார்ப்பனியவாதியோ இல்லையோ, படுபிற்போக்கான அரசியல் சிந்தனை கொண்டவர் என்பதில் நமக்கு ஐயம் வேண்டாம். அதனால் அவரை விமர்சிக்கிற மார்க்ஸ் முதலாளிய தலித்திய வாதிகள் யோக்கியர்களாகி விடமாட்டார்கள். ரவிக்குமார், மார்க்ஸ் வகையறாக்களெல்லாம் நண்பர்களே அல்ல. அவர்கள் தலித்தியம் என்ற பேரில் தம்மை வளக்கத்துக் கொள்வதற்காகத் தாழ்த்தப்பட்ட சமூகத்தினரதும் ஒடுக்கப்பட்ட பிற உழைக்கும் மக்களதும் ஒற்றுமையைக் குலைக்கும் புல்லுருவிகள் மட்டுமே.

சுந்தர ராமசாமியின் உள்ளூர்த் தொண்டர்பெருமக்கள் அவரது தூய இலக்கியவாதம் பற்றி என்ன சொல்லப் போகிறார்கள்?

## லண்டக் குண்டு வெடி........

7ம் பக்க தொடர்ச்சி....

அமெரிக்காவின் அயற்கொள்கையின் அடிப்படையான தவற்றின் விளைவானதே.

பலஸ்தீனப் பிரச்சனையில் அன்று போல் இன்றும் அமெரிக்கா இஸ்ரேலுடன் சேர்ந்து நிற்கிறது. ஆஃப்கானிஸ்தானை ஆக்கிரமித்துள்ளது. ஈராக்கில் ஒரு கொடிய போரை நடத்தி ஆக்கிரமித்து அதன் மக்களைத் துன்புறுத்தி வருகிறது. அமெரிக்கப் படையினரின் துர்நடத்தையும் முஸ்லிம்கள் மீதான துவேஷமும் அமெரிக்க ஆட்சியாளர்களின் மனநிலையின் வெளிப்பாடுகள் என்றே உலக முஸ்லிம்கள் எண்ணுகின்றனர்.

அமெரிக்காவின் எந்த ஆக்கிரமிப்பிலும் பங்கு கொள்ள வேண்டிய கட்டாயம் பிரித்தானிய ஆட்சியாளர்கட்கு இருந்தாதகக் கூற முடியாது. உலக அரசியலில் அமெரிக்கா என்ற தனிப் பெரும் வல்லரசின் மிக நெருங்கிய கூட்டாளியாக பிரி த்தானியாவை மாற்றுவதில் பிரித்தானிய ஆட்சியாளர்கள் கடந்த கால் நூற்றாண்டுக்காலமாக மிகுந்த அக்கறை காட்டி வந்துள்ளனர்.

எனவே அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்நோக்கும் எந்த அராபியரும் முஸ்லிமும் பிரித்தானியாவை அமெரிக்காவின் ஒரு பகுதியாகவே நோக்குகிற சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது. பிரித்தானிய மக்களின் ஏகோபித்த எதிர்ப்பின் நடுவேதான் பிரித்தானிய அரசாங்கம் அமெரிக்காவின் ஈராக் போரில் தன்னையும் பங்காளியாக்கிக் கொண்டது. இன்றும் பெரும்பாலான பிரித்தானியாவின் மக்கள் பிரித்தானியப் படைகள் ஈராக்கிலிருந்து வெளியேறுவதையே விரும்புகின்றனர். எனவேதான் லண்டன் குண்டு வெடிப்பின் விளைவுகள் ஆக்கிரமிப்புப் போர்கட்கு எதிரான சக்திகளைப் பலவீனப்படுத்துகின்றன.

குண்டு வெடிப்பைக் காரணங்காட்டி ஆட்சியாளர்கள் புதிய அடக்குமுறைச் சட்டங்களைப் புகுத்தவும் இதுவரை கடும் எதிர்ப்புக்குட்பட்ட கட்டாய அடையாள அட்டை முறையொன்றை அறிமுகப்படுத்தவும் வசதி ஏற்பட்டுள்ளதையிட்டு பிரித்தானிய ஜனநாயகவாதிகளும் முற்போக்காளர்களும் கவலை தெரிவித்துள்ளனர்.

எந்த அடக்குமுறைச் சட்டமும் அடையாள அட்டையும் தற்கொலைத் தாக்குதல்கட்கெதிரான உத்தரவாதமல்ல என்பது இஸ்ரேலிய அடக்குமுறையாளர்களின் அனுபவங்களிலிருந்து விளங்கும். அந்த நடவடிக்கைகளின் நோக்கம் பொது மக்கள் மீது அரசாங்கத்தின் பிடியையும் அரசாங்கத்திற்கு எதிரான ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் உட்பட்ட எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் மீது கண்காணிப்பையும் வலுப்படுத்துவதாகும்.

குண்டுவெடிப்புக்களின் பாடங்களைச் சரிவர உணராததாலேயே பிரித்தானிய ஆட்சியாளர்கள் பிரச்சனையின் அடிப்படையைப் பற்றிச் சிந்திக்காமல் பாதுகாப்பு நடவடிக்கைகள் என்ற பேரில் அடக்குமுறையை வலுப்படுத்த முன்னிற்கிறார்கள். இது சிரங்குக்கு மருந்து பூசாமல் சொறிந்து சொறிந்து அதை மோசமாக்குகிற காரியமாகும்.

பிரித்தானியாவின் ஜனநாயக முற்போக்குச் சக்திகள் பிரித்தானிய ஆட்சியாளர்களின் இத் தவறான போக்கைத் திருத்தக் கடுமையான முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும். அல்லாமற் போனால் பிரித்தானியா ஒரு அடக்குமுறை ஆட்சிக்கும் பலவாறான தீவிரவாதிகட்குமிடையிலான போர்க்களமாக மாற நீண்ட காலம் எடுக்காது.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை
# புதிய பூமி
புதிய பூமி Puthiya Poomi
சுற்று12 ஒகஸ்ற் 2005 பக்கம்12 விலை 12/- சுழற்சி 82

## சேது சமுத்திரத் திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கம்

சேதுசமுத்திரத்திட்டத்தின் மூலம் இலங்கைக்கு ஏற்படவுள்ள பாதிப்புகளினால் அதனை இந்தியா கைவிடவேண்டும் என்பதை வற்புறுத்தி மக்கள் போராட்ட இயக்கங்களை முன்னெடுப்பதற்காக சேதுசமுத்திரத் திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கம் கடந்த யூன் மாதம் 25 ஆம் திகதி அமைக்கப்பட்டது. யூலை 2 ஆம் திகதி அத்திட்டத்தை எதிர்த்து கொழும்பு நகரில் சுவரொட்டி இயக்கம் நடாத்தப்பட்டது. இம் மாதம் 15 ஆம் திகதி கொழும்பில் இந்திய தூதரகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டமொன்றை நடத்துவதற்கு மேற்படி மக்கள் இயக்கம் தீர்மானித்துள்ளது. இவ் இயக்கத்திற்கு மக்கள் ஆதரவை மேற்படி இயக்கம் கோரியுள்ளது.

## அனைத்துக் கொலைகளும் உடன் நிறுத்தப்பட வேண்டும் யுத்த நிறுத்தம் முறையாகப் பேணப்படுவது அவசியம்

புரிந்துணர்வு யுத்த ஒப்பந்தம் நிறுத்தம் ஏற்பட்டு மூன்றரை வருடங்களாகின்றன. இதன் மூலம் வடக்கு கிழக்கிலும் ஏனைய பிரதேசங்களிலும் மக்கள் ஓரளவுக்கு நிம்மதியாகத் தமது அன்றாட வாழ்வை முன்னெடுக்க முடிந்தது. ஆனாலும் கடந்த ஒன்றரை வருடமாக கிழக்கு மாகாணத்தில் நிலைமை நாளுக்கு நாள் மோசமடைந்தே வந்திருக்கிறது. கருணா தலைமையிலான குழுவினர் விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து வெளியேறியதும் அதன் மூலம் மோதல் வெடித்தது. இரு தரப்பிலும் பழிவாங்கும் தாக்குதல்கள் தொடரச் செய்தன. புலிகள் இயக்கத்தினுள் ஏற்பட்ட பிளவைப் பயன்படுத்துவதில் பேரினவாதிகளும் அரசாங்கமும் இந்திய ஆளும் வர்க்கத்தினரும் ஏனைய தமிழ் இயக்கங்களும் மும்மரமாகிக் கொண்டன. தத்தமது வசதிக்கேற்றவாறு கிழக்கு மாகாணத்தைப் பயன்படுத்தி புலிகள் இயக்கத்தைப் பலவீனப்படுத்தி விடுவதில் வேகம் காட்டினர். அதே வேளை புலிகள் இயக்கமும் கிழக்கில் தனது கட்டுப்பாட்டையும் நிலைப்பையும் உறுதிப்படுத்தும் நிலைப்பாட்டை முன்னெடுத்தது. இந்நிலையில் மாறி மாறிப் பழிவாங்கும் வகையில் கொலைகள் இடம் பெற்று வந்துள்ளன. ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டிக் கொண்டே இனக்காட்டாத அல்லது உரிமை கோராத கொலைகள் புரியப்பட்டு வருகின்றன. இதில் அரசாங்கப்படைகள், தமிழ் குழுக்கள், கருணா அணியினர் விடுதலைப்புலிகள் ஆகிய தரப்பினர் ஈடுபட்டுவருவது உண்மை நிலையாகும். விடிந்தால் ஒன்றோ ஒன்றுக்கு மேற்பட்ட கொலைகள் என்ற செய்தியையே கிழக்கிலிருந்து அறிய முடிகிறது. வடக்கிலும் ஆங்காங்கே இவை நிகழவே செய்கிறது.

இந்நிலையில் திருகோணமலை புத்தர் சிலை வைப்பும், புலிகள் இயக்க பொறுப்பாளர்கள் மீதான தாக்குதல்களும் ராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தின் ஊடான புலிகளது பயணத்திற்கு ராணுவப் பாதுகாப்பு வழங்கும் விடயத்திலும் இருதரப்பிற்கும் முறுகல் நிலை முற்றியது. கிழக்கிலிருந்த தமது அரசியல் அலுவலகங்களை மூடி புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு மீண்டனர். இதனால் யுத்த நிறுத்தம் முறிவடைந்து விடுமோ என மக்கள் அச்சம் கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது. வடக்கு கிழக்கிலும் தெற்கிலும் மீண்டும் ஒரு யுத்தம் வெடிப்பதை சாதாரண மக்கள் எவருமே விரும்பவில்லை ஜே. வி. பி- ஜாதிக ஹெல உறுமயப் பேரினவாத வெறியர்கள் விரும்பலாம். ஆனால் அவை மக்களின் விருப்பமல்ல. மக்கள் சமாதானத்தையே விரும்புகிறார்கள்.



இந்திய அரசே சேது சமுத்திரத் திட்டத்தை உடனே நிறுத்து எனக் கோரி மன்னார் மீனவர்கள் யூலை 19ம் திகதி மன்னாரில் நடத்திய ஆர்ப்பாட்ட பேரணி. மன்னார் மீனவர் சங்கங்களின் சமாஜம் இதனை ஏனற்பாடு செய்தது.

எனவே ஜனாதிபதி சந்திரிகாபண்டாரநாயக்கா குமரதுங்கா ஜே.வி.பியின்மிரட்டலுக்குப் பணிந்து போகாது பொதுக்கட்டமைப்பில் இணங்கியது போன்று எத்தகைய தாமதம் இழுத்தடிப்பு இன்றி தற்போதைய முறுகல் நிலைக்கு தீர்வு காண முன்வரல் வேண்டும். அரசாங்கமும் புலிகள் இயக்கமும் நேரடியாகப் பேச முன வரல் வேண்டும். யுத்தம் ஒன்று வெடிப்பதற்கான இடைவெளியை ஏற்படுத்தாது யுத்த நிறுத்தத்தை முறையாகப் பேணிக் கொள்ளும் வழிவகைகளை உடன் தேடவேண்டும். இதில் ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் இருக்கும் பொறுப்பு அதிகமானதாகும். உள்நாட்டு வெளிநாட்டு யுத்த விருப்பிகளின் ஆலோசனைகளுக்கு அப்பால் மக்களின் சமாதான விருப்பத்தை கவனத்தில் கொண்டு செயற்படுவதே இன்றைய தேவையாகும். ஜனாதிபதித் தேர்தல் பொதுத் தேர்தல் ஆட்சி அதிகாரப் பசி என்பனவற்றுக்கு அப்பால் உடன் பேச்சுவார்த்தைக்கும் இணக்கப்பாட்டிற்கும் வரவேண்டும் இன்றைய பிரதான பிரச்சினை தற்போது எழுந்துள்ள முறுகல் நிலை யேயாகும். இதில் ஜனாதிபதி அரசாங்கம் எதிர்க்கட்சியினர் இணைந்த செயற்பாட்டையும் முன்முயற்சி களையும் எடுத்தல் வேண்டும்.

## இந்திய அழுத்தம் காரணமாக தீர்வை குறைப்பு

பொதிகள் தயாரிக்கும் தொழிலுக்கு தேவைப்படும் மூலப் பொருகளின் இறக்கு மதிக்கான தீர்வையை (15) பதினைந்து வீதத்திலிருந்து இரண்டரை (21/2) வீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் நிர்ப்பந்தங்காரணமாகவே இந்த தீர்வைக்குறைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் காரணமாக இங்கு இரண்டாயிரத்திலிருந்து மூவாயிரம் தொழிலாளர்கள் வரை வேலை இழக்க நேரிடும்.

இந்த தீர்வைக் குறைப்பால் இந்தியாவிலிருந்து தரம் குறைந்த பொருகள் தயாரிப்பதற்கான மூலப்பொருள் பெருமளவில் வந்து குவியும். அதை விட அரசுக்கு இருபத்தைந்து 25 கோடிரூபாய் வருமான இழப்பு ஏற்படுவதோடு இருநூறில் இருந்து இருநூற்றைம்பது கோடிரூபாயளவில் முதலீடு செய்துள்ள நிறுவனங்கள் பெரு நெருக்கடியை எதிர்நோக்குகின்றன.

இந்திய -இலங்கை வர்த்தக ஒப்பந்தத்தின் கீழான இந்திய ஆதிக்கத்திற்கு இது ஒரு சிறு உதாரணம். யாவும் மிரட்டியும் உறுட்டியும் செய்யப்படுகிறது. இதை விட இந்திய மேலாதிக்க நடைமுறைக்கு வேறு விளக்கம் தேவை இல்லை.

தொடர்ச்சி 12ம் பக்கம்

### தண்ணீர் தனியார் ............

9ம் பக்க தொடர்ச்சி.

கொச்சபம்பா நகர மக்கள் தன்னுடைய அனுமதியின்றி மழைநீரைக் கூடச் சேகரிக்கக் கூடாது எனக் கட்டளையிட்டது பெக்டெல். இதன் விளைவாக மாத மொன்றுக்கு வெறும் 4,500 ரூபாய் சம்பாதிக்கும் குடும்பம் குடிதண்ணீருக்காக மாதமாதம் 900 ரூபாய் செலவழிக்க வேண்டிய அவல நிலை ஏற்பட்டது. இந்தக் கொள்ளைக்கு எதிராகவும் தண்ணீர் உரிமையைப் பாதுகாக்கவும் அந்நகர மக்கள் பெக்டெல்லை எதிர்த்துப் போராடத் தொடங்கினர். பெக்டெல்லைப் பாதுகாக்க அந்நகரில் இராணுவச் சட்டம் அமல்படுத்தப்பட்டது. எனினும் பெக்டெலுக்கு எதிராக பொலிவியா எங்கும் நடந்த போராட்டங்களின் விளைவாக பெக்டெலுக்கு வழங்கப்பட்ட வியாபார உரிமை ரத்து செய்யப்பட்டது.

ஆப்பிரிக்கக் கண்டத்தைச் சேர்ந்த 9 நாடுகளில் 1998- ஆம் ஆண்டு குடிநீர் வழங்கும் சேவை தனியார் மயமாக்கப்பட்டது. தண்ணீர் கட்டண உயர்வால் அந்நாடுகளைச் சேர்ந்த உழைக்கும் மக்கள் குளங்களிலும் குட்டைகளிலும் தேங்கிக் கிடக்கும் நீரைக் குடிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். இதையடுத்து இந்நாடுகளில் பரவிய காலரா நோய்க்கு 300- க்கும் மேற்பட்டோர் பலியாகினர் 25,000 பேர் பாதிக்கப்பட்டனர்.

ஆசிய கண்டத்தைச் சேர்ந்த பிலிப்பைன்சு நாட்டிலும் தண்ணீர் தனியார்மயமான பிறகு தண்ணீர் கட்டணம் 4முதல்10 மடங்கு வரை உயர்ந்தது. பொதுமக்களுக்குப் பாதுகாப்பான குடி நீர் கிடைக்காததால் காலரா நோய் பரவியது.

எனவே தண்ணீர் தனியார்மயம் என்பது மறுகாலனியாதிக்கத்தின் கோரவடிவம். உணவு இல்லாமல் கூட பல நாட்கள் வாழ்ந்து விட முடியும். ஆனால் தண்ணீர் இல்லாமல் மனிதன் ஓரிரு நாட்கள் கூட வாழ முடியாது. எனவே நாம் உயிர் வாழ வேண்டும் என்றாலே இத் தனியார் மயத்தை எதிர்த்துப் போராடியே தீர வேண்டும்!

நன்றி: புதிய ஜனநாயகம்
யூலை 2005

### மலையகச் சிறுவன் ....

1ம் பக்க தொடர்ச்சி

சிறுவனின் பெற்றோர் மரண விசாரணையின் போது பேச அனுமதிக்கப்பட வில்லை என்றும் அவர்களுக்கு மயக்க மருந்து கொடுக்கப்பட்டிருந்தது என்றும் கூறப்படுகிறது. அவர்கள் சிறுவனின் சடலத்தை வீட்டுக்கு எடுத்துச்செல்ல அனுமதிக்கப்படவில்லை. சிறுவனின் சடலம் கொழுபிலேயே அடக்கம் செய்யப்பட்டுள்ளது.

பெற்றோர்களுக்கு 15 ஆயிரம் ரூபா கொடுக்கப்பட்டுள்ளது. அச்சிறுவனின் மரணம் பற்றி எதை யும் பேசக் கூடாது என்று அவனின் பெற்றோர் பயமுறுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அவர்கள் அவர்களின் சொந்த இடமான வெலிஓயா தோட்டத்துக்கு சென்றவுடன் ஊரவர்களும் உறவினர்களும் அம்மரணம் பற்றி சந்தேகத்தை எழுப்பியுள்ளனர். அதுபற்றி விசாரணை நடத்தும்படி அட்டன் பொலிசாரிடம் ஊரவர்களும் பெற்றோர்களும் கேட்டபோது 16 வயதடையாத சிறுவனை வேலைக்கு அனுப்பியது பெற்றோர்களின் குற்றம். அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டிவருமென பொலிஸ் அதிகாரிகள் கூறியுள்ளனர். இதனையடுத்து பொலிஸ் தலைமையகத்திற்கு முறைப்பாடு செய்யபட்டுள்ளது.

தமிழர்கள் பற்றியும் மலையகத்தமிழர் பற்றியும் கதைக்கும் தமிழ் எம்.பிக்கள் அச்சிறுவனின் மரணம்பற்றி மௌனம் சாதிக்கின்றனர். தேர்தல் வாக்குகள் பற்றி மட்டுமே சிந்திக்கும் அவர்களுக்கு தோட்டத்தொழிலாளர்கள் வேண்டத்தகாதவர்களாகவே இருப்பர். தேர்தல் வந்தால் மட்டும் அவர்களின் வாக்குகள் தேவையானதாகும்.

சிறுவன் லோகநாதனின் மரணம் எப்படி ஏற்பட்டது என்பது பற்றி ஆராயப்பட வேண்டும் குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். குற்றவாளிகளுக்கு துணைபோன அதிகாரிகளும் தண்டிக்கப்பட வேண்டும்.

தோட்டப்புறங்களிலிருந்து வீட்டு வேலைகளுக்குச் சென்ற பல சிறுவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். பலர் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டுள்ளனர் பலர் பாலியல் சுரண்டலுக்குட்படுத்தப்பட்டுள்ளனர். அவ்வாறான சம்பவங்கள் தொடர்கதையாகின்றன. இவற்றை தடுத்து மலையக சிறார்களை பாதுகாக்க நடவடிக்கைகள் எடுக்கப் பட வேண்டும். சிறார்களை வேலைகளுக்கு அனுப்புவதில்லை என்ற தீர்மானத்தை மலையகப் பெற்றோர்கள் எடுக்கவேண்டும். சிறுவர் துஷ் பிரயோகம் பற்றி வாய் கிழியப் பேசும் அரசாங்க அதிகாரிகளும் சரி அரச சார்பற்ற நிறுவனங்களும் சரி மலையகச் சிறார்களுக்கு நீதி கிடைக்க என்ன செய்யப் போகிறார்கள்.

### பேரினவாத வெறித.........

1ம் பக்க தொடர்ச்சி

எதிராகவே விஷம் கக்கி வருகின்றன.

இத்தகைய பேரினவாதிகளின் பின்னால் அமெரிக்க இந்தியக் கரங்கள் நிறையவே தத்தமது கைங்கரியங்களைக் காட்டி வருகின்றன. பொதுக்கட்டமைப்பை வழங்குங்கள் அதுவே சமாதானப் பேச்சுக்கு முன்னோடியாக அமையும் என்றெல்லாம் குரல் வைத்து வந்த அமெரிக்கா பொதுக்கட்டமைப்பு கையொப்பமிடப்பட்ட பின்பு அதற்கு தன்னால் நிதி வழங்க முடியாது என அறிவித்துக் கொண்டது. இதனை ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

அமெரிக்காவைத் தொடர்ந்து பிரித்தானியாவும் பின்வாங்கிக் கொண்டதுடன் யப்பானும் தனது தொனியை தளர்த்திக் கொள்கிறது. நாம் ஏற்கனவே அமெரிக்க மேற்குலக யப்பானிய சக்திகளிடம் நம்பிக்கை வைக்கும் அபாயத்தைப் பற்றிச் சுட்டிக்காட்டி வந்தோம். அதனை கவனத்திற்கு எடுக்காது அவர்களை நம்பியது மட்டுமன்றி உதவபவர்களாகவும் இரட்சகர்களாகவும் சில தமிழர் தரப்பு சக்திகள் நம்பிக் கொண்டதை இவ் வேளை நினைவூட்ட வேண்டும். அமெரிக்க மேற்குலக சக்திகள் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திற்கோ விடுதலைக்கோ உதவபவர்கள் அல்லர். தத்தமது ஏகாதிபத்திய நவகொலனித்துவ பொருளாதார ராணுவ ஆதிக்கத்திற்கான பயன்படுத்தும் அரசியலாகவே தேசிய இனப்பிரச்சினையை அவர்கள் முன்னெடுத்தனர் என்பதை இப்போதாவது உண்மையான விடுதலை வேண்டுவோர் உணர்வது அவசியம்.

மறுபுறத்தில் இந்தியா பொதுக்கட்டமைப்பிற்கு எதிர்ப்பு இல்லை என ஒப்புக்கு கூறி விட்டு தனது நரித்தன ராஜதந்திரத்தை பயன்படுத்தி வருகிறது. பொதுக்கட்டமைப்புக்கு எதிராக முஸ்லீம் மக்களின் எதிர்ப்பை உசுப்பி விட்டதில் இந்தியக் கரங்களின் பங்கு முக்கியமானதாகும். ஏற்கனவே ஜே. வி.பி ஜாதிக ஹெல உறுமய கட்சிகளுக்கு ஆலோசனைகளும் அன்பளிப்புகளும் வழங்கி வரும் இந்திய ஆளும் தரப்பு பொதுக்கட்டமைப்பு முடக்கம் பெறுவதற்கு பின்னணியில் இருந்து வருவது எழுத்தில் பேச்சில் வராத பரகசியமாகும்.

இவற்றுக்கும் அப்பால் தற்போதைய அமெரிக்க இந்திய நெருக்கம் கவனத்திற்குரியதாகும். கடந்த மாதம் இந்திய- அமெரிக்க பாதுகாப்பு ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டதும் அண்மைய இந்தியப் பிரதமரின் அமெரிக்கப் பயணமும் ஊன்றிக்கவனிக்க வேண்டியதாகும். அத்துடன் புலிகள் இயக்கம் நேபாள மாவோஸ்டுகளுக்கும் இந்திய மாவோஸ்டுக்களுக்கும் அசாம் விடுதலை இயக்கத்திற்கும் பயிற்சி அளித்து வருவதாக அண்மையில் அமெரிக்காவிலிருந்து வெளிவந்துள்ள செய்தி தற்செயலான ஒன்றல்ல என்பதையும் கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

இவை அனைத்தையும் உற்று நோக்கின் பொதுக்கட்டமைப்புக்கான தீவிர எதிர்ப்புகளுக்கும் அதன் முடக்கத்திற்கும் பின்னால் அமெரிக்க இந்தியக் கரங்களின் கூட்டுச் சதி இடம் பெறுகிறதா? என்றே சிந்திக்க வைக்கிறது.

### ரணில் அடுத்த ஜனாதிபதி......

1ம் பக்க தொடர்ச்சி..

இதே ஜனநாயக சங்கம் இலங்கையில் இவ் வருட முடிவில் ஜனாதிபதித் தேர்தல் நடாத்தப்பட வேண்டும் என வலியுறுத்தல் தீர்மானத்தையும் வெளியிட்டு உள்ளது.

இவற்றை அவதானிக்கும் போது ரணில் விக்கிரமசிங்காவை அடுத்த ஜனாதிபதியாக்கும் அமெரிக்காவின் வழி காட்டலுக்கான காய் நகர்த்தல்கள் ஆரம்பமாகி விட்டதை உறுதிப்படுத்த முடிகின்றது. நமது நாட்டின் தலைவிதி வாஷிங்டனிலும் புதுடில்லியிலும் தான் தீர்மானிக்கப்படுகிறது என்று நாம் சுட்டிக்காட்டினால் “இது இவர்களது வழமையான கூற்று” “மிகைப்படுத்தப்பட்ட கறபனை” என்றெல்லாம் அசட்டையாகக் கூறி வருவோர் இப்போதாவது கண்களைத் திறந்து பார்ப்பது அவசியம். மறுபுறத்தில் தற்போதைய பிரதமர் மகிந்த ராஜபக்ஷ் விரைவில் புதுடில்லிக்குச் சென்று திரும்பிய பின்பு தனது ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் பிரச்சாரத்தைத் தொடங்கப் போவதாகக் கூறி இருக்கிறார்.

நாட்டு மக்கள் வாக்குகள் போடுவதற்கு மட்டுமே. யார் அடுத்த ஜனாதிபதி என்பதை அமெரிக்காவே தீர்மானித்து அதற்குரிய காய்களை நகர்த்த ஆரம்பித்து விட்டதையே காண முடிகின்றது. இந்த நாடு எங்கே செல்கிறது என்பதை மக்கள் இனி மேலும் உணராது விட்டால் எதிர்காலமே இருள் சூழ்ந்ததாகி விடும் என்பதில் ஐயமில்லை.

வெளியிடுபவர்: இ.தம்பையா, இல. 47, 3 மடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு: கொம்பிரின்ட், 334A,K.சிறில் சி.பெரரேரா மாவத்தை, கொழும்பு 13.